கைப்பற்றியது
இலங்கை



பக்கம் 18


# உதயன்

சுடர்: 29 கதிர்: 266 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 3, செவ்வாய் 19.08.2014

stay connected with: uthayan.print uthayanprint

Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=


தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுக்கம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# ஐ.நா. விசாரணைக்கு சாட்சிகள் திரட்டப்படுகின்றன இரகசியமாக

## காணாமற்போனோரின் உறவினர்களுக்கான கலந்துரையாடலில் பதிவு செய்யும் கருவிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்கிறார் ஜி.எல்.பீரிஸ்



கொழும்பு, ஓக. 19
சர்வதேச விசாரணைக்கான சாட்சிகள் சந்தேகத்துக்குரிய முறைகள் மூலம் திரட்டப்படுகின்றன. காணாமற்போனோரின் உறவினர்கள் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு அண்மையில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில், பதிவு செய்யும் கருவிகள் இரகசியமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன - இவ்வாறு பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நியமித்துள்ள விசாரணைக் குழுவினர் நடத்தும் விசாரணைகளுக்கு சந்தேகத்துக்குரிய முறைகள் மூலம் சாட்சியங்கள் திரட்டப்பட்டு ஜெனிவாவுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. அதன் ஒரு கட்டமே கொழும்பில் நடத்தப்பட்ட காணாமற்போனோரின் உறவினர்களுக்கான கலந்துரையாடல். தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் பணத்தின் மூலம், நாட்டுக்கு எதிராகச் சதித் திட்டம் தீட்டப்

22 ஆம் பக்கம் பார்க்க

### நீதியை பரிகசிக்கும் செயற்பாடே ஐ.நா. விசாரணையாம்

கொழும்பு, ஓக. 19
இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் நீதியைப் பரிகாசம் செய்யும் செயற்பாடே என்று கடுமையாகச் சாடியுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அதன் காரணமாகவே அந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை ஒத்துழைப்பை வழங்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.
பாதுகாப்பு அமைச்சால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் கருத்தரங்கு கொழும்பில் நேற்று ஆரம்பமாகியது. அதன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் விசாரணைக்காக ஆதாரங்கள் இரகசியமாக சேகரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் அப்பாவிப் பொதுமக்களுக்கு பணம் வழங்கப்பட்டு அவர்கள் ஐ.நா. விசாரணைக்குழு முன்பாக சாட்சியமளிக்க ஊக்கமளிக்கப்படுகின்றது.
மனித உரிமை விவகாரம் குறித்து சில நாடுகள் கொடுத்து வரும் அழுத்தமே இலங்கை எதிர்கொள்ளும் மிகப் பெரும் சவாலாகவுள்ளது. எனினும் அரசு சர்வதேச சமூகத்திடமிருந்து தன்னை தனிமைப்படுத்த முயலவில்லை"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

## தமிழருக்கெதிரான வன்முறைகளை ஆரம்பம் முதல் விசாரணை செய்க

### வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஐ.நா விடம் கூட்டாகக் கோரிக்கை


யாழ்ப்பாணம், ஓக. 19
கடந்த காலத்தில் இலங்கையில் தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் பற்றி முழுமையான விசாரணை மேற்கொள்வதன் ஊடாகவே, இங்கு நடந்து கொண்டிருப்பது இனப்படுகொலையா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியும். எனவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபை, 1974 ஆம் ஆண்டிலிருந்து தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளிலிருந்து விசாரணை செய்ய வேண்டும் - இவ்வாறு கூட்டாகக் கோரிக்கை விடுத் துள்ளனர் வடக்கு - கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு - கிழக்கு மாகாண

22 ஆம் பக்கம் பார்க்க

### முதலமைச்சர், அவைத் தலைவர் கையெழுத்தில்லை

யாழ்ப்பாணம், ஓக. 19
இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணையை விரிவுபடுத்த வேண்டும் என்று வடக்கு - கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் இணைந்து விடுத்துள்ள கோரிக்கை கடிதத்தில் வடக்கு மாகாண முதலமைச்சரும், அவைத் தலைவரும் கையொப்ப

22 ஆம் பக்கம்பார்க்க



வாழைச்சேனைப் பிரதேசத்தில் இருந்து நேற்றுமுன்தினம் ஆழ்கடலுக்குச் சென்ற மீனவர்களின் வலையில் 950 கிலோ எடையுடைய கொடிச்சுறா ஒன்று சிக்கியுள்ளது. இந்த வகை மீனை கருவாட்டுக்குப் பயன்படுத்த முடியும் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

## குழுக்கள் மோதல் பொலிஸுக்கு அடி

யாழ்ப்பாணம், ஓக.19
இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலை சமரசப்படுத்தச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்தியவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
யாழ். பண்ணைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு மதுபோதையில் மோதிக் கொண்டவீதித் திருத்தப் பணிகளுக்காக வந்திருந்தவர்களிடையே சமரசம் செய்ய முற்பட்ட

22 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை நாடாளுமன்றில் உரை நிகழ்த்துவார் மோடி

கொழும்பு, ஓக.19
அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார் என்று தெரிவித்துள்ளார் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி.
இலங்கைக்கு அடுத்த மாதம் வருகை தரவுள்ள ஜப்பானிய பிரதமர் சின்ஹிஷி அபே, பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். அடுத்த மாதம் 9 ஆம் திகதி அவர் நாடாளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்தவுள்ளார். இதனைத் தொடர்ந்து இலங்கை வருகை தரவுள்ள சீன ஜனாதிபதியும் நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார். அடுத்த மாதம் 18 ஆம்

22 ஆம் பக்கம் பார்க்க

## பேரவை நியமனம்: யாழ். பல்கலை சமூகத்தின் கோரிக்கை நடவடிக்கைக்காக உயர்கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைப்பு

### பதில் அனுப்பினார் ஜனாதிபதியின் செயலர்

யாழ்ப்பாணம், ஓக.19
யாழ்.பல்கலைக் கழக பேரவை நியமனத்தில் தகுதியானவர்களை நியமிக்குமாறு மூன்று தொழிற்சங்கள் விடுத்திருந்த கோரிக்கை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக உயர் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று ஜனாதிபதியின் செயலாளர் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்குப் பதில்வழங்கியுள்ளார்.
யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கம், யாழ்.பல்கலை விஞ்ஞான ஆசிரியர் சங்கம் மற்றும் யாழ்.பல்கலைக் கல்விசாரா ஊழியர் சங்கம் ஆகிய மூன்று தொழிற்சங்கங்களும் கூட்டாக ஜனாதிபதி மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஆகியோருக்கு கடந்த மாதம் 23 ஆம் திகதி இந்த அறிக்கையை அனுப்பி வைத்திருந்தன. அதற்கு ஜனாதிபதியின் செயலரால் நேற்றுப் பதில் அனுப்பப்பட்டுள்ளது.

22 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கையைத் தண்டிக்கவே முயற்சிக்கிறது ஐ.நா. சபை

## குற்றஞ்சாட்டுகின்றார் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர்



கொழும்பு, ஓக.19

ஜக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு இலங்கையை தண்டிக்கும் நோக்கத்துடனேயே செயற்படுகிறது என்று குற்றம்சாட்டியுள்ள அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம், போரின் இறுதிக் கட்டங்களில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பாக அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையே முரண்பாடுகள் காணப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

''நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உள்நாட்டிலேயே நாம் ஆரம்பித்துள்ளோம். எமக்குப் பொருத்தமான வேகத்தில் அதனை முன்னெடுக்கிறோம். உள்ளூர் நடவடிக்கைகள் முழுமை பெறுவதற்கு முன்னர் அதற்கான கால அவகாசத்தை வழங்காமல் ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவது என்பது சர்வதேச சட்டங்களுக்கு எதிரானதாகும்.''- என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"இலங்கை மக்களுக்கு விருப்பமில்லாத செயற்பாடுகளில் அரசை ஈடுபடுத்துவதற்காக அதன் மீது அழுத்தங்களை கொடுக்கும் நோக்குடனான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அதன் காரணமாகவே நாங்கள் சர்வதேசத் தலையீடுகளை எதிர்க்கிறோம்.

இலங்கையில் மனித உரிமை நெருக்கடியோ அல்லது உலகின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான பாதுகாப்பு நிலவரமோ காணப்படவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் ஏன் உலகின் கவனம் பெருமளவுக்கு அந்த நாட்டின் மீது காணப்படுகின்றது என்று நாங்கள் ஆச்சரியமடைந்துள்ளோம்.

விடுதலைப் புலிகளை தோற்கடித்ததற்கு பழிவாங்குவதற்காக வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் செயற்பாடாக இது இருக்கும் என்று சில இலங்கையர்கள் சந்தேகமடைந்துள்ளனர்.

இலங்கை, நிலைமையை சுமுகமாக்கக் கூடிய நீதி நிலைநாட்டப்படுவதையே விரும்புகிறது. தண்டனை வழங்கும் நோக்கிலான நீதியை அது விரும்பவில்லை, ஆனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் நோக்கம் இதுவாகவேயுள்ளது. விசாரணைக்காக அமைக்கப்பட்ட குழு கூட ஐ.நாவால் வழங்கப்பட்ட ஆணைக்கு மாறானதாக உள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## குருக்கள்மடம் புதைகுழி அகழ்வுப் பணி ஒத்திவைப்பு



கொழும்பு, ஓக.19

மட்டக்களப்பு - குருக்கள்மடம் பகுதியில் உள்ளது என்று கூறப்படும் மனிதப் புதைகுழியை தோண்டும் பணிகள் மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கை நேற்று நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அந்த நடவடிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 24 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று களுவாஞ்சிகுடி பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் உட்பட சம்பந்தப்பட்ட பிரிவுகளால் கோரப்பட்ட கால அவகாசத்தை ஏற்றுக் கொண்டு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற நீதிபதி அதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

ஏற்கனவே கடந்த ஜூலை மாதம் குறித்த புதைகுழி தோண்டப்படவிருந்த போதிலும், ஒரு முறைப்பாடு மாத்திரமே தமக்கு கிடைத்துள்ளது என்று காத்தான்குடி நீதிமன்றத்துக்கு களுவாஞ்சிக்குடி பொலிஸார் கடந்த ஜூலை முதலாம் திகதி அறிவித்ததை அடுத்து அந்த பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

எனினும் காணாமல் போனோர் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு இந்த புதைகுழி தொடர்பில் 100க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனையடுத்து இப்புதைகுழி நேற்றுத் தோண்டப்படவிருந்தது. (ற)

## ஐ.நாவின் பெயரைக் கூறி மோசடி செய்தவர் கைது

கொழும்பு, ஓக.19

ஜக்கிய நாடுகள் அமைப்பின் கொழும்புக் கிளையின் பெயரைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவரைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

ஜக்கிய நாடுகள் அமைப்பின் கொழும்பு கிளைக் காரியாலயத்தில் சாரதி பணியை பெற்றுத் தருவதாகவும், குறைந்த விலையில் வாகனம் மற்றும் மடிக்கணினி என்பவற்றைப் பெற்றுக் கொடுப்பதாகவும் தெரிவித்து பல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களை சந்தேகநபர் ஏமாற்றியுள்ளார். சுமார் 90 லட்சம் ரூபா பணமும் மோசடி செய்யப்பட்டுள்ளது.

அதையடுத்து குறித்த நபரைக் கைது செய்யும் நடவடிக்கையை நாரஹேன்பிட்டி பொலிஸார் முன்னெடுத்தனர். குறைந்த விலைக்கு மடிக்கணினி ஒன்றை கொள்வனவு செய்யும் போர்வையில் குறித்த நபரை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

ஒரு லட்ச ரூபா பெறுமதியான மடிக்கணினிகளை 15 ஆயிரம் ரூபாவுக்குப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து பலரை சந்தேக நபர் ஏமாற்றியுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் வியாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், மோசடியில் பாதிக்கப்பட்ட பலர் முறைப்பாடு செய்து வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## நல்லூர் நாடகத் திருவிழாவில் சண்முகலிங்கத்தின் நாடகங்கள்

யாழ்ப்பாணம், ஓக.19

நல்லூர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு புதிய வடிவிலான திறந்த வெளி அரங்கில் செயல்திறன் அரங்க இயக்கம் நடத்துகின்ற நாடகத் திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் இருபதாம் திகதி நடைபெறவுள்ளது. அதில் ஈழத்தின் முன்னோடி நாடக எழுத்தாளரான குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'கூடிவிளையாடு பாப்பா' மற்றும் 'ஒற்றுமையின்' சின்னம் ஆகிய சிறுவர் நாடகங்கள் தே.தேவானந்தின் நெறியாள்கையில் மேடையேறவுள்ளன.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர்-திருமதி உஷா சுபாலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

செயல்திறன் அரங்க இயக்கம் நடத்துகின்ற இரண்டாவது நாடகத் திருவிழா கடந்த 12ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

சிறுவர்களின் உள ஆரோக்கியத்தை முதன்மைப்படுத்தியதான சிறுவர் நாடகங்கள் அதில் மேடையேற்றப்படுகின்றன.

நல்லூர் குறுக்கு வீதி மற்றும் கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்தள்ள நாச்சிமார் கோவில் ஆகியவற்றுக்கு அருகில் அமைந்துள்ள பாணன் குளத்தடியில் இந்த நிகழ்வு தினமும் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகின்றது. (ற)

## அதிக மின் கட்டணம்; இலங்கை 2ஆம் இடம்

கொழும்பு, ஓக.19

உலகில் மிகவும் அதிக மின்சாரக் கட்டணம் அறவீடு செய்யும் நாடுகளின் வரிசையில் இலங்கை இரண்டாம் இடத்தை வகிக்கின்றது என்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீட விரிவுரையாளர் சிரிமல் அபேரட்ன தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், மலேசியா, இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளை விடவும் இலங்கையில் மின்சாரக் கட்டணம் மிகவும் அதிகம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தாலியைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இலங்கையை விடவும் மின்சாரக் கட்டணங்கள் உயர்வாக அறவீடு செய்யப்படுவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளதுடன், ஆசியாவின் செல்வந்த நாடான சிங்கப்பூர், இரண்டாவது செல்வந்த நாடான ஜப்பான் ஆகியனவற்றில் செலவு மிக்க மின்சார உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கட்டணங்கள் குறைவாகவே அறவீடு செய்யப்படுகின்றன என்று குறிப்பிட்டார். (ற)













அளவெட்டி மேற்கு ஸ்ரீ நாகவரத நாராயண ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் திருவிழாவில் கலந்துகொண்டு இறைவன் அருள் வேண்டினர். (ற-86)

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 03 செவ்வாய்க்கிழமை (19.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 266


# அரசின் புனர்வாழ்வு பொறிமுறைகள் திருப்தியின்மையால் தற்கொலைகள்

## போரின் பின் யாழ்ப்பாணத்தில் வெகுவாக அதிகரிப்பு
## உளவியல் பேராசிரியர் தயா சோமசுந்தரம் விசனம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 19

**போரின் பின்னர் யாழ்ப்பாணத்தில் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ள் யாழ். பல்கலைக்கழக உளவியல்துறை பேராசிரியர் தயா சோமசுந்தரம், அதற்கு அரசின் புனர்வாழ்வு பொறிமுறைகள் திருப்தியளிக்கவில்லை என்றும், உரிய திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் தற்கொலைகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவித்திருப்பதாவது:-

நான்காம் கட்டப் போர் நடைபெற்ற 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சம் பேரில் 23 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகத் தெரியவந்தது. ஆனால் போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஒரு லட்சம் பேரில் 25 பேர் தற்கொலை செய்து கொண்டதாகவும் 2013 ஆம் ஆண்டு அது மேலும் அதிகரித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

போர் இடம்பெற்ற காலத்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வாள் வெட்டுக் குழுவுடன் தொடர்புள்ள இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக 19

மானிப்பாயில் வாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் ஒரு குழுவினர் கைது செய்யப்பட்ட நிலையில் அந்தக் குழுவுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மானிப்பாயைச் சேர்ந்த மேலும் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலி

(22 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் மோதியதில் சிறுவன் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக 19

நடந்து சென்ற சிறுவன் மீது பஸ் மோதியதில் சிறுவன் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய [illegible]லையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்கு அருகாமையில் நேற்று திங்கட்கிழமை மாலை இந்த விபத்து

(22 ஆம் பக்கம் பார்க்க)

## படகுகளை மீள எடுத்தமை குறித்து இன்று விசாரணை

### முல்லைத்தீவு அரச அதிபர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

கொக்கிளாய் மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழங்கிய படகுகளைப் பாசிக் நிறுவனம் மீளெடுத்த விவகாரம் தொடர்பில், இன்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் பணிப்புக்கு அமைய விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொக்கிளாய் மக்களுடன், முல்லைத்தீவுக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் மற்றும் பாசிக் நிறுவன அதிகாரிகள் இந்த விசாரணையில் பங்கெடுக்கவுள்ளனர்.

பாசிக் நிறுவனத்தினால் 2012 ஆம், 2013 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் கொக்கிளா

(22 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸில் சிப்பாய் தொந்தரவு

யாழ்ப்பாணம், ஓக 19

அரச பஸ்ஸில் மிதிபலகையில் நின்றவாறு பயணித்த சிவில் உடை தரித்தவர்களுக்கும் பஸ் சாரதிக்கும் இடையே கைதடியில் நேற்றுக் காலை முறுகல் இடம்பெற்றமையால்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தம்பாட்டியில் 320 குடும்பங்களுக்கு மாகாண சபை குடிதண்ணீர் வழங்கல்

### கடும் வறட்சியை அடுத்து நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஓக 19

தற்பொழுது வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் வறட்சி காரணமாக குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையில், முதல் நடவையாக இரண்டு பவுசர்களில் 7 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் ஊர்காவற்றுறை தம்பாட்டி கிராமத்திலுள்ள 320 குடும்பங்களுக்கு வடக்கு

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் பொலிஸ் அதிகாரம் கோருவதாலேயே பிரச்சினை

### இந்திய மனித உரிமை ஆர்வலர் அவ்டாஸ் கௌஷல் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 19

13 ஆவது திருத்தச் சட்டத்தினூடான மாகாண சபை அதிகாரங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ள இந்திய மனித உரிமை ஆர்வலர் அவ்டாஸ் கௌஷல், தமிழர் தரப்பு பொலிஸ் அதிகாரத்தைக் கோருவதனாலேயே மாகாண சபை முறைமையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கும் குழுவில் நியமிக்கப்படவுள்ள, இந்திய மனித உரிமை ஆர்வலரான அவ்டாஸ் கெஷலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழர்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளுமாறு நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பரிந்துரை செய்வேன். ஏனென்றால், இலங்கைக்கு மட்டுமன்றி, முழு தெற்காசியாவுக்குமே அமைதி முக்கியமானது. தமிழர்களும் வாக்குகளுக்காகத் துப்பாக்கிரவைகளைக் கைவிட்டு, இலங்கை அரசுடன் பேச்சு நடத்தவேண்டும்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## குடத்தனையில் மினி சூறாவளி; வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஓக 19

மருதங்கேணி, குடத்தனைப் பகுதியில் வீசிய மினி சூறாவளி காற்றினால் 6 வீடு கள் சேதமடைந்துள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தார்.

குறித்த பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## சுவர் இடிந்து நான்கு வயது சிறுவன் சாவு

வவுனியா, ஓக. 19

வீட்டுச் சுவர் இடிந்து விழுந்ததில் அதனுள் அகப்பட்ட நான்கு வயதுச் சிறுவன் உயிரிழந்த சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் ஓமந்தையில் நிகழ்ந்துள்ளது.

ஓமந்தை வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் குடும்பம் ஒன்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## அரச சார்பற்ற நிறுவனங்களால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து

### இராணுவக் கருத்தரங்கில் எச்சரித்தார் ஜயசுந்தர

யாழ்ப்பாணம், ஓக 19

அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் வரையறைகளை மீறிச் செயற்படுவதால், அவை நாட்டுக்கு ஆபத்தாகவே அமையும் என்று நிதி அமைச்சின் செயலாளர் டி.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சின் கருத்தரங்கில் ஆரம்பநாளில் கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச சார்பற்ற நிறுவனங்கள், பாதுகாப்பு அமைச்சின் வரையறைகளை மீறி செய்தியாளர் மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள், பத்திரிகையாளர்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சிறுநீரகங்கள் கடத்தும் மையங்களில் ஒன்றாக இலங்கை

### கூறுகின்றது 'நியூயோர்க் ரைம்ஸ்'

கொழும்பு, ஓக 19

மத்திய கிழக்கு நாடுகளுக்கு சிறுநீரகங்கள் மற்றும் உடல் உறுப்புகளைக் கடத்தும் முக்கிய மையங்களில் ஒன்றாக இலங்கை உள்ளது என 'நியூயோர்க் ரைம்ஸ்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கடத்தலுக்கு இஸ்ரேலைச் சேர்ந்த முன்னாள் காப்புறுதி உத்தியோகத்தரான அவிகாட் சாண்ட்லர் என்பவருக்குத் தொடர்பு இருக்கின்றது எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

ஒபிரா டொறின் என்ற பெண்ணுக்காகச் சிறுநீரகங்களைப் பெற முயற்சித்தபோது பொலிஸாரால் இருவரும் கைது செய்யப்பட்டனர். சிறுநீரகங்களின் கடத்தலுக்காக இஸ்ரேலில்

(22 ஆம் பக்கம் பார்க்க)


அதிரடியாக அபூர்வமான கட்டணக்குறைப்புக்கள்

UK இல் படிக்க உழைக்க IELTS தேவையில்லை. 50000.00 கட்டணக் குறைப்பு ஒருவருக்கு மட்டுமே.

கனடா 3 வருட விசா படிக்க உழைக்க 2 இலட்சம் குறைப்பு.

20.08.2014 வரை மட்டுமே.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்

175, பருத்தித்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090

(51017)(10.6)

# தமிழக மாணவர் மீதான தாக்குதல் வன்மையான கண்டனத்துக்குரியது

## வட மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

தமிழர்களின் விடிவு தொடர்பில் சமரசங்களை மறுத்து தன்னலன்களை வெறுத்து பிறர் இன்புற்றிருக்க போராடுகின்ற தமிழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் து.ரவிகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'புலிப்பார்வை' இசை வெளியீட்டு நிகழ்வில், ஜனநாயக முறையில் தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டிய தமிழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை அதிர்ச்சியைத் தருகின்றது.

இறுதிப்போரின் இறுதிக் கணங்களில் இடம்பெற்ற கொடூரமான சம்பவங்கள் காணொலி மற்றும் ஒளிப்பட பதிவுகளாக வெளிவந்து உலகை உலுக்கிக் கொண்டிருக்கின்றன. அன்று வேடிக்கை பார்த்த உலகின் மனச் சாட்சியை இன்று தட்டி எழுப்பிக் கொண்டிருக்கின்றன.

அதன் விளைவாக எழுந்த தமிழக மாணவர் எழுச்சி தமிழின வரலாற்றின் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். இந்த நிலையில் எண்ணிலடங்காத ஒப்பற்ற தியாகங்களால் கட்டி எழுப்பப்பட்ட தமிழரின் உரிமைப் போராட்டத்தின் நோக்கங்களை சிறுமைப்படுத்தும் வகையிலும், உலகின் மனச் சாட்சியைக் கேள்வி கேட்ட பல உண்மைப் பதிவுகளை செயலிழக்கச் செய்யும் வகையிலான காட்சிகள் 'புலிப்பார்வை' திரைப்பட முன்னோட்டக் காட்சியில் இணைக்கப்பட்டிருந்தமை உலகத் தமிழினத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

தொடர்ந்து திரைப்படத்தின் சிறப்புக் காட்சியை பார்வையிட்ட தமிழக மாணவர்கள் மற்றும் உணர்வாளர்களின் கருத்துக்கள் மூலம் அந்தப் படைப்பு முற்றிலும் தவறான கருத்தியலால் புனையப்பட்டது என்று நிரூபணமாகியுள்ளது.

இவ்வாறான ஒரு சூழ் நிலையில் தவறான கருத்தியலை வெளிப்படுத்தும் படைப்புக்கு எதிராக தமது எதிர்ப்பை ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்திய தமிழக மாணவ தம்பிகள் தாக்கப்பட்டமை, உலகத் தமிழர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. தமிழ் இன உணர்வுடன் செயற்படும் தமிழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

# அனுமதியின்றி அமைக்கப்பட்ட விளம்பரத் தட்டிகள் அகற்றப்பட்டன



யாழ்ப்பாணம், ஓக.19

யாழ். கே.கே.எஸ். வீதியில் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக வீதியோரம் சவர்க்கார உற்பத்தி நிறுவனம் ஒன்றினால் கட்டப்பட்ட விளம்பரத் தட்டிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் வெள்ளிக்கிழமை காலை திடீரென அகற்றப்பட்டன.

குறித்த நிறுவனம் அதிகார சபை யிடம் அனுமதி பெறாது வீதியோரம் நூற்றுக்கணக்கான விளம்பர தட்டிகளை நாட்டி வைத்தது. சபையிடம் அனுமதி பெறப்படாததை அடுத்தே குறித்த விளம்பரத் தட்டிகளில் அனேகமானவை அகற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டன. (வ-17)

# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.19

நவாலி கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் பிரதம குரு சிவத்திரு மா.பத்மநாதனின் சேவையையும், குரு சேவையையும் பாராட்டி ஆலயத் தலைவர் பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளார்.

நவாலி கதிர்காமக் கந்தனின் 14 நாள் திருவிழாவும் - வைரவர் பூசையும் அண்மையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் ஆலய பிரதம குரு மா.பத்மநாதன், பஜனைக் குழுவினர், ஆலயத் தொண்டு செய்தோர், தொடர் சொற்பொழிவு ஆற்றியோர் என 14 பேருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. (ஒ-50)

# ஸ்கந்தாவில் தொழில்நுட்பப் பிரிவு ஆரம்பம்

சுன்னாகம், ஓக.19

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 2016 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பிரிவுக்குரிய தொழில்நுட்பப் பிரிவு, மாகாணக் கல்வித் திணைக்களம், கல்வி அமைச்சு என்பவற்றின் அனுமதியுடன் ஆரம்பமாகியுள்ளது.

பொறியியல் தொழில்நுட்பம், உயிர் தொகுதி தொழில்நுட்பம், விஞ்ஞானத் தொழில்நுட்பம், விவசாயம், தகவல் தொழில்நுட்பம், சித்திரம் போன்ற பாடங்கள் நடைபெறுகின்றன. க.பொ.த. உயர்தரம் கற்கக் கூடிய பெறுபேறு உள்ள மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதாக அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ)

# கிராம மட்ட திட்டங்களுக்கே தேசிய மட்டத்தில் அங்கீகாரம்

யாழ்ப்பாணம். ஓக.19

கிராம மட்டத்தில் தயாரிக்கப்படும் திட்டங்களே தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன என்று யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தின் ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு கடந்த திங்கட்கிழமை யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

செயலமர்வின் போது யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் தொடர்பாக எடுத்துக் கூறிய அரச அதிபர், 60 வீதமாக இருந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது 90 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளன. இது நூறு வீத வளர்ச்சியை இந்த வருடத்தில் எட்டும் என்றும் வீதி அபிவிருத்திகள் மிகப் பெரிய அளவில் இடம்பெற்றுள்ளதாகவும், இதற்கு ரூபா 28 ஆயிரத்து 42 மில்லியன் வரை செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (வ-7)

# உர மானியத்துக்கு மீளாய்வுப் பதிவு

தென்மராட்சி, ஓக.19

மறவன்புலோ கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான உர மானிய மீளாய்வு பதிவுகள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் மறவன்புலோ மத்தி பொருளாதார அபிவிருத்தி அலுவலர் அலுவலகத்துக்கு அருகில் உள்ள வீட்டில் இடம்பெறும்.

பிரிவுக்குட்பட்ட நெற்செய்கையாளர்கள் உரிய ஆவணங்களுடன் வருகை தந்து பதிவை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

# மண்டலாபிஷேக பூர்த்தி

வரணி, ஓக.19

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தி எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 1008 சங்காபிஷேக பூசையுடன் இடம்பெறும். ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறுவதுடன் கும்பாபிஷேக மலர் ஒன்றும் அன்றைய தினம் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-122)

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
19.09.1931

மறைவு
21.08.2003

திதி: நவமி

**அமரர் பொன்னையா பாலசிங்கம்**
(Rtd. Superintendent of Audit)

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து - எமை
அவனியிலே வாழ்வாங்கு வாழவைத்த - தெய்வமே!
பதினொராம் ஆண்டு நினைவு நாளில் - உமை
நினைந்து வணங்குகின்றோம் - அப்பா!

166/3, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு விழி நீர் சொரியும் நினைவுகள்

**நாகன் எட்வேட்**




தோற்றம் 02.06.1942 — மறைவு 19.08.2013

எங்கள் சந்தோஷத்திற்காக வாழ்ந்த அப்பா!
எங்கள் துன்பத்திலே துணையாக நின்ற அப்பா!
எங்களையே உங்கள் உலகம் என்று வாழ்ந்த அப்பா!
ஒவ்வொரு நிமிடத்தையும்
எங்களுக்காக செலவழித்த நீங்கள்
ஏன் எங்களைத் துடிக்க வைத்து விட்டுப்
போய்விட்டீர்கள்?
கல்லறைக்குள் நீங்கள் உறங்குகின்றீர்கள்
கல்லறையின் வாசலில் கதறித் துடிக்கின்றோம்
குடும்பத்தினர் நாம்.

18/1, ஆசீர்வாதலேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்




**அமரர் கந்தையா கிருபாமூர்த்தி**

தோற்றம் 06.06.1958 — மறைவு 20.07.2014

கடந்த 20.07.2014 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்
அமரர் கந்தையா கிருபாமூர்த்தி அவர்களின்
வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.08.2014)
செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
இலங்கை வங்கி முன்பாக, அளவெட்டி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கந்தையா கிருபாமூர்த்தி**

தோற்றம் 06.06.1958 — மறைவு 20.07.2014

எல்லோரது உள்ளங்களிலும் இன்றும்
நிலைத்திருக்கும் உங்கள் அன்பை நன்றியுடன்
நினைவு கூருகின்றோம். நினைவில் எம்முடனும்
நிஜத்தில் இறைவனிடமும் கலந்திட்ட உங்கள்
ஆன்மா இறைவனின் பாதத்தில் சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.

உறவினர்கள்.

# நல்லூரில் வெளியிடப்பட்டது 'அன்பே சிவம்' சஞ்சிகை



'அன்பே சிவம்' சஞ்சிகை வெளியீட்டு விழாவின் போது...

வலி.வடக்கு, ஓக.19

சைவ மகா சபையின் 'அன்பே சிவம்' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சைவ மகா சபையின் தலைவர் வைத்திய கலாநிதி எஸ்.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சஞ்சிகையை இந்தியா இமாலய ரிஷிகேச திரிபீடகத்தில் இருந்து வருகை தந்துள்ள குமாரானந்தகிரி சுவாமிகள் வெளியிட்டு வைக்க, நடராஜா பரமேஸ்வரி மண்டப நிறுவுநர் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வின்போது, சின்மயா மிஷன் வடமாகாண வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் ஆசியுரை வழங்க உலகத் தமிழர் பண்பாட்டு அமைப்பின் தலைவர் ரவிச்சந்திரன் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

(வ-86)

## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தி வரும் சமய சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு- 'உய்வதற்கு வழிகாட்டும் சைவத்தமிழ் கலாசாரம்' என்ற தலைப்பில் காரை எம்.பி.அருளானந்தத்தின் சிறப்புச் சொற்பொழிவும், அளவெட்டி காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை, வட்டுக்கோட்டை துணைவி அறநெறிப் பாடசாலை, நயினாதீவு அமுதசுரபி அறநெறிப் பாடசாலை மற்றும் தெல்லிப்பழை அண்ணமார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஒ-7)

♦♦♦

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு - பாட்டு - எஸ்.சிவஞானசேகரம், வயலின் - ஆர்.இராதாகிருஷ்ணன், மிருதங்கம் - எஸ்.துரைராஜா, மோர்சிங் - கே.நந்தகுமார்.

♦♦♦

'பிரம்மகான சபை'யால் நல்லை ஆதீனத்தில் இன்றுமாலை 6.30மணிக்கு மதுரகானம் இடம் பெறும். செல்வன் விஜயகுமாரசர்மா வத்சாங்கித சர்மா நிகழ்வில் பங்கு பற்றுகின்றார். (ஒ)

♦♦♦

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா பக்கவாத்திய சகிதம் வழங்கும் 'கம்பராமாயணம்' தொடர் நிகழ்வில் 'வாலி மோட்சம்' இசைப் பேருரை இடம்பெறும். (ஒ)

♦♦♦

யாழ்ப்பாணம் சின்மயாமிஷனின் ஏற்பாட்டில் 'இந்துவாக வாழ்வோம்' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மிக அருளுரை நல்லூர் பின் வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்றைய அருளுரையின் தலைப்பு 'செயலின் இரகசியம்' என்பதாகும். (ஒ)

**நல்லூரில் இன்று காலை:**
**சூரியன் உற்சவம்**



பதினெட்டாம் திருவிழா

## பல்லூர்களும் போற்றும் நல்லூர்க் கந்தா

ராகம்: சண்முகப்பிரியா
தாளம்: ஆதி

பல்லவி

பல்லூர்களும் போற்றும் வேலா - எங்கள்
தொல்வினை தனை தீர்க்கும் நல்லூர்க் கந்தா

அனுபல்லவி

முக்கண்ணன் சிவனவன் நீதிக்கண்ணில் உதித்தாய்
முருகன் எனும் நாம அழகுடன் ஒளிர்பவனே

சரணம்

வானவர் தனைக்காக்க அசுரவதம் செய்தாய்
வரும்பகை தனை விரட்டி வரம் அளித்தருளினாய்
கூர் வடிவேல் கொண்டு குருவடிவாய் நின்றாய்
குன்றுறை குமரா எம் குலம் காத்து அபயம் செய்வாய்

*இணுவையூர், செல்வம் பவானந்த மூர்த்தி*

## எமக்கு ஒரு விடிவைத்தா முருகா

நல்லை நகர் வீதியிலே வள்ளி, தெய்வானையுடன்
வீற்றிருந்து அருள் மழை பொழியும் - குமரோனே,
வேண்டு வார் வேண்டும் வரங்கள் ஈந்து
தன்னை நாடி வரும் பக்தர்கள் குறை தீர்க்கும் - முருகோனே,
அலைகடல் என பக்த்ர்கள் வெள்ளம் திரண்டோடும் வீதியிலே
சூர பத்மனை போரில் வென்ற - திறலோனே
எம் மக்கள் இதுவரை பட்டதுயர் போதும் கந்தா
இனியாவது மனம் கொண்டொரு விடிவைத்தா-சேவற் கொடியோனே

*க.கனகசபை, சண்டிலிப்பாய்.*

## வேலை வணங்குவதே வேலை

வேலவனின் ஆலயங்கள் சோலை
சூடிடுவோம் முருகனுக்கு மாலை
பாடிடுவோம் அனுதினமும் காலை
கந்தனுக்குச் சொரிந்திடுவோம் பாலை
ஆலயங்கள் அருள் மணக்கும் ஆலை
வீட்டிலென்ன உங்களுக்கு வேலை
வந்திடுங்கள் வேலவன் புகழ் பாட
பாடிடுவோம் கந்தனவன் அருளை
விடிந்திடுமே எம் வாழ்வு நன்றாய்
நல்லூரிற் கந்தனது சோலை
அருள்மணக்கும் என்றும் பொன் மாலை

*மட்டுவில் க.சி.சதாசிவம்*

**வைத்தீஸ்வராக் கல்லூரி**
**பழைய மாணவர் மன்ற வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்**

எமது மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 14.09.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.
சகல அங்கத்தவர்களையும் செயலாளருடன் தொடர்புகொண்டு அவரவரின் தற்போதைய, நிரந்தர இருப்பிட முகவரியை அறியத்தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.
முன்மொழிவுகள், பிரேரணைகள் சமர்ப்பிக்க உள்ளவர்கள் 01.09.2014ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் செயலாளரிடம் சமர்ப்பிக்கலாம்.

424/1/1, கில்னர் கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
077 921 3869 (51010) (12.3.6)

செ.சுப்பிரமணியம்,
மன்றச் செயலாளர்.

**சிறுநீரகம் தேவை**

45 வயதுடைய ஆண் ஒருவருக்கு
B+ குருதி வகையைச் சேர்ந்த
சிறுநீரகம் உடனடியாகத்
தேவைப்படுகின்றது.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு: 075 052 8134, 077 655 2231,
024 492 5820 (48970) (4.3.6.)

**தவறிவிட்டது**

இல.972202118V இலக்கமுடைய இராஜேந்திரகுமார் சுபகரன் ஆகிய எனது அடையாள அட்டை தட்டாதெருசந்திக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தொலைந்துவிட்டது.
அதனைக் கண்டெடுத்தவர்கள் எனது விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.
தொடர்பு:திருப்பதி, (51095)(4.6.3)
கொக்குவில் கிழக்கு, கொக்குவில.

**பகிரங்கக் கேள்வி அறிவித்தல்**

பின்வரும் பாடசாலைகளில் பாவிக்க முடியாத நிலையிலுள்ள
நிலமட்டத்துக்கு மேலுள்ள வகுப்பறைக் கட்டடங்களை இடித்து அகற்றும்
பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது

இன்று 19.08.2014 ஆம் திகதியிலிருந்து நேரில் பார்வையிட்டு ரூபா 100 செலுத்தி கேள்விப் பத்திரத்தை வலிகாமம் வலயக்கல்வி அலுவலகக் கட்டடப் பகுதியில் 01.09.2014 முற்பகல் 10 .00 மணிவரை அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை பெற்று சமர்ப்பிக்கலாம். 01.09.2014 ஆம் திகதி முற்பகல் 10.30 இற்கு கேள்வி திறக்கப்படும். சமர்ப்பித்த யாவரும் தவறாது சமுகமளித்தல் வேண்டும்.

பாடசாலையின் விவரங்கள் பின்வருமாறு

01. யா/ கட்டுடை சைவ வித்தி. - பிரதான மண்டபம்
02. யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை - 160' X 25' வகுப்பறைக் கட்டடம்
3. யா/சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை - பிரதான மண்டபம்.

செ. சந்திரராஜா
வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம். (சி.16090) (45.6.3)

# குடைச்சாமி திருவுருவச் சிலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக.19

ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் அவதரித்த கோண்டாவில் குமரக் கோட்டம் தவத்திரு கந்தையா சுவாமிகள் (குடைச்சாமி) யின் உருவச் சிலை திறப்பு விழா எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்குக் கோண்டாவில் குமரகோட்டம் ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான முன்றலில் இடம்பெற வுள்ளது.

ஸ்ரீஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர் ப.பாலசுப்பிர மணியம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும்,வாழ்த்துரையை தேவஸ்தான பிரதம குரு பிரமஸ்ரீ சு.வரதராஜ சர்மாவும் நிகழ்த்துவர்.

உருவச்சிலை திரை நீக்கத்தை அடுத்து அதனை வடிவமைத்த சிற்பி மா.மனோகர் கௌரவிக்கப்படவுள்ளார். நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், ஓய்வு பெற்ற அதிபர் செல்வி பா.மார்க்கண்டு, தமிழ்ச் சொல் அருவி ச.நவநீதன் ஆகியோரும் உரையாற்றுவார்கள்.

(ஒ-7)






வவுனியா மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் இன ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கில் சகோதர சங்கமம் என்னும் நிகழ்வு அண்மையில் மூன்று தினங்கள் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், மதீனா வித்தியாலயம், தர்மபால வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 65 மாணவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (த-422)

# கடையை மூடி உள்ளே இருந்தவாறு தன்னை தானே காயப்படுத்திய நபர்

## பொலிஸார் தலையிட்டுக் காப்பாற்றினர்



வவுனியா, ஓக.19

வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் தனது வர்த்தக நிலையத்தைப் பூட்டி விட்டு உள்ளே இருந்தவாறு தனது உடம்புப் பகுதிகளைத் தானே காயப்படுத்திய சம்பவம் வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் வவுனியா பசார் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளர் உள்ளே இருந்தவாறு தன்னைத் தானே கத்தியால் காயப்படுத்திக் கொண்டு இருக்கிறார் என்ற தகவல் வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்தது.

அங்கு சென்ற பொலிஸார் வெளியே நின்றவாறு கதவைத் திறக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளரிடம் கோரினர். எனினும் கதவு திறக்கப்படவில்லை. பின்னர் பொலிஸாரும் அருகிலிருந்த பொதுமக்களும் பல மணிநேரம் எடுத்த முயற்சியால் கதவு உடைக்கப்பட்டது.

வர்த்தக நிலையத்துக்குள் சென்ற பொலிஸார், அங்கு தன்னைத் தானே காயப்படுத்தி விட்டுப் படுத்திருந்த வர்த்தகரைக் காப்பாற்றி உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறு செய்தமைக்கான காரணத்தைப் பொலிஸார் வர்த்தக நிலைய உரிமையாளரிடம் கேட்டபோதும் அவர் மதுபோதையில் இருந்தமையால் சரியான பதிலைக் கூறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (த-421)

# மடுத் திருவிழா காலத்தில் சுகாதாரமற்ற வியாபாரம்

மன்னார், ஓக.19

மடுத்திருவிழா காலங்களில் சுகாதாரமற்ற முறையில் செயற்பட்ட உணவகங்கள் மற்றும் வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்கள் 12 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது 60 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரையிலான

## 12 பேரிடம் தண்டம் அறவீடு

காலப்பகுதியில் மடுத் திருத்தலச் சூழலில் உணவக மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்களில் சுகாதாரமற்ற முறையில் செயற்பட்டவர்களுக்கு எதிராக இந்தச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி ஒஸ்மன் டெனி தலைமையிலான பொது சுகாதாரப் பரிசோதகர் குழுவினர் உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் திடீர்ச் சுற்றி வளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது காலாவதியான மற்றும் பாவனைக்கு உதவாத உணவு வகைகள், பாவனைப் பொருள்கள் ஆகியவற்றை வைத்திருந்த குற்றச் சாட்டின் கீழ் 12 பேருக்கு எதி ராக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்தப் 12 பேருக்கு எதிரான விசாரணை மடு சுற்றுலா நீதி மன்றில் இடம்பெற்றது.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் ஆனந்தி கனகரட்ணம், குற்றத்தை ஒப்புக் கொண்ட சந்தேக நபர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 60 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு உத்தர விட்டார்.

இதேவேளை மடுத் திருவிழா காலங்களில் திருத்தலச் சூழலில் வயது குறைந்தவர்களுக்குச் சிகரெட் விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட நால்வருக்கு தலா 4,000 ரூபா வீதமும், சட்டவிரோதமாக எட்டு கிலோ மான் இறைச்சி வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவருக் குத் தலா 4,000 ரூபா வீதமும், திருத்தலச் சூழலில் பக்தர்களுக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் நடமாடிய கால் நடைகளின் உரிமையாளர்கள் நால்வருக்கு தலா 5,000 ரூபா வீதமும் தண்டப்பணம் அறவிடப்பட்டது. (த-14)

# மரண அறிவித்தல்கள்



**திருமதி சத்தியபாமா தெட்சணாமூர்த்தி (குஞ்சன்)**

**(கண்டி வீதி, முல்லையடி, பளை)**

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், பளை, முல்லையடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியபாமா தெட்சணாமூர்த்தி (குஞ்சன்) நேற்று (18.08.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தெட்சணாமூர்த்தியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராசமணியின் அன்பு மருமகளும், விபூசன், நிரூசன் ஆகியோரின் அன்புத் தாயும், சத்தியராதா, சத்தியமாலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப.3.00 மணியளவில் முல்லையடி - கரடிப்பள்ளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முல்லையடி,
பளை.

(47855)
(12.3.6)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## தங்கவேல் தில்லைநாதன்

*(தில்லை களஞ்சியம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)*



பதுளையைப் பிறப்பிடமாகவும் இல. 107, மூத்த விநாயகர் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் தில்லைநாதன் நேற்று (17.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கவேல் - சிந்தாமணி தம்பதியரின் அன்பு மகனும், மதிவதனியின் அன்புக் கணவரும், காலஞ்கென்ற ஆறுமுகம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜிந்தாரகன் (ஜீன் கேமாஸ் கம்பனி பி.வே. லிமிடெட்), சங்கீதா (கனகரட்ணம் மகா வித்தியாலயம் A/L கலைப்பிரிவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளதுரை (இந்தியா), முத்துக்குமார் (மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணம்), நவமணி, பத்மநாதன் (ஜெயா களஞ்சியம், றக்கா வீதி), கதிர்காமநாதன் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தேவிவிமலா (கனடா), பாலகாந்தன் (இலங்கை வங்கி, மன்னார்), சுசிலகாந்தன் (ஜேர்மனி), தயாளகாந்தன் (கனடா), குணாளகாந்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 107,**
**மூத்த விநாயகர் வீதி,**
**நல்லூர்.**

(51096) (4.3)

**தகவல்: மனைவி, பிள்ளைகள்**
**மகன் (ஜீன்)**
**0770754806,0777159179**

## செல்வச்சந்நிதி ஆலயத் திருவிழா தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.19

பருத்தித்துறை பிரதேச செய லகத்தின் ஏற்பாட்டில் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய பெருந்திருவிழா தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தொண்டமானாறு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் நடைபெற வுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி. ஜெயசீலன் அறிவித்துள்ளார். (வ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கந்தையா கிருபாமூர்த்தி**

தோற்றம்
06 . 06 . 1958


மறைவு
20 . 07 . 2014

எமது ஆலய வளர்ச்சியில் அச்சாணி போல் இருந்து தேவையறிந்து சேவையாற்றி தோள் கொடுத்து உதவிய பெருமகனும், ஆலய நிர்வாக சபை உபதலைவருமாகிய கந்தையா கிருபாமூர்த்தி அவர்களின் மறைவு எமக்கெல்லாம் ஒரு பேரிழப்பாகும். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய நிர்வாகசபை,
மயிலங்கூடல் ஞானவைரவர் கோயில்

(சு/16089(4 3.6)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 20.07.2014
சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவர்

**அமரர் மார்க்கண்டு தர்மராசா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியை நிகழ்வுகள் இன்று (19.08.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

(51097)(45.6.3)

கதுமலை தெற்கு,
மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்.

## ஈ-ராக், சிரியாவை சேர்ந்த 4,500 பேருக்கு ஆஸியில் வேலைவாய்ப்பு

ஈ-ராக் மற்றும் சிரியாவைச் சேர்ந்த சுமார் 4,500 பேரை தமது நாட்டில் குடியமர்த்த முன்வந்துள்ளதாக ஆஸ்திரேலியாவின் குடியேற்றத் துறை அமைச்சர் ஸ்கொட் மாரிஸன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா ஒவ்வொரு ஆண்டும் உள்வாங்கும் அகதிகள் எண்ணிக்கையின் பகுதியாக இவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

தஞ்சம்கோரி வரும் படகுகளைத் தடுத்து நிறுத்துவதில் அரசு கண்டிருக்கின்ற வெற்றி காரணமாக இந்த 4,500 பேருக்கும் இடம் கிடைத்துள்ளதாக ஸ்கொட் மாரிஸன் கூறினார்.

சட்டவிரோத படகுகள் மூலம் வருவோருக்கு ஆஸ்திரேலியா தஞ்சமளிக்காது என்று ஏற்கனவே அந்நாடு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)



தென்கொரியா சென்றிருந்த பாப்பரசர் பிரான்ஸிஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறார்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது... (வ)

## எபோலா நோயிலிருந்து தப்பிய முதலாவது நபர்

உலக நாடுகளுக்கு அண்மைய தினங்களாக பெரும் அச்சுறுத்தலாக, உயிர்கொல்லி வைரஸான எபோலா மாறியுள்ளது. இந்த நிலையில் எபோலா என்ற கொடூர நோயிலிருந்து ஒருவர் முழுமையாகக் குணமடைந்துள்ளார். ஆபிரிக்க நாடுகளில் வேகமாகப் பரவி வரும் எபோலா நோய்க்கு இறப்பைத் தவிர மருந்து இல்லை என்று கூறப்படும் நிலையில் இந்த நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளது.



நைஜீரியா நாட்டில் முதன் முதலாக பேட்ரிக் சாயெர் என்பவர் மூலம் எபோலா நோய் பரவியது. அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பயனின்றி பேட்ரிக் சாயெர் கடந்த ஜூலை மாதம் 20 ஆம் திகதி உயிரிழந்தார். அவருக்கு சிகிச்சை அளித்த பெண் மருத்துவர் கடந்த ஜூலை மாதம் 25 ஆம் திகதி உயிரிழந்தார். அதனைத் தொடர்ந்து, நைஜீரிய மக்களுக்கும் எபோலா கிருமித் தொற்று பரவத் தொடங்கியது. இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்ட நைஜீரியாவைச் சேர்ந்த நபரொருவர் பூரணமாகக் குணமடைந்து மருத்துவமனையிலிருந்து வெளியேறியுள்ளதாக அந்த நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் ஒன்யேபுச்சி சுக்வு தெரிவித்துள்ளார். (வ)

# கிறிஸ்தவர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதைத் தவிர்க்க வேண்டும்

### ஆசிய கம்யூனிச நாடுகளிடம் பாப்பரசர் வலியுறுத்து

ஆசியாவின் கம்யூனிச சக்திகளான சீனா, வட கொரியா மற்றும் வியட்நாம் ஆகியவை தமது நாடுகளில் வசிக்கும் சிறுபான்மை கிறிஸ்தவர்களை அச்சத்தில் ஆழ்த்தக் கூடாது என்று தென்கொரியாவில் வைத்து புனித பாப்பரசர் பிரான்சிஸ் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த நாடுகளில் வசிக்கும் கிறிஸ்தவர்கள் அங்கு தமது ஆதிக்கத்தைப் பிரயோகிப்பதற்காக வரவில்லை என்றும் வெறுமனே தமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் குடிமக்களாக ஏனைய சமூகத்தினருடன் இணைந்து நடக்கவே விரும்புகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.



தென்கொரியாவின் தலைநகர் சியோலுக்கு தெற்கே ஹயேமே நகரில் சுமார் 35 ஆசிய நாடுகளைச் சேர்ந்த 70 பிஷப்மாருக்கு மத்தியில் உரையாற்றும்போதே பாப்பரசர் இவ்வாறு தெரிவித்தார். அன்றைய தினமே அவர் தென்கொரியாவில் செலவிடும் 2ஆவதும் இறுதியுமான நாளாகும்.

சீனாவில் 1949 ஆம் ஆண்டு கம்யூனிசக் கட்சி ஆட்சிக்கு வந்தது தொடக்கம் அங்குள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களும் பாப்பரசருடனான உத்தியோகபூர்வ தொடர்பைப் பேண முடியாத சூழ்நிலை நிலவுவது குறிப்பிடத்தக்கது. மேலும் சீனாவிலுள்ள கத்தோலிக்கத் தேவாலயங்கள் இரு பிரிவுகளாகத் தொழிற்படுகின்றன. 'Patriotic association' என்று அடையாளப்படுத்தப்படும் தேவாலயங்கள் சீன கம்யூனிசக் கட்சியின் கோரிக்கைகளுக்கு எப்போதும் பதில் சொல்லும் விதத்திலும் 'Underground church' என இனம் காணப்படுபவை மறைமுகமாக ரோமின் பாப்பரசருக்கு மட்டுமே விசுவாசமாகச் செயற்படும் தேவாலயங்களாகவும் தொழிற்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் வத்திக்கான் பேச்சாளர் அருட்தந்தை பெடெரிக்கோ லொம்பார்டி செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்;

நற்குணம் உடைய கத்தோலிக்கர்கள் எப்போதும் நல்ல குடிமக்களே! அவர்கள் தமது சக்தியை அதிகப்படுத்தி தமது இடங்களைப் பிடித்து விடுவரோ என்று அதிகாரிகள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# லைபீரியாவில் ஆஸ்பத்திரி மீது மர்மக் கும்பல் திடீர் தாக்குதல்

### எபோலா நோயாளிகள் 17 பேர் தப்பி ஓட்டம்

மொன்ரோவியா, ஓக.19

லைபீரியாவின் தலைநகரான மொன்ரோவியாவில் எபோலா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனையில் புகுந்து ஒரு கும்பல் தாக்குதல் நடத்தியது. நாட்டில் எபோலா நோயே இல்லை என்று கோஷமிட்ட அந்தக் கும்பல் மருத்துவமனையின் கதவை உடைத்து அங்கிருந்த மருந்துகள் உள்ளிட்ட பொருள்களை தூக்கிச் சென்றது.

இந்தத்தாக்குதலைப் பயன்படுத்தி 17 எபோலா நோயாளிகளும் தப்பி ஓடி விட்டதாகவும் இந்தச் சம்பவத்தைப் பார்த்த ரெபேப்பா வெஸ்சே என்ற பெண்மணி தெரிவித்தார்.



அவர் கூறிய தகவலை லைபீரியாவின் சுகாதாரத் துறை ஊழியர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த ஜோர்ஜ் வில்லியம்ஸும் உறுதிப் படுத்தினார். வில்லியம்ஸ் மேலும் கூறுகையில்;

தப்பிச்சென்ற 17 பேருக்கும் எபோலா நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டது என்றும், அவர்களுக்கு முதற்கட்ட சிகிச்சை வழங்கப்பட்டு வந்ததாகவும் கூறினார்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் அனைவரும் இளம் வயதினர் என்றும் அவர்கள் தங்கள் கைகளில் ஆயுதங்கள் வைத்திருந்ததாகவும் வெஸ்சே மேலும் தெரிவித்தார். அந்த நாட்டு ஜனாதிபதி எல்லன் ஜோன்சன் சர்லீப்புக்கு எதிராக கோஷமிட்ட அவர்கள் நாட்டில் எபோலா என்ற நோயே கிடையாது என்று கோஷமிட்டதாக அவர் கூறினார். (வ)



# இந்தோனேசியாவில் கடலில் மூழ்கியது படகு

### 15 பேரைக் காணவில்லை

இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதி கடலில் சனிக்கிழமை இரவு படகு ஒன்று மூழ்கியதில், குறைந்தபட்சம் 10 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், 5 இந்தோனேசியர்களும் காணாமற் போயுள்ளனர்.

உள்ளூர் மீனவர்களாலும், மீட்புச் சேவைகளாலும் 10 பேர் மீட்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மீட்கப்பட்டவர்கள், பிரிட்டன், நியூசிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். காணாமற் போனவர்கள் எந்த நாட்டவர்கள் என்று தெரியவில்லை. லொம்பொக் மற்றும் கொமொடோ ஆகிய தீவுகளுக்கு இடையே பயணிகளும், சிப்பந்திகளுமாக 25 பேரை ஏற்றிச் சென்றபோது இந்தப் படகு விபத்துக்குள்ளானது. அது 3 நாள்களுக்கான பயணமாகும். (வ)

# பிரச்சினை ஏதும் இல்லாமல் மீன்பிடிக்கும் நிலை உருவாகும்

## பொன்.ராதாகிருஷ்ணன் கூறுகிறார்



பொன். ராதா கிருஷ்ணன்

சென்னை, ஓக.19

தமிழக மீனவர்கள் இனிமேல் பிரச்சினையே இல்லாமல் மீன் பிடிப்பதற்கான சூழ்நிலை உருவாகும் என்று மத்திய அமைச்சர் பொன். ராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

சென்னையில்செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்,

"தமிழக மீனவர்கள் 94 பேர் இலங்கைசிறையிலிருந்துவிடுதலையாகி தமிழகம் திரும்பியுள்ளனர். அந்த மீனவர்களின் படகுகளையும், வலைகளையும் மீட்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவில் அவை மீட்கப்படும். இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதில் இருந்து தடுக்கவும், மீன்பிடி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும் தொடர்ந்து முயற்சி எடுத்து வருகிறோம்.

பா.ஜ.க. அலுவலகத்தில் மீனவர் பிரதிநிதிகளுடன் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில், மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும்வழிமுறைகள் தொடர்பாக விரிவாக ஆலோ சிக்கப்பட்டது. மீனவர் பிரதிநிதிகள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தனர். அதன் அடிப்படையில் இனிமேல் பிரச்சினையே இல்லாமல் மீனவர்கள் நிம்மதியாக மீன் பிடிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியும்.

மீனவர் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வை நோக்கிப் பயணிக்கிறோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதில் வெற்றியும் அடைவோம். இந்த வெற்றியில், முதல்வர் ஜெயலலிதா உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பங்கு உண்டு. மீனவர் பிரதிநிதிகள் கூறிய கருத்துகளை மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் தொலைபேசி வாயிலாக தெரிவித்தேன். டெல்லி சென்றதும், பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்து மீனவர்கள் தெரிவித்துள்ள கருத்துகளையும் விளக்கிக் கூறுவேன். அவர் நல்ல தீர்வு காண்பார்"- என்றார். (வ)

# எல்லையில் பாகிஸ்தான் மீண்டும் அத்துமீறல்



ஜம்மு, ஓக.19

ஜம்மு- காஷ்மீர் எல்லையில், பாகிஸ்தான் இராணுவம் நேற்று முன்தினம் இரவு மீண்டும் அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் எல்லையோர கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

ஜம்மு காஷ்மீரின் ஆர்.எஸ். புரா மற்றும் அர்னியா பகுதிகளில் உள்ள நிலைகளைக் குறிவைத்து பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதற்கு இந்தியத் தரப்பிலும் பதிலடி கொடுக்கப்பட்டது. தொடர்ந்து இரவு முழுவதிலும் சிறு சிறு இடைவேளைகளில், 20 இந்திய எல்லை பாதுகாப்பு நிலைகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இரு தரப்பு தாக்குதல்களும் நேற்றுக் காலை 6.30 மணி வரை நீடித்தது. இதில் அட்டார் சிங் என்ற கிராமவாசி ஒருவர் காயமடைந்தார். கடந்த 10 நாள்களில் காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள்11தடவைகள்அத்துமீறித் தாக்குதல் நடத்தி உள்ளனர். ஆனால் இந்த ஒரு வருடத்தில் பாகிஸ்தான் நடத்திய அத்து மீறலில், நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதல் மிகவும் மோசமானதாகக் கூறப்படுகிறது. (வ)



நேபாள நாட்டில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தில் ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. அதனால் கிராமங்கள் பலவும் நீரில் மூழ்கியுள்ளன. (வ)

# எபோலா நோய் அறிகுறிகளுடன் விமானத்தில் சென்ற பெண் உயிரிழப்பு

சென்னை,ஓக.19

எபோலா நோய் அறிகுறிகளுடன் விமானத்தில் பயணித்த நைஜீரிய நாட்டுப் பெண், இந்தியா வரும் வழியில் உயிரிழந்தார். ஏற்கனவே புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த 35 வயதுடைய அந்தப் பெண், அதற்காக சிகிச்சை பெற இந்தியா வர முடிவு செய்திருந்தார். நைஜீரியாவிருந்து அபுதாபி வந்த அவர், அங்கிருந்து இந்தியா வர விமானத்துக்காகக் காத்திருந்தார். அபுதாபி விமான நிலையத்தில் இருந்த அந்தப்பெண் பயணிக்கு திடீரென உடல்நிலைக்குறைவு ஏற்பட்டதைத் தொடர்ந்து மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். இருப்பினும் அவர் உயிரிழந்தார். அவருக்கு நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில், எபோலா நோயின் அறிகுறிகள் இருந்தமை பின்னர் தெரியவந்தது.

அதையடுத்து விமானத்தில் அந்தப் பெண் பயணியுடன் வந்த அவரது கணவர் மற்றும் சக பயணிகளை அபுதாபி மருத்துவர்கள் எபோலா நோய் பாதிப்பு குறித்து பரிசோதித்தனர். இதில், அவர்களுக்கு நோய்ப் பாதிப்பு ஏற்பட்டதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. (வ)

# தண்ணீரில் மிதக்கும் 1,500 கிராமங்கள்

நேபாள நாட்டில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக உத்தரபிரதேசமாநிலத்தின் பல ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. 28 பேர் உயிரிழந்ததோடு, 1,500 கிராமங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. உத்தரப் பிரதேசத்தில் 4 லட்சம் பேர் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அங்கு 300 பேரைக் காணவில்லை.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை உத்தரப் பிரதேச அரசு முடுக்கிவிட்டுள்ளது. ஏராளமான மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். மழை வெள்ளப் பாதிப்புகளில் இது வரை 28 பேர் உயிரிழந்துள்ளனர். குறிப்பாகபக்ரைஜ்மாவட்டத்தில் 202 கிராமங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

சில வாரங்களுக்கு முன்னதாகவே கனமழையை எதிர் கொள்ளத் தொடங்கிய உத்தரகாண்ட் மாநிலத்தில் நிலச்சரிவு, காட்டாற்று வெள்ளம் ஆகியவற்றால் ஆயிரக்கணக்கான மக்கள்பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு மீட்புப் பணிகளை துரிதப்படுத்திய முதலமைச்சர் ஹரிஷ்ராவத் தற்போதுநிலைமை கட்டுக்குள் உள்ளதாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில் பீகார் மாநிலத்தில் பெய்து வரும் கன மழையால் வெள்ள நீர் சூழ்ந்துள்ள கிராமங்களில் சிக்கித் தவிக்கும் சுமார் 4 லட்சம்பேரை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனிடையே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள வட மாநிலங்களில் நிலைமையை கண்காணித்து வரும் மத்திய அரசு மீட்புப்பணிக்கு தேவையான உதவிகள் செய்து தரப்படும் என்றும் தெரிவித்துள்ளது. (வ)

# நிதியமைச்சு அதிகாரிகளிடம் விசாரணை நடத்தத் திட்டம்

## ஏர்செல் - மேக்ஸிஸ் ஒப்பந்த விவகாரத்தில்



டில்லி, ஓக.19

ஏர்செல்-மேக்ஸிஸ் வழக்கு தொடர்பாக மத்திய நிதியமைச்சக உயர் அதிகாரிகளிடம் விசாரணை நடத்த மத்திய புலனாய்வுத்துறை திட்டமிட்டுள்ளது.

மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சராக தயாநிதி மாறன் பதவி வகித்தபோது, ஏர்செல்லின் பங்குகளை மலேசியாவின் மேக்ஸிஸ் நிறுவனத்துக்கு விற்க கட்டாயப் படுத்தினார் என்று முறைப்பாடு வெளியானது.

இதுதொடர்பாக விசாரித்து வரும் சிபிஐ, இவ்வார இறுதிக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய உள்ளது. இதைத் தொடர்ந்து, ஏர்செல் - மேக்ஸிஸ் ஒப்பந்தத்துக்கு மத்திய நிதியமைச்சகத்தின் வெளிநாட்டு முதலீடு மேம்பாட்டு அமைச்சுஒப்புதல்வழங்கியமை தொடர்பாக விசாரணை நடத்த சிபிஐ முடிவு செய்துள்ளது.

ஒப்பந்தத்தில் முறைகேடு நடந்ததாகக் கூறப்பட்ட நிலையில், அதனை ஏற்றுக் கொண்டது ஏன்? என்று நிதியமைச்சக அதிகாரிகளிடம் விசாரணை நடத்த இருப்பதாக சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் விதி மீறல்கள் நடந்தமை தெரிய வந்தால், கூடுதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று சிபிஐ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

# தாஜ்மஹாலை ஒரே நாளில் பார்வையிட்ட 50,000 பேர்

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலைப் பார்வையிடுவதற்காக ஒரு நாளில் 50 ஆயிரம் பேர் திரண்டனர். தொடர்விடுமுறையின் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை முதல் இங்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இந்த நிலையில் சனிக்கிழமை மட்டும் 49 ஆயிரம் நுழைவுச்சீட்டுகள் விற்பனையாகியிருந்தன. அவர்களில் 2,500 பேர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் என்று தாஜ்மஹால் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (வ)

# பலசேனாவை விமர்சிக்கும் தகுதி மன்னார் ஆயருக்குக் கிடையாது

## கலகொட அத்தே ஞானசார தேரர் கூறுகின்றார்

கொழும்பு, ஓக.19
பொது பல சேனா அமைப்பை விமர்சிக்கும் தகுதி மன்னார் ஆயருக்கு இல்லை என்று கூறியுள்ளார் அந்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

இனவாதத்தைத் தூண்டி சர்வதேச சக்திகளை நாட்டுக்கு வரவழைக்கும் மன்னார் ஆயருக்கு பொதுபல சேனாவை விமர்சிக்கும் தகுதி இல்லை. முஸ்லிம், கிறிஸ்தவ தீவிரவாதிகளுக்கு எதிராகச் செயற்படும் எம்மை இவர்கள் இனவாதிகளாகவே பார்ப்பார்கள் - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இணையத்தளத்தில் வெளியான கராத்தே கற்பது போன்ற ஒளிப் படத்தில் இருப்பது நானல்லை. பௌத்தம் என்னை காக்கும் போது தற்காப்புக் கலை எனக்கு அவசியமில்லை. பொது பலசேனா அமைப்பினர் இன வாதிகள் என்றால் நாம் அடக்கு முறைகளையா கையாளுகின்றோம்?.


கலகொட அத்தே ஞானசார தேரர்

மன்னார் ஆயரும் முஸ்லிம் உலமாக்களும் செய்வதன் பெயர் என்ன? நாம் நாட்டைக் காப்பாற்றவும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை காப்பாற்றவும் போராடுகின்றோம்.

ஆனால் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் புலம்பெயர் தமிழ் இயக்கங்களுடனும், அமைப்புகளுடனும் இணைந்து நாட்டுக்கு எதிரான தேசத் துரோகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்.

தற்போதும் காணாமற்போனோர் தொடர்பில் பொய் யான சாட்சியங்களைத் தயாரித்து சர்வதேச விசாரணைக் குழுவுக்குச் சாதகமான முறையில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றார்.

இங்கிலாந்து இணையத் தளமொன்று எனது புகைப்படம் என்ற பெயரில் ஒருவர் தற்காப்பு கலையைப் பயில்வதை போன்ற புகைப்படமொன்றை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் பலர் என்னிடம் வினவினர். எனினும் அந்தப் புகைப்படத்தில் இருக்கும் நபர் நான் இல்லை. நான் பௌத்த மதத்தையும் காவி உடையையும் மட்டுமே கவசமாகக் கருதுகிறேன்.

எனக்கு கராட்டி கலை அவசியமில்லை. என்மீது பொய்யான குற்றங்களைச் சுமத்துகின்றனர்.

பொய்யான புகைப்படங்களுடன் என்னை தொடர்புபடுத்தி விமர்சிக்கின்றனர்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# 10 ரூபா தாள் இனி இல்லை

கொழும்பு, ஓக.19
இலங்கையில் இனிவரும் காலங்களில் 10 ரூபா தாள் அச்சிடப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் தீர்மானத்துக்கு அமைவாகவே இந்த நாணயத்தாள் அச்சிடுவது நிறுத்தப்படவுள்ளது. அதற்கு பதிலாக 10 ரூபா நாணயக் குற்றி வெளியிடப்படவுள்ளது.

தற்போது 10 ரூபா தாள்களுக்குப் பதிலாக மத்திய வங்கி ஏனைய வங்கிகளுக்கு 10 நாணயங்களை விநியோகித்து வருகிறது. (ற)

# 2005 ஆம் ஆண்டு தேர்தலில் மஹிந்தவை ஆதரிக்கவில்லை

## மனம் திறக்கிறார் டலஸ்

கொழும்பு, ஓக.18
2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கவில்லை என்று கூறியுள்ளார் அமைச்சர் டலஸ் அழகப்பெரும.


டலஸ் அழகப்பெரும

அண்மையில் அத்தனகல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"2005ஆம் ஆண்டு தேர்தலின் போது மஹிந்தவால் வெற்றியீட்ட முடியாது என்றே பலரும் கருதினர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 'ஏ-4' தாள் அளவிலான ஒரு சுவரொட்டியைக் கூட ஒட்டி மஹிந்தவுக்கு ஆதரவு வழங்கவில்லை.

தேர்தல் நடைபெற்ற காலத்தில் கட்சித் தலைமையகம் பூட்டப்பட்டிருந்தது.

பல மில்லியன் அமெரிக்க டொலரைப் பயன்படுத்தி ஜனாதிபதியைத் தோற்கடிக்க முயற்சிக்கப்பட்டது.

இப்படியான ஒரு நிலைமையில் 1,83,000 மேலதிக வாக்குகளால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டினார். கடந்த கால தேர்தல்களின் போது அத்தனகல மக்கள் அளித்த ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# அழகை கூட்ட ஊசி மருந்து: மருத்துவருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக.19
அழகு நிலையம் ஒன்றில் ஏற்றப்பட்ட ஊசி மருந்து காரணமாக பெண் மருத்துவர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய மருத்துவர் நிமால் கமகே எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான மருத்துவர் நேற்று கொழும்பு மேலதிக நீதவான் மொஹமட் சஹாப்தீன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அதன்போதே சந்தேக நபரை தொடர்ந்தும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

வயிற்று பகுதியில் உள்ள சதையைக் குறைப்பது மற்றும் தோலின் அழகை அதிகரிக்கும் ஊசி மருந்து ஏற்றப்பட்டதன் காரணமாக கொழும்பு வைத்தியசாலை ஒன்றில் பணியாற்றும் பெண் மருத்துவர் ஒருவர் கடந்த 12 ஆம் திகதி உயிரிழந்தார். (ற)

# தமிழ் கூட்டமைப்பு நீதிமன்றை பிழையாக வழிநடத்துகின்றது

## குற்றஞ்சாட்டுகின்றது சுவர்ண ஹன்ச அமைப்பு

கொழும்பு, ஓக.19
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றைப் பிழையாக வழி நடத்தி வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் சுவர்ண ஹன்ச அமைப்பின் தலைவர் புண்யவர்தன அல்விஸ்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"தனி நாடு ஒன்றுக்காக மக்கள் ஆணையை கோரவில்லை என்று சத்தியக் கடதாசி ஒன்றின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் நீதிமன்றில் அறிவித்திருந்தது. ஆயினும் சமஸ்டி முறைமையிலான தீர்வுத் திட்டமொன்றைக் கோரி அடுத்த மாதம் நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளோம் என்று கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சிங்கள ஊடகமொன்றுக்குக் கூறியுள்ளார். ஐக்கிய இலங்கைக்குள் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதில் நம்பிக்கையில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

தனிநாட்டுக் கோரிக்கை விடுக்கப்பட மாட்டாது என்று நீதிமன்றில் அறிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஸ்டி முறைமையிலான ஆட்சியை வலியுறுத்தி மற்றுமொரு மனுவை எதற்காகத் தாக்கல் செய்கின்றது என்பது புரியவில்லை.

ஒரு புறத்தில் ஐக்கிய நாடு என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுபுறத்தில் சமஸ்டி ஆட்சியை பெற்றுக்கொள்ள வழக்குத் தொடரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இது நீதிமன்றை பிழையாக வழி நடத்தும் நடவடிக்கையாகும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# 4 வயதுக் குழந்தையுடன் கடலுக்குள் பாய்ந்த தாய்

## குழந்தை சாவு

கொழும்பு, ஓக.19
வெல்லவாய - கந்தபானாகல பிரதேசத்தைச் சேர்ந்த தாயொருவர் தனது பிள்ளையுடன் உயிரை மாய்த்துக் கொள்ள கடலில் குதித்துள்ளார். இவர்கள் வெலிகம - மிதிகம - தேனுவர கடலிலேயே குதித்துள்ளனர்.

அங்கிருந்த மீனவர்கள் இவர்களைக் காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். ஆயினும் குழந்தை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தது.

அதேவேளை தாய் மேலதிக சிகிச்சைகளுக்காக மாத்தறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை வெலிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)


செப்பனிடப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்ட புருக்சைட்-மஹகுடுகலை -ஹைபொரஸ்ட் பாதை கடந்த 15ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. வீதியைத் திறந்து வைத்த ஜனாதிபதி அங்கிருந்த மக்களுடனும் கலந்துரையாடினார். (ற)

# துப்பாக்கிச் சூடு; ஒருவர் சாவு

கொழும்பு, ஓக.19
வெல்லம்பிட்டி, நவகமுவ பட்டேவெல சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 27 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொரு இளைஞன் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களே அந்த இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# குளவிகளை கலைக்க நவீன தொழில்நுட்பம்

கொழும்பு, ஓக.19
சிகிரியாவில் குளவித்தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கு கொரியாவின் தொழில்நுட்பத்தை பயன்படுத்த கலாசார மற்றும் கலை விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய குளவிகளுக்கு மாத்திரம் கேட்கும் ஒலி பயன்படுத்தப்படவுள்ளது என்றும், இதன் மூலம் குளவின் கூட்டிலிருந்து குளவிகள் கலைந்து செல்வதை தடுக்க முடியும் என்று அமைச்சர் டீ.பி. ஏக்கநாயக்க தெரிவித்தார். (ற)

# சப்ரகமுவ மாணவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, ஓக.19
சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர். இரண்டு தமிழ் மாணவர்கள் கடந்த 9 ஆம் திகதியன்று பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டமை தொடர்பிலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மாணவர் தலைவர் ரசிந்து ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

தம்மைத் தாமே காயப்படுத்திக் கொண்டார் என்று கூறி மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அதனையடுத்தே ஏனைய இரண்டு மாணவர்களும் கைது செய்யப்பட்டனர். இயல்பற்ற சூழ்நிலையை ஏற்படுத்த முயன்றனர் என்று குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை தாம் மறுப்பதாக பல்கலைக்கழக மாணவர் தலைவர் தெரிவித்துள்ளதுடன், கடந்த புதன்கிழமையன்று இரண்டு மாணவர்களை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

Shakthi சக்தி FM
தமிழ் பேசும் மக்களின் சக்தி

# சக்தி FM யாழ் நேரலை

the capital maharaja organisation limited
Since 1930

## யாழ் மண்ணிலிருந்து உலகெங்கும்
## தமிழ் பேசும் மக்களின் சக்தி




யாழ் நல்லூரில்

# சக்தி வளாகம்

ஆகஸ்ட்
**18 - 24**

உலகின் மிகப்பிரம்மாண்டமான
வானொலிக் கலையகம்
உங்கள் அன்பு அறிவிப்பாளர்கள்
ஏராளமான போட்டிகள்
அட்டகாசமான பரிசுகள்
தினமும் கலை நிகழ்ச்சிகள்

**அனைவரையும்**
**அன்போடு அழைக்கின்றோம்**

உத்தியோகபூர்வ பத்திரிகை

Shakthi சக்தி FM · Shakthi சக்தி TV · NEWS 1st · உதயன்
தமிழ் பேசும் மக்களின் சக்தி

நல்லூரான் சக்தி நாடெங்கும் பரவட்டும்

**104.1 / 103.9 FM**
**www.shakthifm.com**

LANKA ORIX FINANCE

ST & S SINCE 1892

## லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி

# மாபெரும் ஏலவிற்பனை

## 21 ஆகஸ்ட் 2014 வியாழக்கிழமை

**கலைமகள் சனசமூக விளையாட்டு மைதானம், மன்னார் வீதி, வவுனியாவில்**

**காலை 10 மணியிலிருந்து ஆரம்பம்**

### மோட்டார் சைக்கிள்கள்

| | | | |
|---|---|---|---|
| BAJAJ CT | 100CC | 2012 | NP BAA XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2012 | NP XV XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2013 | NP BAD XXXX |
| BAJAJ PULSAR | 180CC | 2012 | NP BAE XXXX |
| DISCOVER | 124CC | 2012 | NP BAB XXXX |
| DISCOVER | 125CC | 2012 | NP XO XXXX |
| HERO HARIZMA ZMR | 220CC | 2013 | NP BAO XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2012 | NP BAF XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2013 | NP BAI XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2013 | NP BAP XXXX |
| HERO HONDA | 100CC | 2011 | NC WY XXXX |
| HERO HONDA DIO | 100CC | 2011 | NP WX XXXX |
| HERO HONDA PLEASURE | 100CC | 2012 | NP XR XXXX |
| HERO HONDA SPLENDOR NXG APDR | 100CC | 2012 | NP BAD XXXX |
| HERO HUNK | 149CC | 2013 | NP BAI XXXX |
| HERO PASSION PRO | 100CC | 2013 | NP BAT XXXX |
| HERO PLEASURE | 100CC | 2012 | NP BAO XXXX |
| HF DELUXE | 100CC | 2013 | NP BAG XXXX |
| HONDA PLEASURE | 100CC | 2012 | NP XZ XXXX |
| MAHINDRA PANTERO T1 | 110CC | 2013 | NP BAL XXXX |
| PULSAR | 150CC | 2013 | NP BAO XXXX |
| PULSAR | 150CC | 2012 | NP BAC XXXX |
| PULSAR | 150CC | 2012 | NP XY XXXX |
| PULSAR | 150CC | 2012 | NP XQ XXXX |
| PULSAR | 150CC | 2012 | NP XZ XXXX |
| YAMAHA FZ-S | 150CC | 2012 | NP XR XXXX |

### கெப்கள்

| | | | |
|---|---|---|---|
| MAHINDRA BOLERO | 2523CC | 2011 | NP PQ XXXX |
| TATA 207DI | 2956CC | 2012 | NP PS XXXX |

### நான்கு சக்கர டிரக்டர்கள்

| | | | |
|---|---|---|---|
| JOHN DEERE 5047D | 2900CC | 2013 | NP RD XXXX |
| JOHN DEERE 5203 | 2900CC | 2011 | NP RD XXXX |
| JOHN DEERE | 2300CC | 2012 | NW RC XXXX |
| M&M 575DI ROTAVATOR | 2750CC | 2012 | NP RD XXXX |
| MASSEY FERGUSON TRACTOR | | | 37-XXXX |
| MASSEY FERGUSON TRACTOR | | | 270-XXXX |
| TAFE 45DI | 2500CC | 2012 | NP RD XXXX |
| TAFE | 2500CC | 2012 | NP RD XXXX |
| TAFE | 2500CC | 2012 | EP RD XXXX |
| TAFE | 2500CC | 2011 | NP RC XXXX |
| TAFE | 2500CC | 2011 | NC RC XXXX |
| TAFE | 2500CC | 2011 | NP RC XXXX |
| TAFE | 2500CC | 2012 | NP RD XXXX |
| TAFE | 2500CC | 2012 | NC RD XXXX |
| TAFE | 2500CC | 2012 | NP RC XXXX |
| TAFE | 2230CC | 2004 | EPJB XXXX |
| TAFE | 2500CC | 2012 | NC RD XXXX |
| TAFE | 2300CC | 2010 | NP RB XXXX |
| TAFE | 2500CC | 2010 | NP RD XXXX |
| TAFE | 2500CC | 2012 | NC RC XXXX |

### லொறிகள்

| Vehicle | Engine | Year | Registration |
|---|---|---|---|
| ISUZU ELF | | 1982 | 41- XXXX |
| LANKA ASHOK LEYLAND | 600CC | 1998 | 68-XXXX |
| TATA LPT709 | 3734CC | 2003 | NP LC XXXX |

### முச்சக்கர வண்டிகள்

| | | | |
|---|---|---|---|
| BAJAJ | 174CC | 2008 | NP QR XXXX |
| BAJAJ | 198CC | 2012 | NP YZ XXXX |
| BAJAJ | 198CC | 2011 | NP YL XXXX |
| BAJAJ | 198CC | 2007 | NP QO XXXX |
| BAJAJ 4S | 175CC | 2010 | NP YB XXXX |
| BAJAJ RE205 | 174CC | 2010 | NP QX XXXX |
| BAJAJ RE205 | 198CC | 2012 | NP YY XXXX |
| BAJAJ | 174CC | 2010 | NP YC XXXX |
| BAJAJ | 174CC | 2007 | UP QK XXXX |
| PIAGGIO | 395CC | 2012 | NP QY XXXX |
| TVS | 200CC | 2011 | NP YQ XXXX |
| TVS | 250CC | 2011 | NP YP XXXX |
| TVS KING | 200CC | 2012 | NP YX XXXX |

### டிரெயிலர்கள்

| | | |
|---|---|---|
| TRAILER | 2012 | NP RW XXXX |
| TRAILER | 2013 | NP RW XXXX |
| TRAILER | 2013 | NP RW XXXX |
| TRAILER | 2012 | NC RW XXXX |
| TRAILER | 2012 | NP RW XXXX |
| TRAILOR | 2012 | EP RW XXXX |
| TRAILOR | 2013 | NP RW XXXX |

### டிரக்குகள்

| | | | |
|---|---|---|---|
| MAHINDRA MAXIMO | 909CC | 2012 | NC PT XXXX |
| MAHINDRA MAXIMO | 909CC | 2012 | NP PV XXXX |
| MAHINDRA MAXXIMO | 909CC | 2011 | EP PQ XXXX |
| MAHINDRA MAXXIMO 2WD | 909CC | 2013 | NC PV XXXX |
| TATA | 1405CC | 2013 | NP PV XXXX |
| TATA ACE | 702CC | 2013 | NP PV XXXX |
| TATA ACE | 702CC | 2011 | NC PQ XXXX |
| TATA | 1405CC | 2012 | NP PT XXXX |
| TATA ACE | 702CC | 2011 | EP PQ XXXX |
| TATA ACE | 702CC | 2011 | NP PQ XXXX |
| TATA ACE | 702CC | 2012 | NC PU XXXX |
| TATA ACE | 702CC | 2013 | NP PV XXXX |
| TATA ACE | 702CC | 2013 | NP PW XXXX |
| TATA ACE | 702CC | 2013 | NP PV XXXX |
| TATA ACE | 702CC | 2011 | NP PQ XXXX |
| TATA ACE | 702CC | 2013 | NP PV XXXX |
| TATA SUPER ACE | 1405CC | 2013 | NP PW XXXX |

### இரு சக்கர டிரக்டர்கள்

| | | | |
|---|---|---|---|
| SIFANG GN 12DI | 815CC | 2010 | NP SI XXXX |
| SIFANG GN 15 | 903CC | 2011 | NC SL XXXX |
| SIFANG GN 15 | 903CC | 2011 | NC SL XXXX |
| SIFANG GN12 | 815CC | 2011 | NP SK XXXX |

### வேன்

| | | | |
|---|---|---|---|
| TOYOTA TOWN ACE | 1970CC | 1990 | 57- XXXX |

## பார்வையிடல் 18, 19, 20 ஆகஸ்ட் 2014

## காலை 9 - மாலை 5

**விற்பனை நிபந்தனைகள் :**

- ✓ பிரவேசம் : ஒருவர் மீளப்பெற முடியாத 500 ரூபாவுக்கான நுழைவுச்சீட்டுடன் மீளப்பெறக்கூடிய 5000 ரூபா வைப்புப் பணமும் செலுத்தவேண்டும்.
- ✓ சுத்தியல் அடித்தவுடன் பெறுமதியின் 25% காசாக செலுத்து (மீளச்செலுத்தப்படாதது) வதுடன் மிகுதி 75% காசாக 29.08.2014 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு முன்பாக இல.27, 2ஆம் குறுக்குத்தெரு, வவுனியாவிலுள்ள லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் PLC இற்கு செலுத்தி வாகனத்தை எடுத்துச்செல்லல்வேண்டும்.
- ✓ எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தல் இன்றி ஏலத்திலிருந்து விலக்கிக்கொள்ளும் உரிமை நிர்வாகத்திற்கு உண்டு.
- ✓ ஏலவிற்பனையாளரின் தீர்மானமே இறுதி முடிவாகும்.

## SCHOKMAN & SAMERAWICKREME

ஒரே தேசம் ஒரே ஏலவிற்பனையாளர், 122 வருட மகோன்னத சேவையின் கொண்டாட்டம்

**தலைமை அலுவலகமும் காட்சியறையும் :**
24, ரொறிங்டன் வீதி, கண்டி.
தொலைபேசி : 081 2227593
தொலைநகல் : 081 2224371
மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk

**நகர அலுவலகமும் காட்சியறையும் :**
290, ஹெவ்லொக் வீதி, கொழும்பு - 05.
தொலைபேசி : 011 2502680, 2585408
தொ.பே/தொலைநகல் : 011 2588176
மின்னஞ்சல் : schokman@samera1892.com

இணையத்தளம் : www.sandslanka.com

# வவுனியாவில் இருந்து பக்தர்கள் நல்லூர் நோக்கிப் பாத யாத்திரை

## நேற்றுக் காலை ஆரம்பமானது

வவுனியா, ஓக.19

நல்லூர் கந்தன் ஆலயத்தின் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வவுனியா, வேப்பங்குளம் சிறி பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இருந்து நான்காவது வருடமாக மேற்கொள்ளப்படும் பாதயாத்திரை நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

வவுனியா, வேப்பங்குளம் சிறி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் சாமி அம்மா தலைமையில் நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் பாதயாத்திரையில் பங்கேற்கின்றனர். இவர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி நல்லூர் கந்தன் ஆலயத் தேர்த் திருவிழாவில் இணைந்து கொள்வர்.



பாதயாத்திரையாக கிளம்பும் பக்தர்கள்

இதன்போது ஏ-9 வீதியில் உள்ள ஆலயங்களில் தரிசித்துத் தங்கிச் செல்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதுடன் அங்கிருந்தும் பலர் இந்த பாதயாத்திரையுடன் இணைந்து கொள்ளவுள்ளனர்.

நேற்று ஆரம்பமான இந்த நிகழ்வில் வவுனியா மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் இந்தியானந்தன், வவுனியா அந்தணர் ஒன்றியச் செயலாளர் பிரபாகரக்குருக்கள் உள்ளிட்ட அந்தணப் பெருமக் கள், தமிழருவி த.சிவகுமாரன், சைவமணி சண்முகம் உள்ளிட்ட பெருமளவிலான பக்த அடியார்கள் கலந்து கொண்டனர். (த-421)

# மூன்று கிலோ கேரளக் கஞ்சா வைத்திருந்தவர் கைது



மன்னார், ஓக.19

தலைமன்னார் பகுதியில் 3 கிலோ 700 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சாவை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரைப் பொலிஸார் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

மன்னார் போதைவஸ்துத் தடுப்புப்பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் சிறுத் தோப்புச் சந்தியில் உரப்பையில் குறித்த நபர் கஞ்சா வைத்திருந்தவேளை இந்தக் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மன்னார் போதைவஸ்துத் தடுப்புப்பிரிவுப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் சுகுமார் சுகந் தலைமையிலான குழுவினர் குறித்த இடத்துக்குச் சென்று கஞ்சாப் பொதிகளு டன் சந்தேக நபரைக் கைது செய்தனர். குறித்த சந்தேக நபரை நேற்று மன்னார் நீதிமன்றில் முன்னி லைப்படுத்தியபோது வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் ஆனந்தி கனகரட்ணம், சந்தேக நபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய உத்தரவிட்டுள்ளார். (த-14)

# கடும் வறட்சியான சூழலிலும் நிலக் கடலை செய்கை வெற்றி

கிளிநொச்சி, ஓக.19

கிளிநொச்சி வன்னேரி திக்காய் குளத்தின் கீழ் 15 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட நிலக்கடலைச் செய்கை வறட்சியான சூழலிலும் வெற்றியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திக்காய் குளத்தின் நீர் முற்றாக வற்றிய நிலையில் ஒரு மாதம் வரையான நீர்ப்பாசனம் நிலக் கடலைக்கு மேற்கொள்ள வேண்டியிருந்ததால் அங்கிருந்து 3 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வன்னேரிக் குளத்திலிருந்து திக்காய் குளத்துக்கு நீர் வழங்கப்பட்டு நிலக்கடலைச் செய்கை அறுவடை செய்யக்கூடிய நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் நிதி அனுசரணையுடன் உணவு விவசாய ஸ்தாபனத்தால் விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வரும் நிலக்கடலை உற்பத்தித் திட் டத்தில் திக்காய் குளத்தின் கீழ் பரீட்சார்த்த பயிர்மாற்றுத் திட்டமாக நிலக் கடலை உற்பத்தித்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது.

கடும் வறட்சியினால் அழிவடையும் நிலையில் இருந்த இந்தச் செய்கைக்கு சிரமங்களின் மத்தியில் செய்கையாளர்களின் அயராத முயற்சியால் வன்னேரிக்குளத்திலிருந்து திக்காய்குளத்துக்கு நீர்ப்பாசனம் செய்யப்பட்டு நிலக்கடலைச் செய்கை அறுவடைக்குரிய பருவத்தை அடைந்துள்ளது.



இதன் ஆரம்ப அறுவடை விழா கடந்த 15ஆம் திகதி நிலக்கடலைச் செய்கையாளர்களால் நடத்தப்பட்டது. இதில் கிளிநொச்சி அரச செயலகத்தின் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ந.கௌரிதாசன், நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.விகிர்தன், விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் மற்றும் கிராம சேவகர், கமக்கார அமைப்பினர் ஆகியோர் கலந்துகொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தனர். (த-18)

# அம்பலவன்பொக்கணைக்கு மருத்துவர் ஒருவர் வேண்டும்

## கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு , ஓக.19

முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மருத்துவர் ஒருவரை நியமிக்கும்படி கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மருத்துவர் ஒருவர் அங்கு இல்லாமையால் மருத்துவ வசதியை பெற்றுக் கொள்வதில் நோயாளர்கள் பெரும் சிரமங்களைஎதிர்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக்கிராம மக்கள் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்குச் செல்வதனால் 6 கிலோ மீற்றர் தூரமும், முல்லைத் தீவு பொது மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமானால் 25 கிலோமீற்றா பயணிக்க வேண்டியுள்ளதாகவும் கூறுகின்றனர். போக்குவரத்து வசதிகள் எவையுமற்ற இந்தக் கிராமத்துக்கு மருத்துவர் ஒருவரை நியமிக்கவேண்டும்.

இல்லையேல் நடமாடும் சேவையாவது நடத்தப்பட வேண்டும் என கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இறுதியாக நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் மேற்படி கோரிக்கை கிராம மக்களினால் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-18)



வவுனியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை சுழல்காற்று வீசியதில் கல்நாட்டியங்குளம் பகுதியில் உள்ள சுப்பிரமணியம் நாகரெட்ணம் என்பவரின் வீட்டின் கூரைப் பகுதிகள் தூக்கி எறியப்பட்டு கட்டடம் சேதமடைந்தது. (த-421)


# பயன்பாடின்றிப் பாழடைந்துள்ள கந்தபுரம் விவசாயக் களஞ்சியம்

## திருத்தியமைக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

வவுனியா, ஓக.19

வடக்கு-கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தில் 2002 ஆம் ஆண்டு வவுனியா கமநல கேந்திர நிலையத்தின் கீழ் அமைக்கப்பட்ட வவுனியா, கந்தபுரம் விவசாய களஞ்சியசாலை மக்கள் பயன்பாடின்றிப் பாழடைந்து காணப்படுவதாக அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பல லட்சம் ரூபா செலவில் வடக்கு-கிழக்கு நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட இந்தக் களஞ்சியசாலை கந்தபுரம், தவசிக்குளம், இராசேந்திரகுளம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மக்களின் விவசாய உற்பத்திப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தவும், அவர்களுக்குத் தேவையான உரவகைகளைக் களஞ்சியப்படுத்தித் தேவையான போது விநியோகிப்பதற்காகவும் கட்டப்பட்டிருந்தது.



எனினும், உரிய வகையில் திட்டமிடப்படாது குளத்தின் அருகே கட்டப்பட்டமையாலும், பொறுப்பு வாய்ந்த திணைக்களத்தினரால் பரா மரிக்கப்படாமையாலும், இந்த நிலையம் தற்போது பற்றைக் காடுகளால் சூழப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் சமூக விரோதச் செயற்பாடுகளும் இடம் பெறுவதற்கு இந்தக் கைவிடப்பட்ட கட்டடம் துணை நிற்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் தற்போது பல கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நெளுக்குளம் பகுதிக்குச் சென்றே தமக்குத் தேவையான உரவகைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதுடன் அறுவடை காலத்திலும் நெல்லை விற்பனைக்காக நெளுக்குளம் பகுதிக்கே கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

இதனால் தாம் அதிக சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும், அதிக பணச் செலவு ஏற்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். குறப்பிட்ட கட்டடத்தைத் திருத்திப் பயன்படுத்தினால் தாம் இலகுவாகத் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என அவர்கள் மேலும் கூறினர். (த-402)

## விழிப்புலனற்றோர் சங்கத்தின் உறுப்பினருக்கு குழாய்க் கிணறு

யாழ்ப்பாணம், ஓக. 19
யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் தனது வாழ்வாதார திட்டத்தின் கீழ் கிணறு வசதி இல்லாத அங்கத்தவர்களுக்கு குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்து வருகின்றது.
இதன் முதற்கட்டமாக ஐந்து குழாய்க் கிணறுகள் அங்கத்தவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் எம்.கனகசபை தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எமது சங்க அங்கத்தவர்களில் சிலர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.
இவர்களில் சிலரின் குடியிருப்புக்களில் கிணற்று வசதி இல்லை. இதனால் அவர்கள் தண்ணீர் பெறுவதற்கு அயல் வீடுகளை நாடிச் சென்று சிரமப்படுகின்றனர்.
இதன் காரணமாக முதற் கட்டமாக ஐந்து குடும்பங்களுக்குக் குழாய்க் கிணறுகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன.
இதனை விட மேலும் நான்கு குடும்பங்களுக்கு குழாய் கிணறுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றார். (கு-17)

## கலாசாரம் பேணுவோரின் கலாசாரம் இது



நல்லூர் கந்தன் ஆலயத்துக்கு வருவோர் அதன் புனிதத்தைப் பேணுவதற்காகக் கலாசார உடைகளை அணிந்து வருமாறு வலியுறுத்தப்பட்டு வருகிறது. நல்லூர் ஆலயத்துக்கு வருகை தந்த மூன்று வெளிநாட்டவர்கள் தமிழர்களின் கலாசாரத்துக்கு ஒவ்வாத உடைகளை அணிந்திருந்ததை அடுத்து அவர்களுக்கு வேட்டிகளை அணிவித்து விட்டார் கலாசாரத்தைப் பேணுவதாகக் கூறும் இளைஞர் ஒருவர். வெளிநாட்டவர்கள் மூவருக்கும் வேட்டி அணிவித்த அவர், தமிழர் கலாசார உடையில் தான் இல்லை என்பதை அறியவில்லைபோலும். (கு)

## குடைச்சுவாமிகள் பற்றிய நூல் வெளியீடு நேற்று



யாழ்ப்பாணம், ஓக.19
'அருட்சித்தர் குடைச் சுவாமிகளும் யோகமும் மனித மாண்பும்' மலர் வெளியீட்டு விழா நேற்றுத் திங்கட்கிழமை அகில இலங்கை இந்து மாமன்றத்தில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.
வேதாந்த மடம் ஸ்ரீமத் வேத வித்தியாசாகரர் சுவாமிகள் ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் ஆசியுரையைத் தொடர்ந்து சாயிமாதா இராஜராஜேஸ்வரியின் சிறப்புரை இடம் பெற்றது. பிரதம விருந்தினர்களாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், நல்லூர் கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி குமாரசிங்கம், ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி திருநாவுக்கரசு, யூரோவில் தொழிலதிபர் இராமதாசன், சட்டத்தரணி பதில் நீதிபதி க.கேசவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
பண்டிதர் வ.ஆ.தங்கமயில் நூலை வெளியிட்டு வைக்க முதல் பிரதியை திருமதி விக்னேஸ்வரி கந்தையா பெற்றுக் கொண்டார். நூலாசிரியர் ப.அச்சுதராஜா ஏற்புரை நிகழ்த்தினார். (கு-7)

## காலபோக நெல் உற்பத்தி யாழில் இம்முறை வீழ்ச்சி

### கடந்த 5 வருடங்களில் இது மோசமான நிலை

யாழ்ப்பாணம், ஓக. 19
யாழ்.மாவட்டத்தில் கடந்த வருட கால போக நெல் உற்பத்தியில் அதிகளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவருகிறது.
கடந்த 5 வருடங்களுடன் ஒப்பிடுகையில் இது மோசமான வீழ்ச்சி என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்த அதிகளவான வீழ்ச்சிக்கு காலபோகத்தில் ஏற்பட்ட கால நிலை மாற்றங்களே காரணம் எனக் கூறப்படுகிறது.
கடந்த 2008-2009 ஆம் ஆண்டு காலபோகத்தில் 8 ஆயிரத்து 752 ஹெக்ரேயரில் நெல் உற்பத்தி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு 4 ஆயிரத்து 349 ஹெக்ரேயரில் செய்கை பண்ணப்பட்டபோது 20 ஆயிரத்து 195 மெற்றிக் தொன் அறுவடை கிடைக்கப்பெற்றது.
கடந்த 2009-2010 ஆம் ஆண்டு காலபோகத்தில் 9 ஆயிரத்து 297 ஹெக்ரேயரில் நெல் உற்பத்தி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு 3 ஆயிரத்து 844 ஹெக்ரேயரில் செய்கை பண்ணப்பட்டபோது 25 ஆயிரத்து 210 மெற்றிக்தொன் அறுவடை கிடைக்கப் பெற்றது.
கடந்த 2010-2011 ஆம் ஆண்டு காலபோகத்தில் 10 ஆயிரத்து 512 ஹெக்ரேயரில் நெல் உற்பத்தி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு 2 ஆயிரத்து 589 ஹெக்ரேயரில் செய்கை பண்ணப்பட்டபோது 25ஆயிரத்து 249 மெற்றிக்தொன் அறுவடை கிடைக்கப் பெற்றது.
கடந்த 2011-2012 ஆம் ஆண்டு காலபோகத்தில் 10 ஆயிரத்து 520 ஹெக்ரேயரில் நெல் உற்பத்தி மேற்கொள்ள திட்டமிடப்பட்டு 2 ஆயிரத்து 581 ஹெக்ரேயரில் செய்கை பண்ணப்பட்டபோது 26ஆயிரத்து 636 மெற்றிக்தொன் அறுவடை கிடைக்கப் பெற்றது.
கடந்த 2012-2013 ஆம் ஆண்டு காலபோகத்தில் 11 ஆயிரத்து 78 ஹெக்ரேயரில் நெல் உற்பத்தி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு 2 ஆயிரத்து 23 ஹெக்ரேயரில் செய்கை பண்ணப்பட்டபோது 11ஆயிரத்து 96 மெற்றிக்தொன் அறுவடை கிடைக்கப்பெற்றது.
கடந்த 2013-2014 ஆம் ஆண்டு காலபோகத்தில் 10 ஆயிரத்து 737 ஹெக்ரேயரில் நெல் உற்பத்தி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு 2 ஆயிரத்து 364 ஹெக்ரேயரில் செய்கை பண்ணப்பட்டபோது 8 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் அறுவடையே கிடைக்கப்பெற்றது.
கடந்த 5 வருட காலப் பகுதிக்குள் இந்த வருட கால போகத்திலேயே அதிகளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அடுத்த வருட காலபோகத்திலும் எதிர்பார்த்தளவு அறுவடை கிடைக்கப் பெறாது என எதிர்பார்க்கப்படுகிறது. (கு-14)

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் மாதாந்த ஓய்வூதியம் வேண்டும்

### வலியுறுத்துகிறது தொழிற்சங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 19
கூட்டுறவு ஊழியர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்தி அவர்களின் வாழ்வு சிறக்க வழி அமைக்க வேண்டும் என்று கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.
இது குறித்து அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம், 1978 ஆம் ஆண்டு தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு ஊழியர் நலன் தொடர்பான செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தி வந்தது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சங்கத்தின் செயற்பாடு தடைப்பட்டது. தற்போது சங்கத்தின் தேவை பலராலும் உணர்த்தப்பட்டு அதனை மீண்டும் புனரமைத்து அதே பெயர் பதிவுடன் மீண்டும் செயற்பட வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பலர் முன் வைத்தமையால் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டு வருகின்றது.
குறைந்த ஊதியத்துடன் நிறைவான சேவைகளை ஆற்றி வரும் பணியாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை அதிகரித்து வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.
ஊழியர்களுக்கும் பணிகொள்வோருக்கும் இடையே ஏதாவது பிணக்குகள் ஏற்பட்டால் அல்லது ஊழியர்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட்டால் அவ்விடயம் தொடர்பாக கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க நிர்வாகம் அது குறித்து உரியவர்களுடன் கலந்துரையாடி உண்மைகளை கண்டறிந்து அதனை சுமுகமான முறையில் தீர்க்க ஆவன செய்யும்.
கூட்டுறவு ஊழியர் ஒருவர் நேரடியாக நிதி மோசடியோடு சம்பந்தப்பட்டு அது உண்மை என நிரூபிக்கும் சந்தர்ப்பத்தில் சங்கம் அவருக்கு எந்தவிதமான உதவிகளையும் வழங்க மாட்டாது. கூட்டுறவு ஊழியர் ஒருவர் திட்டமிட்டுப் பழிவாங்கப்பட்டால் அவருக்காகச் சட்ட ஏற்பாடுகளையும், ஆலோசனைகளையும் வழங்க சங்கம் நேரடியாக ஆவன செய்யும்.
எதிர்காலத்தில் வடக்கு மாகாண சபை, கூட்டுறவு ஊழியர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தி கூட்டுறவு ஊழியர் வாழ்வு சிறக்க வழி அமைக்க தற்போதைய நிர்வாகம் தீர்மானித்துள்ளது.
மேலும் சங்கங்களின் உறுப்பினர்கள் தம்மை வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் உறுப்பினராக இணைத்து தமது நலனில் அக்கறை கொண்டு செயற்படுமாறு கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கேட்டுக் கொள்கின்றது- என்றுள்ளது. (கு-17)

## பனங்களி சேகரிக்கும் திட்டம் கைதடியில்

### பனை அபிவிருத்திச் சபை மேற்கொள்ளும்

யாழ்ப்பாணம், ஓக. 19
பனங்களியைச் சேகரிக்கும் திட்டம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இம்முறை போகத்தின் போது பனம் பழத்தை கூடுதலாகச் சேகரித்து அதில் இருந்து பனங்களியைப் பெற்று அதை பாதுகாப்பான முறையில் சேமிக்கும் திட்டம் ஒன்றைப் பனை அபிவிருத்திச்சபை ஆரம்பித்துள்ளது.
இந்தப் பனங்களியை சேமிக்கும் திட்டத்தில் 40 பேர் இணைக்கப்பட்டு, எதிர்வரும் 27 ஆம் திகதி அவர்களுக்கு இது தொடர்பான பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது.



கைதடியில் உள்ள பனை ஆராய்ச்சிநிலையத்தில் வைத்து பனங்களியைச் சேமித்தல் தொடர்பான பயிற்சி வழங்கப்படவுள்ளது.
பனங்களியைக் கூடுதலாகச் சேமிப்பதன் மூலம் பனம் பொருள் உணவுப் பண்டங்களை அதிகளவில் தயாரித்து விற்பனைக்கு விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (கு-17)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மனித குலத்துக்கு மாறான செயல்

கலப்படம், கலப்படம் எங்கும் எதிலும் கலப்படம். இப்படி ஒரு சினிமா பாடல் உண்டு. விவசாயிகள் பயன்படுத்தும் இரசாயன உரம் ஒன்றை பனங்கட்டி தயாரிப்பதற்கு ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் செயற்படும் பனங்கட்டி தொழிற்சாலை ஒன்று பயன்படுத்தியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பான செய்தியை அறிந்த போது மேற்கண்ட பாடல் வரிகள்தான் நினைவுக்கு வந்தன.

இரகசியத் தகவல் ஒன்றையடுத்து, குறித்த தொழிற்சாலையை திடீர் சோதனையிட்ட போது இரசாயன உரம் கலந்து தயாரிக்கப்பட்ட 125 கி.கிராம் பனங்கட்டி கண்டுபிடிக்கப்பட்டதாக ஊர்காவற்றுறை பொது சுகாதார பரிசோதகர் கே.சஞ்சீவன் என்பவர் தெரிவித்துள்ளார். மனிதர்கள் உணவாகப் பயன்படுத்தினால் பெரும்பாதிப்புகள் ஏற்படலாம் என்று அஞ்சப்படுவதாகும் இந்த இரசாயனம்.

இந்த விடயம் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்த போது, குறித்த தொழிற்சாலையை மூடும்படியும், அதன் முகாமையாளரை அடுத்த நாள் நீதிமன்றில் முன்னிலையாகும்படியும் நீதிவான் உத்தரவிட்டிருக்கிறார். அந்தப் பிரதேசத்திலுள்ள ஏனைய தொழிற்சாலைகளையும் சோதனையிடும்படி உத்தரவிடப்பட்டிருப்பது தெரியவருகிறது.

முன்னர் பொஸ்பொரிக் அமிலம் பனங்கட்டி தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும், இப்பொழுது அதற்குப் பதிலாக இந்த இரசாயன உரம் மிக மலிவாகவிருப்பதால் தொழிற்சாலையால் இது பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பனங்கட்டி உற்பத்தியும், பாவனையும் யாழ்ப்பாணத்திலும் தமிழ் மக்கள் மத்தியிலும் நினைவுக்கு முந்திய காலத்திலிருந்தே புழக்கத்தில் இருந்து வரும் ஒரு அரும்பொருள். கரும்பு வெல்லம், கித்துள், கருப்பட்டி மற்றும் சீனி போன்ற பொருள்கள் பெரும்பாலும் இனிப்புக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் பனங்கட்டி ஓர் ஆயுள்வேத மருந்தாகவும் பயன்படுகின்றது. அதன் சுவை, மணம் மற்றும் இனிப்புத் தன்மையாவும் ஏனைய இனிப்புப் பொருள்களில் இருந்து வேறுபடும். குழந்தைப் பேறு காலங்களில் கிராமங்களில் தாய்மாருக்கு கை மருந்துகளுடன் பனங்கட்டியே அதிகமாக சேர்மானமாக பயன் படுத்தப்படுவதுண்டு. கைக்குழந்தைகளுக்கு உள்ளூர் மருத்துவர்கள் வழங்கும் மருந்துகளில் பனங்கட்டி சேர்த்து குழைத்து பருக்கும்படி கூறுவதைக் கேட்டிருக்கின்றோம். ஆயுள் வேத மருந்துகளிலும் இந்தப் பொருள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆயுள்வேத மருத்துவர்கள் சில பலவேளைகளில் தாம் வழங்கும் மருந்துகளுடன் பனங்கட்டியையும் சேர்த்துப் பயன்படுத்துமாறு கூறுவதை கேட்கலாம். பனங்கட்டியைத் தவிர வேறு இனிப்புப் பண்டங்களைப் பாவிக்க வேண்டாம் என்று வலியுறுத்தும் சந்தர்ப்பங்களும் உண்டு.

இவ்வாறு பயன்படுத்தப்படும் பனங்கட்டி, பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் கூறத் தேவையில்லை. பாரம்பரிய முறையில் கிராமங்களில் தயாரிக்கப்படும் பனங்கட்டிகளில் அவைக்கே உரிய சுவை, மணம் மற்றும் மருந்துத் தன்மை காணப்படும்.

இவ்வளவு மதிப்பு மிக்க ஒரு பொருளை, யாழ்ப்பாண மண்ணுக்கே தனித்துவ மதிப்பினை வழங்கிக் கொண்டிருக்கும் பனங்கட்டியை, வெறும் இலாப நோக்கம் கருதி கலப்படம் செய்து விற்றிருக்கிறார்கள் என்பது மிகவும் கவலை தருவது மட்டுமல்ல, அருவருக்கத் தக்கதும், கண்டிக்க வேண்டியதுமாகும். மருந்தாகப் பயன்படும் பொருளில் மனித உணவுக்குதவாத அமிலத்தன்மை கொண்ட உரத்தைக் கலந்தார்கள் என்றால், எத்தனை தாய்மார்கள்; குழந்தைகள் வெளியில் தெரியாமல் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை நினைத்து பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், வெளியூர்களில் இருந்து வருகிறவர்கள், தென்னிலங்கை சிங்கள மக்கள் மாத்திரமன்றி, வெளிநாட்டவர்களும் கூட யாழ்ப்பாணத்திலும், குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் விரும்பி வாங்கிச் சாப்பிடும் பொருள்களில் பனங்கட்டியும் புழுக்கொடியலும் இரண்டு பிரதான பொருள்கள். அவைகள் அதிகமாக விற்பனையாகின்றன என்பதற்காக அதிகமாக உற்பத்தி செய்து விற்பனையை அதிகரித்துக்கொள்ள உற்பத்தியாளர் ஆர்வம் கொள்வதில் தவறில்லை. அதற்கு வேறு தொழில் முறைகளைப் பயன்படுத்த வேண்டுமேயன்றி, மனித உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பொருள்களை கலப்படமாக பயன்படுத்துவதாகாது. அவ்வாறு செய்வது மனித குலத்துமாறான கொடும் செயலாகவே கணிக்கப்பட வேண்டும்.


இந்த விடயம் இப்பொழுது பரவலாக அடிபடத் தொடங்கியிருப்பதால் நிச்சயமாக பனங்கட்டி விற்பனையில் வீழ்ச்சியேற்படக்கூடும். ஒரு பகுதியில் நடந்துள்ள மோசடியால் நேர்மையான ஏனைய உற்பத்தியாளர்களும் பாதிப்புக்குள்ளாகும் நிலைமை.

இந்த நிலைமையை இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து சீர்செய்து, பனங்கட்டிகள் முறையாகவும், சுகாதார முறைப்படியும் தயார் செய்யப்படுவதை உறுதி செய்து பராமுறை செய்வது அவசியம். அதன் மூலம் பனங் கட்டிப் பாவனையும் விற்பனையும் வீழ்ச்சியுறுவதை தடுப்பார்களாக.

# தேர்தலில் வெற்றிபெற மஹிந்த அரங்கேற்றிவரும் ஜாலங்கள்

## 'விசுவாசி'யான சீனாவை மடக்கிப்பிடிக்க பொறி வைத்திருக்கும் மோடியும் அமெரிக்க அரசும்

சிங்கள மூலம் : மவ்பிம
தமிழில் : விஸ்ரீ



அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஒன்றிணைந்து இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப் போவதாகப் பயமுறுத்தினால், ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் எமது தலைவருக்கு வாக்களிப்பார்களா? நவிப்பிள்ளையின் சர்வதேச விசாரணை காரணமாக உலக அரங்கில் இலங்கை தனிமைப் படுத்தப்பட அரசு வழியேற்படுத்தியுள்ளது என்று எதிர்க் கட்சிகள் பரப்புரை செய்தால் மக்கள் அதனை நம்புவார்கள் தானே!

இவை, ஜனாதிபதித் தேர்தலை மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் நடத்துவதென அரசு தீர்மானித்ததை அடுத்து அரச தரப்பினர் மத்தியில் தலை தூக்கியிருந்த சந்தேகங்களாகும்.

உலக நாடுகள் எங்களுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றன என்று நாம் பரந்த அளவில் பரப்புரை செய்தால், மக்கள் எமது பக்கமே நிற்பார்கள் என்று மேற்குறிப்பிட்ட சந்தேகங்களுக்கான தீர்வு குறித்தும், அதே அரச தரப்பினர் முடிவு செய்து தம்மைத் தாமே திருப்திப்படுத்திக் கொண்டனர்.

இதன் பின்னரே பிலிப்பைன்ஸ் நாட்டுக்கான பாப்பரசரின் பயணத்துடன் அவரை இலங்கைக்கு வரவழைத்து விடுவதற்கான முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் எதிர்வரும் ஜனவரியில் இடம்பெறவுள்ள பாப்பரசரின் இலங்கைக்கான பயணம் தொடர்பாக இந்த நாட்டின் கத்தோலிக்க தேவாலயங்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் தலையெடுத்துள்ளன. பாப்பரசரின் இலங்கைக்கான பயணத்தின் போது தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்து அவரைக் கருத்து வெளியிட இடமளித்து அதன் மூலம் மஹிந்தவுக்கு மனக் கஷ்டம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள கொழும்பு பேராயர் ஒரு புறம் திட்டமிடும் நிலையில், மறு புறத்தில் மன்னார் ஆயரோ பாப்பரசரை வட பகுதிக்கு வரவழைத்து - மன்னார் மடு தேவாலயத்துக்கு பயணம் மேற்கொள்ள வைப்பித்து, தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்து அவரைக் கருத்து வெளியிட வைப்பித்து, அதன் மூலம் மஹிந்தவின் மனதை நோக வைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

இந்த விடயத்தில் பாப்பரசர் எவ்விதம் செயற்படுவார் என்பது குறித்து இது வரை அரசு கூட எதுவும் அறியாது. நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் சொல்ஹெயிமோ, பிரிட்டன் பிரதமர் கமரூன் போன்று இலங்கைக்கான பயணத்தின் போது மஹிந்த தரப்பினருக்கு வலிக்கும் விதத்தில் வட பகுதித் தமிழ் மக்களது பிரச்சினைத் தீர்வை வலியுறுத்திக் கருத்து வெளிப்படுத்துமாறு பாப்பரசரைக் கேட்டுக் கொண்டுள்ளார். அந்த வகையில் பாப்பரசரின் இலங்கைக்கான பயணம் அரசின் எதிர்பார்ப்புக்குச் சாதகமான பயனை நல்குமா என்பது சந்தேகத்துக்கு உரியதொன்றே.

மஹிந்த அரசின் மற்றொரு முயற்சி, இந்தியாவும், மோடியின் தலைமையிலான அரசும் மஹிந்த அரசுக்கு ஆதரவான நிலையில் உள்ளதாகக்காட்டிக் கொள்வதாகும். அதன் பிரகாரம், மஹிந்தவுக்கு மிக நெருக்கமான சுப்பிரமணியம் சுவாமியைப் பயன்படுத்தி பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றை இலங்கைக்கு வரவழைக்க அரசு திட்டமிட்டது. சுப்பிரமணியம் சுவாமி உட்பட்ட அந்தக் குழுவை வரவழைத்து இந்த நாட்டு ஊடகங்களுக்குப் பேட்டியளிக்க வைத்து, இந்திய மத்திய அரசு மஹிந்த அரசுக்கு ஆதரவாக இருப்பதாக பெரும் பரப்புரையொன்று மேற்கொள்ளப்பட்டது. சுப்பிரமணியம் சுவாமி ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில் இந்த நாட்டின் தமிழ் மக்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்க முடிந்ததென்றால், இந்தத் தடவை மஹிந்தவுக்கு வாக்களிக்க மறுப்பதற்கு எதுவித காரணமும் இருக்க இயலாதெனக் கூறியிருந்தார். பொதுவாக மஹிந்த தனது நெருங்கிய நண்பர்களாகக் கருதும் சீனாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இங்கு வந்திருந்த வேளையில் அவர்களில் எவரும் கூட இத்தகைய கருத்தொன்றை வெளியிட்டிருக்கவில்லை.

மஹிந்தவுக்கு வாக்களிக்குமாறு இந்த நாட்டு மக்களுக்குக் கூற பிறிதொரு நாடொன்றின் நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்கு எந்த வித உரிமையும் கிடையாது. அது இந்த நாட்டின் உள்ளக அரசியலில் தலையீடு மேற்கொள்ளும் ஒரு செயற்பாடாகும். ஆனால் மஹிந்த அரசோ சுப்பிரமணியம் சுவாமியைப் பயன்படுத்தி, இந்திய மோடி அரசு இலங்கையின் மஹிந்த அரசைப் பாதுகாக்கும் என நாட்டு மக்களுக்குக் காட்டிக்கொள்ள முனைந்துள்ளது.

உண்மையில் சுப்பிரமணியம் சுவாமி, பிரதமர் மோடியால் தூரத்தில் வைத்துக் கணிக்கப்படும் ஒரு அரசியல் வாதியென இந்திய ஊடகங்கள் விமர்சிக்கின்றன. அவர் தமது ஜனதாக் கட்சியைக் கலைத்துவிட்டு பா.ஜ.கவில் இணைந்து கொண்டபோதும், தனது அமைச்சரவையில் சுவாமிக்கு பிரதமர் மோடி இடமளிக்கவில்லை. 1994 இல் சந்திரிகா அரசு பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்ட சமயத்தில், இந்திய இராணுவத்தை அனுப்பி பிரபாகரனை இந்திய அரசு கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டு வர வேண்டுமென வற்புறுத்தியவர் இந்த சுவாமி. பிரபாகரனைக் கடும் எதிரியாகக் கருதிய போதிலும் காங்கிரஸ் அரசு கூட, சுவாமியின் அந்தக் கருத்தைக் கணக்கில் எடுக்கவில்லை. அதே போன்று சுவாமி இன்று வெளியிடும் கருத்தையும் பிரதமர் கணக்கில் எடுக்கப் போவதில்லை. அந்த வகையில் ஜனாதிபதித் தேர்தல் பிரகடனப் படுத்தப்படும்போது மோடியின் அரசு இலங்கை குறித்து என்ன நிலைப்பாட்டை மேற்கொள்ளுமென மஹிந்தவால் தற்போது ஊகிக்க இயலாது.

அதே சமயம், தென்னாசிய நாடுகளுக்கான சீன ஜனாதிபதியின் பயணத்தின் போது, அவரது இலங்கைக்கான பயணத்தை தனது பரப்புரைக்குப் பெருமெடுப்பில் பயன்படுத்த மஹிந்த அரசு திட்டமிட்டு வருகிறது. சீன ஜனாதிபதியின் இலங்கைப் பயணம் குறித்துத் திட்டமிட அண்மையில் பஸில் ராஜபக்ஷ சீனா சென்றிருந்தார். ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாகச் சீனா சென்ற பஸில், அந்த நாட்டின் பிரதிப் பிரதமரைச் சந்தித்து சீன ஜனாதிபதியின் இலங்கைப் பயணத்தின் போது கைச்சாத்திடப்படவுள்ள ஒப்பந்தங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளார். சீன ஜனாதிபதியின் இலங்கைப் பயணத்தை அரசுக்குச் சாதகமாகப் பயன்படுத்த மஹிந்த அரசு திட்டமிடுவதே பஸிலின் சீனாவுக்கான பயணத்தின் நோக்கமாயிருந்ததாக சீனத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அந்த வகையில் சீனா இலங்கைக்குப் பெருமளவிலான பொருளாதார உதவிகளை வழங்கவுள்ளதாகவும், அது மஹிந்த, சீனாவுடன் பேணிவரும் நல்லுறவு காரணமாகவே சாத்தியமாகிறது என்ற வகையில் நாட்டு மக்கள் மத்தியில் பெருமெடுப்பிலான பரப்புரையை மேற்கொள்ளவும் மஹிந்த அரசு தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இவை ஒரு புறமிருக்க இலங்கையிலுள்ள உலகின் பிரபல நாடுகளின் தூதராலயங்கள் தமக்கென பாதுகாப்புப் பிரிவு மற்றும் பாதுகாப்பு உயரதிகாரிகளைக் கொண்டிருந்த போதிலும், சீனா அண்மைக் காலம் வரை இலங்கையிலுள்ள தனது தூதராலயத்துக்கு அத்தகையதொரு உயரதிகாரியை நியமித்திருக்கவில்லை. ஆனால் அண்மையில் சீனா அத்தகையதொரு பாதுகாப்புப் பிரிவை உருவாக்கியிருப்பது இந்தியாவினதும் அமெரிக்காவினதும் கூர்ந்த கவனிப்புக்கு உள்ளாகியுள்ளது. ஆனால் சீனாவோ, பொருளாதார ரீதியிலல்லாது, பாதுகாப்பு ரீதியிலோ இராணுவ ரீதியிலோ இலங்கை குறித்துதான் கடும் அக்கறை கொண்டிருக்கவில்லை எனத் திரும்பத் திரும்பக் கூறி வருகிறது. உண்மையில் தற்போதுதான், பையிலிருந்து பூனைக்குட்டியல்லாது சீன நாட்டின் தனித்துவமான, பயங்கரத் தோற்றம் கொண்ட 'மஹரா' என்ற பாம்பு வெளிப்பட்டுள்ளது. அந்த வகையில் இலங்கைக்குக் கிட்டிய விரைவில் பயணம் மேற்கொள்ளவுள்ள சீன ஜனாதிபதி, மஹிந்தவைப் பலப்படுத்தவென வெறுமனே கைகுலுக்கி உறவை மேம்படுத்தவே வரப்போகிறார் எனக் கொள்ள இயலாது. இலங்கையைத் தமது நோக்கத்துக்குப் பயன்படுத்தும் திட்டத்துடன் வண்டியில் பூட்டப்பட்டுள்ள குதிரைக்கு முன்னால் கரட் கிழங்கைக் கட்டி வைப்பது போன்று, இலங்கை அரசுக்கு கரட் கிழங்கைக் காட்டித் தன் தேவையை நிறைவேற்றுவதே சீனாவின் திட்டம். ஆனால் இலங்கை அரசோ சீனாவின் 'மஹர' பாம்பு நடனத்தைக் காட்டி மஹிந்தவுக்கான ஆதரவை நாட்டு மக்கள் மத்தியில் உயர்வடைய வைக்கத் திட்டமிடுகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இடம்பெறவுள்ள மஹர பாம்பு நடன நிகழ்வின் மூலம், மோடியின் தலைமையிலான அரசு, அமெரிக்காவுடன் இணைந்து கற்றுத் தரப்போகும் பாடத்தை எதிர்கொள்ளும் நிலையே இலங்கை அரசுக்கு ஏற்படப்போகிறது. அதிலிருந்து மஹிந்தவால் தப்பித்துக் கொள்ள இயலப் போவதில்லை.

கட்டுரை

குமரன்

# உடல் ஆரோக்கியம் எமது கைகளில்





அரிசி, கோதுமை மா ஆகியவற்றின் பாவனையைக் குறைக்குமாறு மருத்துவர்கள் ஆலோசனை வழங்கி வருகின்றனர். தமது பிரதான உணவுகளாகக் காணப்படும் இவற்றை எவ்விதம் குறைப்பது என்பதில் மக்களிடையே குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. அரிசிச் சோற்றைத் தவிர்த்துவிட்டு எம்மவரால் இருக்கவே முடியாது. சோற்றை ஒருவேளை உண்ணாமல் விட்டால் கூட உடலில் சோர்வு ஏற்படுவதானதொரு உணர்வு இவர்களுக்கு ஏற்பட்டு விடுகின்றது. இதுவொரு மனதுடன் தொடர்புடைய விடயமாகவும் இருக்கலாம். ஆனால் அரிசி வகிக்கும் பிரதான இடம் தொடர்பாக எவரும் சந்தேகம் வெளியிடத் தேவையில்லை. எமது முன்னோர்கள் மூன்று வேளையும் அரிசிச் சோற்றையே உண்டனர். உடல் உழைப்பையே நம்பியிருந்த அவர்களுக்கு சோற்றை எவ்வளவுதான் உண்டாலும் உடலில் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. ஆனால் இன்று அரிசிக்குச் சமனான இடத்தில் கோதுமை மா அமர்ந்துவிட்டது. சோற்றைவிட ஏனைய உணவுகளைத் தயாரிப்பதில் இந்தக் கோதுமை மா முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆனால் இதில்தான் எதிர் வினையே அடங்கியுள்ளது.

கோதுமைத் தானியம் மொத்தமாகக் கொள்வனவு செய்யப்பட்டு இங்கு மாவாக மாற்றப்படுகின்றது. ஆனால் இந்த தானியத்தின் வெளி ஓடுகள் முழுவதும் அகற்றப்பட்டு ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. எஞ்சிய தானியத்தை அரைத்து மாவாக மாற்றும்போது அதில் அதிகளவு மாப்பொருள் இருப்பதைத் தவிர உடலுக்குத் தேவையான சத்துப் பொருள்கள் எவையுமில்லை. இதனால் கோதுமை மாவைப் பயன்படுத்துபவர்களின் இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு சடுதியாக உயர்ந்து செல்கின்றது. இதனால் தான் கோதுமை மாவின் பயன்பாட்டைக் குறைக்குமாறு மருத்துவர்கள் ஆலோசனை வழங்குகின்றனர்.

மேலும் தவிட்டுடன் கூடிய அரிசி உடல் நலத்துக்கு உகந்தது. ஆனால் நாம் தவிட்டை நீக்கிய பின்னர் அரிசியில் உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகளை உண்டு வருகின்றோம். இதுவும் உடல் நலத்துக்குக் கேடானது.

இந்த நிலையில்தான் அரிசியையும், கோதுமை மாவையும் உணவில் குறைந்த அளவில் சேர்த்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கீரை வகைகள், மரக்கறி வகைகள் , பழங்கள் ஆகியவற்றை எமது உணவில் அதிகளவில் சேர்க்குமாறும் கூறப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பயறு, கடலை, கௌப்பி ஆகிய தானியங்களில் மாப்பொருள் குறைவாக உள்ளதென்ற கருத்து எம்மிடையே நிலவி வந்தது. ஆனால் அது தவறென இப்போது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றையும் எமது உணவில் அளவோடு சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும் குரக் கன், ஆட்டா மா என்பனவற்றை உணவில் சேர்ப்பதால் இரத்தத்தில் குளுக்கோஸின் அளவை சீராகப் பேணிக்கொள்ள முடியும்.

ஆனால் இரசாயனங்கள் தெளிக்கப்பட்டு விற்பனைக்கு வரும் கீரை வகைகள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை உணவுடன் சேர்ப்பதால் வேறு பாதகமான விளைவுகளை நாம் தேடிக்கொள்ள வேண்டியதொரு நிலை உருவாகும். எனவேதான் அரிசிக்கும் கோதுமைக்கும் மாற்று வழியைத் தேடுவதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளது. அத்துடன் குரக்கனின் உற்பத்தி தேவைக்குப் போதியதாக இல்லாததால் அதன் விலை உச்சத்தைத் தொட்டு நிற்கின்றது.

எனவே தவிடு நீக்காத அரிசியை நாம் உணவில் சேர்ப்பதன் மூலமாக இந்தப் பிரச்சினையில் இருந்து ஓரளவு விடுபட முடியும். ஏனென்றால் அரிசி தாராளமாகக் கிடைக்கும் ஒரு பொருளாகக் காணப்படுவதும், அதன் விலை எம்மால் ஓரளவு தாங்கக் கூடியதாக இருப்பதுவும் இதற்கான காரணங்களாகும்.

மேலும் எமக்குத் தேவையான புரதச் சத்துக்கு சிறுமீன்களை நாம் உணவில் சேர்த்துக்கொள்ளலாம். தற்போது மீனின் விலையும் உயர்ந்து காணப்படுவதால் அதை வாங்குவது எமக்குச் சிரமத்தை ஏற்படுத்தினாலும் காலப்போக்கில் நிலைமை சீரடைந்து விடும்.

ஆகவே நாம் உடலைச் சீராக வைத்துக் கொள்ள விரும்பினால் எமது உணவுப் பழக்க வழக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியே ஆக வேண்டும்.

திருமதி தெய்வி தபோதரன்
தலைவர், யாழ்.விஞ்ஞான சங்கம்- பிரிவு C (மருத்துவ விஞ்ஞான பிரிவு)

# ‘சாகித்திய நிருத்திய வாத்திய பிருந்தா’



இசையும் நடனமும் தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்தவை. அவற்றின் சக்தியால் எமது உள்ளங்களைப் பலப்படுத்தும் நோக்கில் நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் நல்லூர்ச் சூழலில் பல்வேறு இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு பலராலும் ரசிக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் மருத்துவப் பிரிவு (Jaffna Science Association - Section c) 'சாகித்திய நிருத்திய வாத்திய பிருந்தா' எனும் பெயரில் மிருதங்க வித்துவான் எஸ்.துரைராஜாவின் நெறியாள்கையில் யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த கலைஞர்களின் ஆற்றுகைத் திறனாக ஒரு இசை நடன நிகழ்ச்சி இன்று 19 ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய இயந்திரமயமான வாழ்க்கை முறை காரணமாக மனித மனங்களில் குடிகொள்ளும் மன அழுத்தங்களையும் பல்வேறு விதமான நோய் நிலைகளையும் இசையின் துணையால் துடைத்தெறியும் முயற்சியே இந்த நிகழ்வாகும். சிறுவர் முதல் பெரியோர் வரை இசைக்கு மயங்காதவர்கள் எவருமில்லை. மெல்லிசையானது எமது எண்ணம், உணர்ச்சி மற்றும் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி ஆரோக்கியமான வாழ்வுக்கு வழி வகுக்கின்றது.

இந்த நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக இணை மருத்துவ விஞ்ஞான அலகு மாணவர்களால் 'ஆரோக்கியமாக வாழ்வோம்' எனும் தொனிப் பொருளில் குறிப்புகளும் வழங்கப்படும். அனைவரும் திரண்டு வந்து சிறிது நேரம் அமைதியான சூழலில் ஆழ்மனத்தை இசையின் லயத்தில் திளைத்து மகிழுமாறு யாழ்.விஞ்ஞான சங்கத்தின் பிரிவு சி (மருத்துவ விஞ்ஞானப் பிரிவு) வேண்டுகோள் விடுத்துள்ளது.

# சோதிடம் பலிக்கட்டும் நல்ல மழை பெய்யட்டும்

இந்த வருடத்தில் இனி வரும் மாதங்களில் போதிய மழை பெய்யும். பயிர்கள் செழித்து நல்ல விளைச்சல் கிடைக்கும் என்கிறார் உள்ளூர் சோதிடர் ஒருவர்.

நல்ல செய்தி. கேட்கவே மகிழ்ச்சி. குதூகலமாக இருக்கிறது. சோதிடர் சொன்னபடி நடந்தால் நாட்டுக்கும் நல்லது மக்களுக்கும் நல்லது.

கடந்த ஆண்டு ஆடிப்பிறப்பன்று (யாழ். குடாநாட்டில்) மழை பெய்தது. அப்போது அந்தச் சோதிடர் இந்த வருடம் (2013) மழை வீழ்ச்சி குறைவாகத்தான் இருக்கும் என்று கூறியிருந்தாராம். அவ்வாறே மழை வீழ்ச்சி குறைந்து பயிர்கள் கருகி அழிந்து விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கினர்.

அதன் தொடராக கடும் வறட்சி இன்றும் நிலவுகிறது. குடி தண்ணீருக்கு மனிதர்கள் மட்டுமன்றி கால்நடைகளும் அலைந்து திரியும் கொடுமையான நிலை நீடிக்கிறது.

இவ்வாறான நெருக்கடியான நேரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆவணி மாதப்பிறப்பன்று மழை பெய்துள்ளது.

இது குறித்து அந்தச் சோதிடர் கூறுகிறார்.

ஆடி மாதத்தின் முடிவிலும் ஆவணி மாதம் ஆரம்பிக்கும் வேளையிலும் மழை பெய்தால் நன்மையே. மாதப் பிறப்பிலேயே மழை பெய்து நிலம் குளிர்ந்து அனைவருமே மகிழ்வுற்றிருக்கின்றனர்.

"இந்த வருடம் போதியளவு மழை பெய்யும். பயிர்கள் செழிக்கும். நல்ல விளைச்சல் கிட்டும். விவசாயிகள் மகிழ்வுறுவர். மக்கள் நல்ல பயன்பெற்றுத் திளைப்பர்" என்றார்.

அவர் கூறிய சோதிடத்தின்படி நல்லது நடக்கட்டும்.





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்து போகும். மற்றவர்களுக்கு உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் சிக்கிக்கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களை விட்டுப் [illegible]டிப்பது நல்லது.



**இடபம்**: எளிதாக முடிய வேண்டிய விடயங்களைக் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். சகோதர வகையில் சங்கடங்கள் வரும். தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். வியாபாரத்தில் வேலை யாள்களை அனுசரித்துப் போவது நல்லது.



**மிதுனம்**: வீரியத்தை விட காரியம்தான் பெரிது என்பதை உணருவீர்கள். கண்டும் காணாமல் இருந்தவர்கள் வலிய வந்து பேசுவார்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளும் நாள்.



**கடகம்**: உங்களது அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். பழைய உறவினர், நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.



**சிங்கம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வரவேண்டிய பணம் கைக்கு வரும். உறவினர்கள் உங்களைப் புரிந்துகொள்வார்கள். வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கும்.



**கன்னி**: மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். குடும்பத்தில் சிறு வார்த்தைகள்கூட பெரிய தகராறில் போய் முடியும். யாருக்கும் பணம், நகை வாங்கிக் கொடுப்பதில் ஈடுபட வேண்டாம். தர்ம சங்கடமான சூழல்களைச் சமாளிக்க வேண்டிய நாள்.



**துலாம்**: உங்கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். சகோதரங்களால் பயனடைவீர்கள். புதிய நட்பு மலரும். தாயாரின் உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.



**விருச்சிகம்**: குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். பயணங்களால் பயனடைவீர்கள். நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்தவரைச் சந்திப்பீர்கள்.



**தனுசு**: சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களால் இலாபம் அதிகரிக்கும். புதுமை படைக்கும் நாள்.



**மகரம்**: எதிர்பார்ப்புகள் தடையின்றி முடிவடையும். நட்பு வட்டம் விரிவடையும். வெளி வட்டாரத் தொடர்புகள் விரிவடையும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உழைப்பால் உயர்வடை வீர்கள்.



**கும்பம்**: சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். பூர்வீகச் சொத்து பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகரிக்கும்.



**மீனம்**: நிறைவேறாத வேலைகள் முடியும். உறவினர்கள் மதிப்பார்கள். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தைத் திருப்பிக் கொடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

## நாளை

**ஆவணி-04 புதன்கிழமை | 20.08.2014**

திதி: தசமி பி.ப.12.04 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.இ.07.40 வரை
சுபநேரம்: 04.35-06.05 வரை
இராகுகாலம்: 12.05-01.35 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## சமயம் என்பது நம்முள்ளேயே இருக்கிறது

சமயமும் வாழ்வும் எந்த ஒரு தீர்க்கதரிசியையோ அல்லது நூலையோ சார்ந்திருக்கும்படி நேர்ந்தால், அந்த நூல்களும் சமயமும் அழிந்து போகட்டும். சமயம் என்பது நம்முள்ளேயே இருக்கிறது. நூல்களின் உதவி இல்லாமலும், சமயாச்சாரியார்களின் உதவி இல்லாமலும் தத்துவங்களை உள்ளொளி மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்; நூல்களும், ஆச்சாரியர்களும் பெரிதாகத் துணை புரிவது இல்லை, ஆயினும் நூல்களுக்கும் ஆச்சாரியர்களுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்; அதற்காக ஆச்சாரியார்களுக்கும் நூல்களுக்கும் அடிமைப்பட வேண்டியதில்லை. இறைவனாகக் கருதி, குருவை வணங்கு; ஆயினும் குருட்டாம்போக்கில் அவரைப் பின்பற்றாதே. உன்னால் முடிந்தவரை குருவிடம் பக்தி செலுத்து; ஆயினும் சொந்த முறையிலேயே நீ சிந்தித்துப்பார். எந்த மூட நம்பிக்கையாலும் உன்னைக் காப்பாற்ற முடியாது. உனது முக்தியை நீயே முயன்று தேடிக்கொள். இறைவனது தெய்வீக உதவி உனக்குக் கிட்டும் என்ற ஒரே எண்ணம் உனக்கு உறுதியாக இருக்கட்டும். சுதந்திரமும் மேலான அன்பும் இணை பிரியாமல் இருக்க வேண்டும். அப்போது தான் இந்த இரண்டில் எதுவும் பந்தமாகாது. இறைவனுக்கு நாம் எதையும் கொடுக்கத் தேவையில்லை; அவரே நமக்கு அனைத்தையும் கொடுக்கிறார். அவர் குருவிற்கெல்லாம் குரு. ஆன்மாக்களுக்கு எல்லாம் ஆன்மா. நாமே அவர். நாம் அவரிடம் அன்பு செலுத்துவதில் வியப் பென்ன? "வெப்பமும் புகையுமின்றி நிலையாக எரியும் சுடராக நாம் இருப்போம்".

# கூகுள் வலையமைப்பு கேபிள்களை கடித்துக் குதறிய சுறாக்கள்



கடலுக்கடியில் கூகுள் நிறுவன வலையமைப்புக் கேபிள்களை சுறாக்கள் கடித்துச் சேதப்படுத்தியுள்ளன. கூகுள் நிறுவனம் தனது நெட்வோர்க் பயன்பாட்டுக்காக கண்ணாடி இழை கேபிள்களை பசுபிக் கடலுக்கு அடியில் பதித்து உள்ளது.

இந்தக் கண்ணாடி இழைகள் சூப்பர் கார்ட் மெட்டீரியல் மற்றும், புல்லட் புரூப் போன்றவைகளால் உருவாக்கப்பட்ட பொருள்களால் மிகுந்த பாதுகாப்பாக மூடப்பட்டிருக்கும்.

அப்படி இருந்தும் இந்தக் கண்ணாடி இழை கேபிள்களைச் சுறாக்கள் கடித்துச் சேதப்படுத்தி உள்ளன. கடலுக்கு அடியில் பொருத்தப்பட்டு உள்ள கேபிள் இழைகளில் இருந்து சுறாக்களுக்கு மின்காந்த சமிக்ஞைகள் கிடைத்து இருக்கலாம், அதன் மூலம் கவர்ந்து இழுக்கப்பட்ட சுறாக்கள் கேபிளைக் கடித்து சேதப்படுத்தி இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 8 | | | | | 3 | |
| 2 | | | | 3 | | 8 | | |
| | 7 | | | | | | 2 | |
| 8 | 9 | | 5 | | 3 | 6 | | 2 |
| | 3 | | 9 | | 8 | | 1 | |
| 7 | | 1 | 6 | | 4 | | 8 | 9 |
| | 2 | | | | | | 6 | |
| | | 5 | | 9 | | | | 1 |
| | 8 | | | | | 5 | 9 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 3 | 5 | 4 | 9 | 2 | 6 | 1 |
| 6 | 1 | 9 | 2 | 8 | 7 | 3 | 5 | 4 |
| 2 | 4 | 5 | 3 | 6 | 1 | 7 | 8 | 9 |
| 4 | 3 | 2 | 6 | 1 | 5 | 8 | 9 | 7 |
| 9 | 5 | 8 | 7 | 2 | 3 | 1 | 4 | 6 |
| 1 | 6 | 7 | 4 | 9 | 8 | 5 | 3 | 2 |
| 8 | 2 | 1 | 9 | 5 | 4 | 6 | 7 | 3 |
| 5 | 7 | 4 | 1 | 3 | 6 | 9 | 2 | 8 |
| 3 | 9 | 6 | 8 | 7 | 2 | 4 | 1 | 5 |

# விடத்தல்தீவு யுனைட்டட் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக.19

மன்னார் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட இரண்டாம் தர அணிகளுக்கு இடையிலான விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில், விடத்தல்தீவு யுனைட்டட் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.



சம்பியன் பெற்ற அணியினர்

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டரங்கில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் முருங்கன் பொதுசன விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விடத்தல்தீவு யுனைட்டட் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

போட்டியின் ஆரம்பம் முதல் இறுதி வரை எந்த அணி வெல்லும் என்று தீர்மானிக்க இயலாத விதத்தில் ஆட்டம் விறுவிறுப்பாக அமைந்தது. இரு அணிகளும் அசத்தலாக ஆடிக் கொண்டிருந்தன. இருப் பினும் முருங்கன் பொது சன விளையாட்டுக் கழக அணிக்கு சவால் விடும் வகையில், ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத் தில் யுனைட்டட் அணியின் வீரர் நிதர்சன் தமது அணிக்காக முதலாவது கோலைப் போட்டார். அத்துடன் ஆட்டம் மேலும் சூடு பிடித்தது. பதில் கோலைப்போடுவதற்கு முருங்கன் விளையாட்டுக் கழகம் கடுமையாகப் போராடியது.

இருப்பினும் ஆட்டத்தின் 26 ஆவது நிமிடத்தில் யுனைட்டட் அணியின் வீரர் சுரேந் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி, தமது அணிக்காக இரண்டாவது கோலைப் போட்டார். இதனால் இடைவேளையின் போது ஆட்டம் 2:0 என்றநிலையில் முடிவுற்றது.

இரண்டாம் பாதியிலும் யுனைற்ரட் விளையாட்டுக் கழகம் தனது ஆதிக்கத்தைச் செலுத்தியது. இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகி 5 நிமிடங்களிலேயே, யுனைட்டட் அணியின் வீரர் தீபன் மூன்றாவது கோலை அடித்தார். இந்தக் கோல் அணியின் வெற்றியை உறுதி செய்தது.

இறுதி வரையில் முருங்கன் விளையாட்டுக் கழகம் கோல் போட முயற்சித்த போதும், யுனைட்டட் அணியின் பின்கள வீரர்களின் சிறப்பான ஆட்டத்தினால், முயற்சி சாத்தியப்படாமல் போனது. இறுதியில் விடத்தல்தீவு யுனைட்டட் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சிறந்த வீரனாக விடத்தல்தீவு யுனைட்டட் விளையாட்டுக் கழக அணி வீரன் அருள்ராஜ் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக யுனைட்டட் விளையாட்டுக்கழக அணி வீரன் லெனின் தெரிவானார். (5-23-56)

## கடற்கரை கரப் பந்தாட்டம்



யாழ்ப்பாணம், ஒக.19

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் மாவட்டங்களுக்கு இடையிலான கடற்கரை கரப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி வல்வெட்டித்துறையில் இடம் பெறவுள்ளது. (5-23)

## வடக்கு - தெற்கு நட்புறவு ஆட்டம்



யாழ்ப்பாணம், ஒக. 19

வடக்கு - தெற்கு நட்புறவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி சுற்றுப் போட்டியில் கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணிகள் மோதவுள்ளன.

எதிர்வரும்சனிக்கிழமைகாலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு டி.எஸ். சேனநாயக்கா கல்லூரி அணி மோதவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு இளவாலை புனித ஹென்றயரசர் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி அணி மோதவுள்ளது. (5-23)

## சென்.பிலிப் நேரிஸ், உடுப்பிட்டி யூத் வெற்றி

கரணவாய், ஒக.19

பார்வையாளர்களின் பலத்த கரகோசத்தின் மத்தியில் இடம் பெற்ற ஆட்டத்தில் கடும் போட்டியின் மத்தியில் 1:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது, செம்பியன்பற்று சென்.பிலிப் நேரிஸ் விளையாட்டுக்கழகம்.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 9பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

அதில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் செம்பியன்பற்று சென். பிலிப்நேரிஸ் விளையாட்டுக் கழகம், வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகமும் மோதின. மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணியினரின் கால்களுக்குள் அகப்பட்ட பந்து அங்குமிங்கும் அலைக்கழிந்து கொண்டிருந்தது. ஆனால் இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 2 ஆவது நிமிடத்தில் சென்.பிலிப்நேரிஸ் அணி வீரர் டிலான் எதிரணியினரை ஏமாற்றி ஒரு கோலைப் போட அதுவே அந்த அணிக்கான வெற்றிக் கோலாக அமைந்தது. இறுதியாக இரு அணியினரும் மேலதிக கோல்கள் போடாதநிலையில் 1:0 என்ற கோல் அடிப்படையில் சென்.பிலிப் நேரிஸ் அணி வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக்கழகமும், வெற்றிலைக்கேணி சென்.செபஸ்தியார் விளையாட்டுக் கழக 'பி' அணியும் மோதின. ஆட்டத்தின் போக்கை இறுதிவரை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த யூத் விளையாட்டுக் கழகம் 5:0 என்ற கோல்கள் அடிப்படையில் இலகுவாக வெற்றி பெற்றது.

அந்த அணி சார்பாக ம.பிரசாந், ரமிலன் மற்றும் ஜெனிற்றன் ஆகியோர் தலா ஒரு கோலையும், இ.பிரசாத் 2 கோல்களையும் போட்டனர். (5-108)



வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கம், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையே நடத்திய பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தெடரில் 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான இரட்டையர் திறந்த போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற மைதிலி சின்னப்பு, மேரிநிர்மலா ஹரிகரன் ஆகியோர். (5-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 19

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி வீண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (5-23-108)

* * *

யாழ்ப்பாணம், ஒக. 19

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நெடியகாடு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செம்பியன்பற்று சென்.பிலிப்பு நேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நகர்கோவில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (5-23-108)

* * *

யாழ்ப்பாணம், ஒக. 19

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன்; உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உருத்திரபுரம் (பச்சை) அணியை ஏதிர்த்து கனகபுரம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதிய பாரதி விளையாட்டக்கழக அணியை எதிர்த்து சந்திரஉதயா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பூநகரி அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளைபூமி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் ஒருமணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உருத்திரபுரம் (நிலம்) விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செந்தாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செந்தாரகை விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து ஸ்கந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (5-23)

# அசத்தியது மயிலங்காடு ஞானமுருகன்

கரணவாய், ஒக.19

பலத்த போராட்டத்தின் பின்னர் ஊரெழு றோயல் அணியை வீழ்த்தியது மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம்.

இருந்த போதும் புள்ளிப் பட்டியல் அடிப்படையில் இரு அணிகளுமே அரையிறுதிப் போட்டியில் தகுதி பெற்று மோதவுள்ளன.

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணிமன்ற ஆதரவுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட லீக் முறையிலான சுற்றுப் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும், ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் தாம் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல என்று நிரூபிக்கும் வகையில் சம பலத்துடன் மோதினர்.

ஞானமுருகன் விளையாட்டுக் கழக வீரர் ஜெகன் ஒரு கோலைப் போட 1:0 என்று முன்னிலை பெற்றது ஞானமுருகன் அணி. அதன் பின் ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது.

இரு அணியும் மேலதிக கோல் போடாத நிலையில் 1:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின்பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் றோயல் அணிவீரர்கள் உத்வேகத்துடன் ஆடினர். ஆனாலும் அதற்கு ஈடு கொடுக்கும் விதத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியினர் தாக்குப் பிடித்தனர்.

இரு அணியினரது ஆட்டத்திலும் அனல் பறந்தது.

ஆட்டம் நிறைவடைய 5 நிமிடங்கள் இருக்கும் போது மீண்டும் ஜெகன் அசத்தலான கோல் ஒன்றைப் போட 2:0 என்ற கோல்கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் ஊரெழு றோயல் அணி தோல்வி அடைந்தாலும் நடைபெற்ற போட்டிகளின் அடிப்படையில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (5-108)

# விடைபெற்றார் மஹேல











மிகவும் கடினமான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுத்துள்ளேன். எனக்கு பல வழிகளிலும் உதவி ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது சிரம் தாழ்த்திய நன்றிகளை தெரிவித்துகொள்வதாக கண்ணீர் நிரம்பிய கண்களுடன் தெரிவித்தார் மஹேல ஜெயவர்த்தன. இலங்கைக் கிரிக்கெட் அணியின் வரலாற்று நட்சத்திரமும் சரித்திர நாயகனுமாகிய மஹேல ஜெயவர்த்தனவின் 17 வருட டெஸ்ட் வாழ்க்கை நேற்றுடன் நிறைவுக்கு வந்தது.
இலங்கை அணி நேற்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் பின்னர் பட்டாசு கொளுத்தி ரசிகர்கள் ஆரவாரம் செய்ய, மஹேல ஜெயவர்த்தனவை அணி வீரர்கள் தோளில் சுமந்து வர கண்ணீர் நிரம்பிய கண்களோடு அவர் கிரிக்கெட் ரசிகர்களைப் பார்த்து தனது கைகளை அசைத்து பிரியாவிடை பெற்றார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, நாலந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், எஸ்.எஸ்.சி கழகம், இலங்கை கிரிக்கெட் சபை உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களின் சார்பாக மஹேல ஜெயவர்த்தனவுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டதோடு ஞாபகார்த்த சின்னங்களும் வழங்கப்பட்டன.

## மஹேல ஜெயவர்த்தன் உணர்வுபூர்வமாக ஆற்றிய உரை

### சிரம் தாழ்த்தி நன்றி தெரிவிக்கின்றேன்

நான் அதிர்ஷ்டசாலி. இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியில் இதுவரை காலமும் விளையாட கிடைத்தமையையிட்டு சந்தோசமடைகின்றேன். எனது டெஸ்ட் வரலாற்றில் பலகோணங்களில் உதவிசெய்த அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுளேன். முதலாவதாக இலங்கை கிரிக்கெட் சபைக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு எனக்கு முதன் முதலாக பயிற்சிகளை வழங்கிய ஜெயந்த மெண்டிஸ் மற்றும் பாடசாலைக் காலத்தில் பயிற்சிகளை வழங்கிய பயிற்சியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துகொள்கின்றேன். மேலும் எனது பாடசாலைக்கும், பாடசாலை நண்பர்களுக்கும், எஸ்.எஸ்.சி. கிரிக்கெட் கழகத்திற்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.
எனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த பின்னர் எஸ்.எஸ்.சி. கிரிக்கெட் கழகம் பல வழிகளில் இதுவரை எனக்கு உதவி செய்துள்ளது. நான் தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் சிரேஷ்ட வீரர்கள் பலருடன் விளையாட வாய்ப்புக் கிட்டியுது. அர்ஜுண ரணதுங்க, அரவிந்த டி சில்வா, ரொசான் மஹாநாம, ஹஷன் திலகரட்ன, சனத் ஜெயசூரிய, ஆகியோருக்கும் களத்தில் இருக்கும் போது ஒத்துழைப்புகளை வழங்கிய முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ் உள்ளிட்டோருக்கும், பயிற்சியாளர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.
ஆரம்பத்தில் இருந்து எனக்கு பல வழிகளில் உந்துசக்தியாக இருந்து உதவி வந்த எனது பெற்றோருக்கும், எனது பல துன்பங்களில் பங்கேற்று உறுதுணையாக இருந்த மனைவிக்கும், எனது கிரிக்கெட் ரசிகர்களுக்கும் நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது கிரிக்கெட் வரலாற்றில் சரி பிழைகளைச் சுட்டிக்காட்டி ஆதரவு வழங்கிய ஊடக நண்பர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

### சரியான தீர்மானம்

நான் மிகவும் கடினமான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுத்துள்ளேன் என்று நினைக்கின்றேன. சுயமாகவே இந்தத் தீர்மானத்தை எடுத்தேன். இதன் பின்னணியில் யாரும் இல்லை. எனது உடல்நலம் மற்றும் குடும்பம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே இந்த தீர்மானத்தை எடுத்தேன். இதன் மூலம் ஏனைய இளைய வீரர்களுக்கு அணியில் விளையாட வாய்ப்புக்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.
149 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள நான் 150 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பின்னர் தான் ஓய்வு பெற வேண்டும் என்ற எண்ணம் இருந்தது இல்லை. வீரன் என்ற வகையில் நான் அணியின் வெற்றியினைக் கருத்திற் கொண்டு மாத்திரமே விளையாடுவேன். எனவே போட்டிகளில் விளையாடிய எண்ணிக்கையோ அல்லது ஓட்ட எண்ணிக்கையோ ஒன்றும் பெரிதான விடயம் இல்லை.
17 வருடங்களில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளமை சாதாரண ஒரு விடயம் இல்லை. நான் கடந்த வந்த பாதையை திரும்பி பார்க்கும் போது மிகவும் அழகாக இருக்கின்றது. இந்த 17 வருட காலத்தில் எனது வாழக்கையில் பல விடயங்களைக் கற்றுக்கொண்டுள்ளேன்.

### நல்ல மனிதர்களில் நண்பன் குமார் சங்கக்காரவும் ஒருவர்

நண்பன் குமார் சங்கக்காரவுடன் கடந்த ஆறு வருட காலம் ஒன்றாக விளையாடியமையையிட்டு சந்தோசமடைகின்றேன். அவர் மிகவும் திறமையான வீரர். அணிக்காக மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுபவர். நான் கண்ட நல்ல மனிதர்களில் நண்பன் சங்கக்காரவும் ஒருவர். நான் இறுதியாகக் களத்தில் இருக்கும் போது குமார் சங்கக்கார 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து செல்லும் போது மிகவும் வேதனையாக இருந்தது. காரணம் டெஸ்ட் அரங்கில் இருவரும் இறுதியாக இணைப்பாட்டமாக விளையாடியது அதுவே இறுதித்தருணம். சங்கக்கார டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவது தொடர்பில் எனக்குத் தெரியாது. எனினும் சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தை அவர் எடுப்பார்.

### தொப்பிக்கு வீட்டில் ஓர் இடம்!

நான் அணிந்து இருக்கும் இந்த தொப்பிக்கு மிகவும் மரியாதை செலுத்துகின்றேன். இந்த தொப்பியை கடந்த 15 வருடங்களுக்கு மேலாகப் பாவிக்கின்றேன். இந்த தொப்பி யாருக்குமே கிடைக்காத ஒன்று. நான் ஒரு அதிர்ஷ்டசாலியாகவே கருதுகின்றேன். இதேவேளை குமார் சங்கக்காரவின் தொப்பியை கையில் எடுக்க முடியாதளவுக்கு சேதமாகியுள்ளது. ஆனால் அதனையே அவர் அணிந்து விளையாடுகின்றார். அந்தளவுக்கு நாம் போட்டிக்கும் இந்த தொப்பிக்கும் மரியாதை செலுத்துகின்றோம். மேலும் இந்த தொப்பியை ஞாபகமாக வைப்பதற்கு வீட்டில் ஓர் இடத்தையும் ஒதுக்கியுள்ளேன்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

## தொடரைக் கைப்பற்றியது இலங்கை



பாகிஸ்தானுக்கெதிரான தொடரில் கொழும்பு எஸ். எஸ்.சி மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி 105 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.
முதல் இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 320 ஓட்டங் களைப் பெற்றுக் கொண் டது. அதிகபட்சமாக உப்புல் தரங்க 92 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பாகிஸ்தான் அணி சார்பாக யுனைட்கான் 5 இலக்கு களைக் கைப்பற்றினார். தனது முதல் இனிங்ஸில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி சர்பிரஷ் அகமட் பெற்றுக் கொடுத்த 103 ஓட்டங்களின் உதவியுடன் சகல இலக்குகளையும் இழந்து 332 ஓட்டங்களைப் பெற்று 12 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. ரங்கண ஹேரத் 9 இலக்குகளை வீழ்த்தியிருந் தார்.
இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய இலங்கை அணி, சங்கக்கார 59 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்த் தன 54 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 282 ஓட்டங்களு டன் சகல இலக்குகளையும் இழந்தது. ரியாஷ், அஜ்மல் ஆகியோர் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர். 271 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய பாகிஸ்தான் அணி 165 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அதிகபட்சமாக சர்பிரஷ் அகமட் 55 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் ரங்கண ஹேரத் 5 இலக் குகளை கைப்பற்றினார்.
இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி 2-0 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றிக் கொண்டது. இவ் ஆட்டத்தில் 14 இலக்குகளையும், தொடரில் 23 இலக்குகளை யும் கைப்பற்றிய ரங்கண ஹேரத் ஆட்ட நாயகனாகவும், தொடர் நாயகனாகவும் தெரிவானார். (ரி)

# சக்கோட்டை சென்.சேவியர், உடுப்பிட்டி யூத் அடுத்த சுற்றுக்கு தகுதி

கரணவாய், ஓக.19

பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டங்களில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகமும் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம், நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகமும், சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதின. இரு அணிகளும் வடமராட்சியில் பலம் பொருந்திய அணிகளாகத் திகழ்கின்றமையால் இந்த ஆட்டத்தில் பரபரப்புக்கு குறைவே இல்லாமல் இருந்தது.

இரு அணி வீரர்களும் முன்னேறுவதும் பின்பு பின்னேறி கோல் போடுவதனைத் தடுப்பதிலும் குறியாக இருந்தனர். ஒரு கட்டத்தில் சென்.சேவியர் அணி வீரர் நிரோஜன் அழகான கோல் ஒன்றைப் போட 1:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகியதும் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது. இரு அணியினரும் கோல் போடும் சந்தர்ப்பங்களை தவறவிட வெற்றியின் காற்று சென்.சேவியர் பக்கமே வீசியது.

ஆட்டம் முடிவடைய 5 நிமிடங்களில் இருக்கும் போது நிரோஜன் மீண்டும் ஒரு கோல் போட 2:0 என்ற நிலையில் சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகமும், தம்பசிட்டி கலைமகள் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இடைவேளை வரை இரு அணியினரும் கோல் எதனையும் போடாத நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டது. இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக இடம்பெற்றது.

இதனால் ஆட்டம் சமனிலையிலேயே முடிவடையும் எனப் பார்வையாளர்கள் எண்ணியிருந்த வேளை உடுப்பிட்டி யூத் அணி வீரர்கள் ஆ.சஞ்சீவன் 49 ஆவது நிமிடத் திலும் பகி 51 ஆவது நிடத்திலும் அடுத்தடுத்துக் கோல் போட 2:0 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி யூத் அணி வெற்றி பெற்றது.

(5-108)

18 ஆம் பக்க தொடர்ச்சி..

**உலக கிண்ணத்துக்கு தயாராக வேண்டும்**

நான் விளையாடிய காலத்தில் அணிக்கு செய்ய வேண்டிய கடமைகளை சரியாக செய்துள்ளன். மேலும் அடுத்த வருடம் நடைபெற உள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு இன்னும் ஆறுமாதங்கள் உள்ள நிலையில் அதற்கு தயாராக வேண்டியுள்ளது. உலகக் கிண்ணத் தொடருக்கு அணிக்கு என்னால் வழங்க கூடிய ஆதரவை வழங்குவேன். அந் தத் தொடருக்கு பிறகு ஒரு நாள் தொடரிலிருந்து ஓய்வு பெறுவதை அறிவிப்பேன். மேலும் எதிர் காலத்தில் இலங்கை அணியின் நலன் கருதி என்னால் முடியுமான சகல ஒத்துழைப்புகளையும் வழங்குவேன்.

**அரசியலுக்குள் பிரவேசித்தால் வீட்டிலிருந்து வெளியேற்றப்படுவேன்**

நான் அரசியலில் பிரவேசிக்க வேண்டும் என தீர்மா னம் எடுத்தால் வீட்டிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படும். நான் அரசியலில் ஈடுபட மாட்டேன். மேலும் பயிற்சியாளராகும் எண்ணமும் இல்லை.

## அணித்தலைவர் பதவிக்கு பதில் சொன்ன டோனி

அந்நிய மண்ணில் தொடரும் மோசமான தோல்விகளால் டெஸ்ட் அணித்தலைவர் பதவியில் இருந்து டோனி விலக வேண்டும் என்று விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. தற்போது இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரை இழந்துள்ள நிலையில் அணித்தலைவர் பதவி தொடர்பான கேள்விகளுக்கு பதிலளித்துள்ளார் டோனி.

இந்திய இங்கிலாந்து அணிகள் மோதிய 5ஆவது மற்றும் இறுதி ஆட்டத்திலும் தோல்வியடைந்த இந்திய அணி தொடரை 1:3 என்ற கணக்கில் இழந்தது.

இந்தத் தோல்வி பற்றி அணித்தலைவர் டோனி கூறுகையில், லோர்ட்ஸ் டெஸ்டில் வெற்றி பெற்று கடந்த 3 டெஸ்டிலும் தோற்றது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

எங்களது துடுப்பாட்டம் மிகவும் மோசமாக இருந்தது. தொடக்க வரிசையும், அதை தொடர்ந்து மத்திய வரிசையும் ஏமாற்றம் அளித்தது. லோர்ட்ஸ் டெஸ்டில் பெற்ற வெற்றியில் நாங்கள் அதிகமான நம்பிக்கை அடையவில்லை என்றார்.

அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுவீர்களா என்ற கேள்வி எழுப்பப்பட்ட போது, இந்த கேள்விக்கு பதிலை பொறுத்து இருந்து பாருங்கள். நான் போதுமான வலுவுடன் இருக்கிறேனா என்பது உங்களுக்கு தெரியும் என்று கூறியுள்ளார். (ரி)

## மரண அறிவித்தல்

### அருட் பணி தேவதாசன் எட்வின் (அமதி)



மன்னார் விடத்தல் தீவினைப் பிறப்பிடமாகவும் அமல மரித்தியாகிகள் துறவற சபையை சார்ந்தவருமான தேவதாசன் எட்வின் (அமதி) நேற்று (18.08.2014) இறைபதமடைந்தார்.

அடிகளாரின் பூதவுடல் கொழும்புத்துறை புனித வளனார் அ.ம.தி. சிறிய குரு மடத்தின் புனித இயூஜின் டி மசனட் சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவரது நல்லடக்கம் ஆராதனை நாளை (20.08.2014) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். புனித மரியாள் பேராலயத்தில் திருப்பலியின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சகோதர அருட்பணியாளர்கள், துறவியர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பகம், 657/1 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்பணி எட்வின் வசந்தராசா

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## துயர் பகிர்கின்றோம்



பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக்
கழகத் தலைவராகிய

### கனகரட்ணம் அல்பேட் சின்னத்தம்பி

அவர்கள் நேற்றுமுன்தினம் அதிகாலை
(17.08.2014) ஞாயிற்றுக்கிழமை
இறைபதமடைந்து விட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு,
அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஐக்கிய விளையாட்டுக்கழகம்
பண்டத்தரிப்பு.

(51023) (10.6)

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் சிறீஸ்கந்தராஜா

(உரிமையாளர்-இ.சிற்றம்பலம் அன்ட் கொம்பனி, 25, பழைய சோனகத்தெரு, கொழும்பு - 12)



சுருவில், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிறீஸ்கந்தராஜா 17-08-2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சிவஞானபூரணி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், அபிராமி, Dr. சஞ்சீவன், சரண்யா (Abans PLC Colombo - 3) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாநிதி அஞ்சுலன், பிரணவன் (Copal Amba Research PVT Ltd) ஆகி யோரின் மாமனாரும், அஷ்வினின் பாட்டனாரும், இராசலெட்சுமி, காலஞ் சென்ற Dr. இராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலெட்சுமி, காலஞ்சென்ற ஆனந்தலெட்சுமி மற்றும் சந்திரமதி, அருள்கந்தராஜன், நவநீதராஜன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருநிலைநாயகி, KV மகேந்திரன் (சட்டத்தரணி), விமலநாயகி, காலஞ்சென்ற சொரூபராணி மற்றும் தவராணி, கமலராணி K.V சுசீந்திரன், K.V ரவீந்திரன், காலஞ்சென்ற சண்முகலிங்கம் (நொதேன் இன்டஸ்ரீஸ் யாழ்ப்பாணம்), Dr மைத்திரிதேவி, மரகதவல்லி, Dr சிறீகாந்தன், பாலசுப்பிரமணியம், சோமாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கீர்த்திசிங்கம், சிவராஜா மற்றும் கனகரட்ணம், துவாரகன், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு சகலனும், யசோதா, நந்தினி, பத்மலோஜினி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19-08-2014) செவ்வாய்க்கிழமை பொரளை ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் காலை 9 மணிதொடக்கம் மலை 5 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (20-08-2014) புதன்கிழமை பி.ப ஒரு மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்றுப் பின்னர் பொரளை கனத்தை இந்து மயானத்தில் பி.ப. 3 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

14, 4/1, அருத்துசா லேன்,
வெள்ளவத்தை.

தகவல் : மனைவி, மக்கள்,
மருமக்கள்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 05.08.2014 சிவபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவி
சிவநெறிச் செல்வி, சிவபூஜா துரந்தரி, பண்டிதை

### அமரர் சிவபாக்கியம் பாலநாதன்

அவர்களின் சிவபதபேறுகுறித்த அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (19.08.2014) செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (20.08.2014) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறுவுள்ளன. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும், நேரிலும் தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், மேலும் பல வழிகளிலும் உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

இலந்தை கட்டி வைரவர் கோயிலடி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

(51024)(10.6)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை வரதராஜன்

(பொருளியல் ஆசிரியர், முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை வரதராஜன் (பொருளியல் ஆசிரியர், முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்) நேற்று (18.08.2014). திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சகுந்தலாவின் அன் புக் கணவரும், Dr. இளவேணி, பார்த்தீபன் (Litteaid) ஆகி யோரின் அன்புத் தந்தையும், Dr. அனுசன் (யாழ்.போதனா வைத்தியசாலை), சிந்துஜா (நூலக உதவியாளர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனும், சிவசுப்பிரமணியம் (கனடா), விஜயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேனுசானின் (British Business College) பேரனும், ஜமுனாவதி, காலஞ்சென்ற பானு கலா (கனடா), Dr. சாந்திகுமார் (லண்டன்), இராஜசிங்கம், சாந்தநிதி (லண்டன்), கிரிதரன், சிறீதரன், நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஜனார்த்தனி (லண்டன்), செந்தூரன், பிரகாஸ், கோகுலன் (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும், மயூரன் (டுபாய்), அபிராமி (யாழ். தொழில் நுட்பக் கல்லூரி) ஸ்ரீகஜன் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் D.C.M கல்வி நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

215, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(51020) (10.6)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

# மரண அறிவித்தல்



## சிற்றம்பலம் மாணிக்கவாசகர்

[ஓய்வுபெற்ற அதிபர்]

வளலாயைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் மாணிக்கவாசகர் 17.08.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், சிவலோகவள்ளியம்பாளின் அன்புக் கணவரும், சுரேஸ்(லண்டன்), சுஜித்தா (லண்டன்), சுஜீவன்(லண்டன்), சுரேகா(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேவதி, சிறீகிருஸ்ணமேனன், சுலோசனா, சசீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும், சரண், சாளினி, நந்த், கிரண், சஜித், துசாணி, அசாணி, டிலக்சினி ஆகியோரின் அன்புப் பேரனும், சத்தியபாமா, நடேசமூர்த்தி, நாகேஸ்வரி, சந்திரேஸ்வரி, மனோகரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(20.08.2014) புதன்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வளலாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சக்கடத்தார் வீதி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

(51098)(4.8.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு பேருந்து ஆசன பதிவகத்துக்கு கொழும்பில் தங்கி நின்று வேலை செய்வதற்கு ஆசன பதிவாளர் தேவை. யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிலையத்துக்கு சிட்டை எழுதுநர்/உதவியாளர் உடன் தேவை.

தொடர்புகளுக்கு: 077 573 6003

குறிப்பு: ஆண்கள் மட்டும் (51015) (10)


## காணி விற்பனைக்கு

நீர்வேலி அச்செழு போயிற்றியில் மாணிக்கப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 15 பரப்புக்காணி , தனிக் கிணறு மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

(51012) (45.6.3) தொடர்பு: 077 968 4186

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை குருக்கள் அனந்தன்சர்மா (அசோக்)



கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குருக்கள் **அனந்தன்சர்மா (அசோக்)** நேற்று (18.08.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஐயாத்துரை குருக்கள்
குடும்பத்தினர்.
கைதடி வடக்கு, கைதடி.

(51100) (45.6.3)

# மரண அறிவித்தல்



## திருமதி ஈஸ்வரி துரைசிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி துரைசிங்கம் நேற்று (18.08.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-மதியாபரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காஞ்சனா (நோர்வே), தயாநிதி (ஜேர்மனி), வதனி (நோர்வே), ஜனித்தா (லண்டன்), குமார் (லண்டன்), கோவூர் ஆகியோரின் அன்புத் தாயும், பாலசங்கர் (நோர்வே), ராமச்சந்திரன் (ஜேர்மனி), அல்வின் கண்ணன் (நோர்வே), சூரியகுமார் (லண்டன்), கார்த்திகா (லண்டன்), வதனி ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான சாத்திரியார் பொன்னம்பலம், சுப்பிரமணியம், பேரம்பலம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகாம்பிகை, கேமாவதி, பேரின்பசுந்தரம், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், கீர்த்தனா, அவினாஷ் சபிதா, துஷந்தன், கிதுஷன், அதிஸ்வன், மதுசா, மதீஸ்வன், கைதுஜன், சுதுசன், சதுசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (19.08.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இல.26, குகன் வீதி,
அரியாலை. (51100) (45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## சிவஞானம் சோமசுந்தரம்

(ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் மணியகாரர்)



முல்லைத்தீவு ஒட்டுசுட்டானைப் பிறப்பிடமாகவும் வவுனியா நெடுங்கேணி உக்கிளாங் குளம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சிவஞானம் சோமசுந்தரம் 17.08.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை-சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருகமனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சத்தியதேவி (கனடா), சத்தியதேவன் (ஜேர்மனி), சத்தியகாந்தன், சத்தியரூபன், சத்தியேந்திரன், சத்தியபாமா ஆகியோரின் பாசமிகு தந்தையும், துரைசிங்கம், சிவனார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலசிங்கம் (கனடா), சாந்தி (ஜேர்மனி), வாமதேவன் (பிரான்ஸ்), றாஜினி, விஜயரஞ்சினி, பரிமளா ஆகியோரின் பாசமுள்ள மாமனும், ஜெனோஜன் சுலக்ஷியா (கனடா), ஜனித்தா குணாளன் (கனடா), சந்தோஷ் (ஜேர்மனி) ஜெசிக்கா (ஜேர்மனி), தாரணி, பிரியா, சங்கீத், நிரோஜன் (பிரான்ஸ்), நிருஜா, அச்சயன், அச்சரா, தருண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2014) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு உக்கிளாங்குளம் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

329/2, பிள்ளையார் கோயில் வீதி,
உக்கிளாங்குளம், வவுனியா.
T.P: 024 222 6370, 077 592 4113

(49743) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# புதிய கிளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.19

கூட்டுறவுக் காப்புறுதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை நாளை காலை 8.45 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். வைத்திய சாலைவீதியில்அமைந்துள்ள இந்தக் கிளையினை திறந்து வைக்கும் நிகழ்வில் வடமாகாணக் கூட்டுறவு ஆணையாளரும் பதிவாளருமாகிய திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதுடன், நிறுவனத்தின் தலைவர் டபிள் யூ. லலித் ஏ.பீரிஸ்ும் பங்கேற்கவுள்ளார். (த)

## Personal Classess Science & English

- ★ தனியாகவோ or குழுவாகவோ கற்பிக்கலாம்.
- ★ மொழிமூலம் ஆங்கிலம் அல்லது தமிழ். (51016) (10)
- ★ ஆசிரியர் MSc பயிலுபவர்.

பண்டத்தரிப்பை அண்டிய பகுதிகள் வரவேற்கப்படும்.

vasanuoj@Gmail.com T.P: 077 597 2153

# அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை
வட்டாரம் :- 05
ஆதன இலக்கம் :- 65/15
குளப்பிட்டி வீதி.

வட்டாரம் 05 குளப்பிட்டி வீதி ஆதன இலக்கம் 65/15 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகா ணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை) "இந்தியடியும் மறுபிரிவும்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 குழி 15.22 கொண்ட இவ்வாதனமானது கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சங்கநாமம் பெண் பத்மராணி அவர்களால் அறுதி உறுதி மூலம் உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வசந்தகுலசிங்கம் ருக்மினிகாந்தன் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திருமதி லிங்கா துரைராஜா முகதாவில் நிறைவேறிய 5822 ஆம் இலக்க 03.03.2014 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "இந்தியடியும் மறுபிரிவும்" நிலப்பரப்பு 02 குழி 15.22 கொண்ட இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத் தும் உறு திகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் வசந்தகுலசிங்கம் ருக்மினிகாந்தன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய். (51014) (10.6)

# வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
## வதிரி, கரவெட்டி
### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு (கழக வளர்ச்சிக்காக)

வெற்றி பெற்ற இலக்கங்கள்

முதலாம் பரிசு-03186, 2 ஆம் பரிசு-02559, 3 ஆம் பரிசு-02971

ஆறுதல் பரிசுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01.00716 | 04.17451 | 07.20828 | 10.10113 | 13.24262 |
| 02.17486 | 05.19590 | 08.06406 | 11.18340 | 14.04434 |
| 03.06531 | 06.15445 | 09.00239 | 12.12193 | 15.04523 |

வெற்றிபெற்றோருடன் கழகம் நேரடியாக/தபால் மூலமாக தொடர்பு கொள்ளும்.

**குறிப்பு:**புதிய பயிற்சிகள் இலவசமாக பாடசாலை விட்டு வில்கியோருக்காக 01.09.2014 இல் ஆரம்பிக்கப்படும். கணினி MS OFFICE, கணினி பிரயோகவியலாளர் பயிற்சி, தமிழ் சுருக்கெழுத்து தட்டெழுத்து, ஆங்கில சுருக்கெழுத்து தட்டெழுத்து, சிங்கள மொழி, Spoken English

மேலதிக தகவலுக்கு நேரில்/தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம்,
வதிரி, கரவெட்டி. (49742) (4.3.6.)

தொ.பே.இல.021 226 4211, 077 864 8213







இலங்கையில் சர்வதேச உயர்கல்வி கற்கை நெறிகளை வழங்கும் மிகச்சிறந்த உயர்கல்வி நிறுவனம் எனும் Edexcel, UK நிறுவனத்தின் சான்றிதழுடன் வெற்றி நடைபோடும் BCAS Campus வழங்கும் Access Programme (Degree Foundation) எனும் பாடநெறியினை GCE A/L பரீட்சையினை எழுதி முடித்திருக்கும் மாணவர்களாகிய உங்களுக்கு கணனி, ஆங்கிலம் மற்றும் ஆளுமை விருத்தி போன்றவற்றில் திறனைகளை விருத்தி செய்வதற்கான முறையான பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதோடு 6 சர்வதேச வரவேற்பை பெற்ற சான்றிதழ்களையும் இப்பயிற்சி நெறி முடிவில் பெற்றுக் கொள்வதற்கான அரிய வாய்ப்பும் கிடைக்கின்றது.

அத்தோடு குறுகிய காலத்திற்குள் UK, USA, Australia, Canada போன்ற நாடுகளிலுள்ள பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களினூடாக (Hons) Degree பட்டப்படிப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை இதன் மூலம் இலகுவாக கிடைக்கிறது.

IELTS
Dip. in English

[illegible]
மற்றும் ஐரோப்பிய ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டலில்
முழுமையான ஆங்கிலச் சூழலில் பாடநெறிகள்
யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுகின்றன | FREE Study Pack
உயர்கல்வி மற்றும் உயர்தரத்திற்கு பின்னரான கற்கை நெறி
தொடர்பான இலவச ஆலோசனைகளுக்கு
BCAS Jaffna Campus இனை நாடுங்கள்.

5 Certificates by BCAS
2 Certificates from Edexcel, UK

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910 | E: info@bcas.lk
தொடர்புகளுக்கு 0777 102131

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar

## தொடர்ச்சிகள்

### சுவர் இடிந்து

றின் வீட்டின் சுவர் நேற்றுப் பெய்த கடும் மழை காரணமாக இடிந்து வீழ்ந்துள்ளது. இதன்போது அதனுள் அகப்பட்ட தாரகன் (வயது - 4) என்ற சிறுவன் உயிரிழந்துள்ளன். சிறுவனின் சடலம் பரிசோதனைக்காக வவுனியாமாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-421)

### மத்திய

இருந்து 2 லட்சம் அமெரிக்க டொலர் களைச் சாண்ட்லர் இலங்கையில் உள்ளவர்களுக்குப் பரிமாற்றம் செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட அவரிடம் இருந்து பல தகவல்களை இஸ்ரேலியப் பொலிஸார் பெற்றுள்ளனர். முன்னர் கடந்த 2012 இல் அமெரிக்காவின் டெக்ஸாஸைச் சேர்ந்த ஜோன் வைஸ்னர் என்பவர் உடல் உறுப்பு ஒன்றைப் பெறுவதற்காக 3 லட்சத்து 30 ஆயிரம் டொலர்களை வழங்கியிருந்தமையும் தெரிய வந்துள்ளது. இலங்கையில் செய்யப்படும் உறுப்பு தானங்களில் பெரும்பாலானவை திருட்டுத் தானங்களே என்றும் அவை பணத்துக்காகவே செய்யப்படுகின்றன என்றும் அந்த பத்திரிகை சாடியுள்ளது. இலங்கை போன்று சீனா, எகிப்து, இந்தியா, பாகிஸ்தான், துருக்கி, கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் உடல் உறுப்புகளைப்பெறும்-கடத்தும்மையங்களாக உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (த)

### அரச சார்பற்ற

கள் பயிற்சி மற்றும் பத்திரிகைகளில் செய்தி பரப்புதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள கட்டளைகளை அரச சார்பற்ற அமைப்புக்கள் பின்பற்று வதில்லை. இவ்வாறு கட்டளைகளுக்கு அப்பால் செல்ல வேண்டாம் என்று அந்த அமைப்புக்களுக்கு வலியுறுத்துகிறேன். எவ்வித ஒழுங்கமைப்பும் இல்லாத சூழலில் அரசசார்பற்ற அமைப்புகள் செயற்படுவதன் காரணமாக நாட்டின் சட்டம் ஒழுங்குக்கும், நிதி முகாமைத்துவத்துக்கும், அபிவிருத்தி முயற்சிகளுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல், கணினி தொடர்பிலான குற்றங்கள் என்பனவும் நாட்டுக்கு அச்சுறுத்தலாகவே உள்ளன-என்று தெரிவித்துள்ளார். (த-5)

### தமிழர்கள்

நிபுணர் குழு நீதியை வழங்க வேண்டும். நாம் பிரச்சினைகளை தீர்க்க வேண்டியுள்ளது. மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. ஆனால், தமிழர்கள் பொலிஸ் அதிகாரங்களைக் கோருவதால், முன்னேற்றங்கள் ஏற்படாமல் முடங்கியுள்ளது.

தமிழ்நாட்டின் செல்வாக்கினால், இலங்கை தொடர்பாக தவறான அணுகுமுறையை இந்தியா கையாண்டது. தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் சொல்லைக் கேட்டு, கொழும்பில் நடந்த பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்ளாதது மிகப்பெரிய தவறு. அது ஒரு இருதரப்பு கூட்டம் அல்ல. எனது அதிருப்தியைத் தெரிவித்து பிரதமருக்கு அப்போது கடிதம் எழுதினேன்.

நிபுணர் குழுவினால், ஆய்வுகளை மேற்கொள்ளவோ, தமது சொந்தப் பரிந்துரைகளை முன்வைக்கவோ முடியாது. காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக்குழு கேட்கும்போது மட்டுமே, ஆலோசனைகளை வழங்க முடியும். ஆனால், இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கு எனது பரிந்துரையை முன்வைக்க முடியும். அதை ஏற்றுக் கொள்ளும்படி கட்டாயப் படுத்த முடியாது - என்றார். (த-5)

### தம்பாட்டியில்

மாகாண சபை உறுப்பினர்களினால் வழங்கப்பட்டது.

தீவுப்பகுதியில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் குடிதண்ணீர் இன்றி அவதிப்படும் நிலையில், வடக்கு மாகாண விவசாய கால்நடைகள் அபிவிருத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சரான பொ. ஐங்கரநேசனுடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.என். விந்தன் கனகரத்தினமும் இணைந்து வடக்கு மாகாண விவசாய அமைச்சின் இரு தண்ணீர் பவுசர்கள் மூலம் தீவுப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகத்தை நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பித்து வைத்தனர்.

அடுத்து வரும் நாள்களில் ஊர்காவற்றுறையில் உள்ள மெலிஞ்சிமுனை, பருத்தியடைப்பு, புளியங்கூடல், நாரந்தனை, வேலணைத்துறையூர், அம்பிகைநகர், அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு போன்ற பகுதிகளுக்கும் வடக்கு மாகாண விவசாய அமைச்சினுடைய இரு பவுசர்கள் மூலம் தொடர்ச்சியாக குடிதண்ணீர் வழங்கப் படவுள்ளது.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண சபை உறுப்பினராக ளான இ.ஆனல்ட், கஜதீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-17-106)

### பஸ்ஸில்

சிறிது நேரம் பஸ் பயணம் தடைப்பட்டது. இதனால் தாம் பாதிக்கப்பட்டதாகப் பயணிகள் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து ரயிலில் நேற்றுக் காலை பளைக்கு வந்தவர்களைஏற்றிவந்த யாழ். டிப்போவுக்குச் சொந்தமான இலங்கைப் போக்கு வரத்துச் சபை பஸ்ஸில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அதில், சிவில் உடை தரித்த சிலரும் பய ணித்துள்ளனர். அவர் களில் ஒருவரே சிங்களத்தில் பேசியவாறு சாரதியுடன் முரண் பட் டுள்ளார் என்றும் அவர் இராணுவச் சிப்பாய் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிவில் உடை தரித்தவர்களில் இரண்டு பேர் மிதிபலகையில் நின்று பயணித்துள்ளனர். மிதிபல கையில் நிற்கவேண்டாம் என்றும் தவறிவிழுந்தால் தனக்குச் சட்டப் பிரச்சினை வரும் சாரதி கூறியுள்ளார். ஆனால் அவர்கள் நகர மறுத்துச் சாரதியுடன் முரண்பட்டுள்ளனர். அதன்போதே அவர்கள் யார் என்பது பயணிகளுக்குத் தெரிந்தது. ஆனாலும் யாராக இருந்தாலும் மிதிபலகையில் நின்று பயணம் செய்ய முடியாது என்று சாரதி கூறியதனால் அவர்கள் அதனை ஏற்க மறுத்துத் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

அதனால் பஸ் சுமார் 15 நிமிடங்கள் பயணம் செய்ய முடியாதவாறு தடைப்பட்டது. அந்த பஸ்ஸில் பயணித்த சிவில் உடை தரித்த இராணுவத்தினர் அவர்களுக்கு அது பற்றி எடுத்துக் கூறியபோதும் குறித்த நபர் அதனையும் கவனத்தில் கொள்ளாது முரண்பட்டுள்ளார். பஸ்ஸில் ஆசனம் ஒன்று வெறுமையாக இருந்ததால் அதில் அமருமாறு அவருக்குக் கூறியபோதும் அவர் அதனையும் கவனத்தில் கொள்ளவில்லை. தொடர்ந்து சாரதியுடன் முரண்பட்டுவிட்டு அரியாலையில் அவரும் அவருடன் சென்ற மற்றைய நபரும் இறங்கிச் சென்றுவிட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. அந்த பஸ்ஸில் மருத்துவர், மாணவர்கள் உட்பட பலர் பயணித்துள்ளனர் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (த-4)

### வாள் வெட்டுக்

ஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தைச் சேர்ந்த குறித்த 2 பேரும் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடந்த வாரம் மானிப்பாய் பொலிஸாரால் வாள்கள், கத்திகள், கோடரிகள் உள் ளிட்ட ஆயுதங்களுடன் 7 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

### அரசின்

தில் அழுத்தங்களை எதிர்நோக்கத் தேவையான சமூகப் பின்னணி காணப்பட்டது. ஆனால் தற்போது அந்த நிலைமை எதுவும் இல்லை. தற்கொலைச் சம்பவங்கள் உயர்வடைவதற்கு இதுவே காரணம்.

போரின் பின்னரான சமூகப் பொருளாதார அழுத்தங்களில் இருந்து மக்கள் மீண்டெழுவதற்கு அரசு சரியான திட்டங்களை வகுக்கவேண்டும். அதற்கு அரசின் புனர்வாழ்வுப் பொறிமுறைகள் குறித்து திருப்தி அடைய முடியாதுள்ளது. போரில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஒரே விதமாக புனர்வாழ்வு அளிக்கப்படவேண்டியது அவசியம் - என்றார். (த-4)

### படகுகளை

யைச் சேர்ந்த 10 பயனாளிகளுக்குப் படகுகள், இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இந்தப் படகுகளுக்குரிய பணத்தில் மாதாந்தம் 50 சதவீதத்தை கடற்தொழில் சங்கத்துக்குக் குறித்த பயனாளிகள் செலுத்தி வந்துள்ளனர். இந்த நிலையில் தீடீரெனக் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் குறித்த படகுகள் மேற்படி நிறுவனத்தினால் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன.

4 படகுகளை ஒருவரே வைத்துள்ளதாகவும், அவர் வேறு பெயர்களில் படகுகளைப் பெற்றே அதனை வைத்துள்ளதாகவும் தெரிவித்தே பாசிக் நிறுவனம் படகுகளை மீளப் பெற்றுள்ளது. இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரை, மாவட்ட செயலகத்தில் நேற்று மக்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது மாவட்ட அரச அதிபர், நாளை (இன்று) மேற்படி படகுகள் மீளப் பெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் படகுகள் தமது பாவனையில் உள்ளன என்றும், தாமே அதனைப் பாவித்து வருகின்றோம் என்றும், தமது பெயரைப் பயன்படுத்தி வேறு யாரும் படகுகள் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (த-5)

### குடத்தனையில்

வீசிய பலத்த காற்றினால் 3 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், 3 வீடுகளின் கூரைகள் சேதமடைந்துள்ளன.

குறித்த இடர் தொடர் பாக இடர் முகாமைத்துவ அமைச்சுக்கு அறிவிக்கப்பட் டுள்ளதுடன், சூறாவளியினால் பாதிக்கப்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதற் கான நடவடிக்கைகளும் பிரதேச செயலாளர் ஊடாக மேற் கொள்ளப்படு மென்றும் அரச அதிபர் மேலும் கூறினார். (த-106)

### பஸ் மோதியதில்

சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் தொல்புரம் மேற்கு, சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த அருமைநாயகம் ஐங்கரன் (வயது-15) என்ற சிறுவனே தலையில் படுகாயம் அடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர் பாகத் தெரியவருவதாவது:-

பொன்னாலைப் பகுதியில் இருந்து வந்த விஷேட சேவைக்கான பஸ் வீதியால் வந்த ஓட்டோவை முந்திக் கொண்டு செல்ல முற்பட்டபோதே, நடந்து சென்ற சிறுவனின் பின்புறமாக மோதியுள்ளது.

சிறுவன் தலையில் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த-106)

### தமிழருக்கெதிர

சபை உறுப்பினர்கள் 33 பேர் இணைந்து; ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். குறித்த கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளராக இருந்து தாங்கள் ஆற்றிய சேவையை பாராட்டுகின்றோம். இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கோரி நீங்கள் அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவைக்கு தமிழ் மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிலவிடயங்களை நாங்கள் உங்கள் முன்வைக்கின்றோம்.

1974 ஆம் ஆண்டு படைகளால் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதிலிருந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். அத்துடன் 1970, 1980, 1990, 2000 ஆம் ஆண்டுகளில் தமிழ் மக் கள் பெருந்தொகையாக கொல்லப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசு எந்தவொரு விசாரணைகளையும் முன்னெ டுக்கவில்லை. அந்தப் படுகொலைகள் பற்றியும் விசாரிக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் இலங்கை அரசினால் திட்டமிட்டரீதியில் இனப்படுகொலை செய்யப்பட்டு வருவதாக உறுதியாக நம்புகின்றனர். தமிழர்களது வழிபாட்டுத்தலங்கள் அழிக்கப்பட்டன, யாழ். நூலகம் எரிக்கப்பட்டது. இவை எல்லாம் நடந்து முடிந்தவை. இப்போதும் கடத்தல்கள், காணாமற்போகச் செய்தல்கள், தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் போன்ற எல்லா அடக்குமுறைகளும் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

தமிழர் பகுதிகளில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இப்போதும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இன்னமும் சொந்த இடத்தில் மீளக்குடியேற முடியாமல் பல ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக வேறு இடங்களில் வசிக்கின்றனர். இந்த விடயங்கள் அனைத்தையும் ஐ.நா. மனித உரிமைகள் விசாரணைக்குழு கருத்தில் கொள்ளவேண்டும். உள்ளூர் பொறிமுறையான நல்லிணக்க ஆணைக்குழுவும் இவற்றை ஆராயவில்லை.

சர்வதேச விசாரணைக்குழு இலங்கை வருவதற்க அரசு அனுமதியளிக்க மறுத்தால் தமிழ்நாட்டில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் - என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-5)

### பேரவை

யாழ்.பல்கலைக் கழகத்தில் தற்போதுள்ள பேரவை உறுப்பினர்கள் அதிகாரத்தில் உள்ளவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுபவர்களாகவும், அவர்களுக்குக் கீழ்ப் படிந்து நடப்பவர்களாகவுமே உள்ளனர் எனத் தெரிவித்திருந்த யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள மூன்று தொழிற்சங்கங்கள், பேரவை உறுப்பினர்கள், அவர்களது முக்கிய பணியான பல்கலைக்கழகச் செயற்பாடுகளை திறனாய்வு செய்வதில் வல்லமையற்றவர்களாகவும், பல்கலைக்கழகச் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகளை கண்டறியக் கூடியதான வினாக்களைத் தொடுப்ப தற்கு முடியாதவர்களாயும் உள்ளனர்-என்றும் சுட்டிக்காட்டியிருந்ததுடன், அவ்வாறானவர்களை விடுத்து, பல்கலைக் கழகம் அதன் கல்வி சார் நடவடிக்கைகளில் நன்றாகப் பணியாற்றவும், வளச்சிக்குப் பங்களிப்பு வழங்கக் கூடியவர்களை பேரவை உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும் என்றும் கோரியிருந்தன.

அது தொடர்பிலேயே ஜனாதிபதியின் செயலர் தற்போது பதில் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி தமது கோரிக்கை தொடர்பில் மேற்கொண்ட இந்த நடவடிக்கையை வரவேற்பதாகக் கூறியுள்ள யாழ்.பல்கலைக் கழக தொழிற்சங்கங்கள் தமது கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என் றும் வலியுறுத்தியுள் ளன. (ற-4)

### இலங்கை

திகதியளவில் அவரது உரை இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஜனவரி மாதம், இலங்கைக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவரும் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் இதுவரை எட்டு நாடுகளின் தலைவர்கள் உரையாற்றியுள்ளனர். நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முதலாவது வெளிநாட்டுத் தலைவர், சீனாவின் முன்னாள் ஜனாதிபதி சூ என்லாய் ஆவார். இவர் 1957 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார்.

அதையடுத்து 1962 ஆம் ஆண்டு, இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவும், 1963 இல் பாகிஸ்தான் பிரதமர் பீல்ட் மார்ஷல் முகமட் அயூப் கானும், 1973 இல், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும், 1975 ஆம் ஆண்டு பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவும், 1979ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாயும், 1985 ஆம் ஆண்டு, பிரித்தானியப் பிரதமர் மார்கிரட் தட்சரும், 2003ஆம் ஆண்டு தாய்லாந்து பிரதமர் தக்சின் சின்வத்ராவும், 2013 ஆம் ஆண்டு அவரது தங்கையும் தாய்லாந்துப் பிரதமருமான ஜிங்லுக் சின்வத்ராவும், உரையாற்றியுள்ளனர். (ற-5)

### ஐ.நா. விசாரணை

படுகின்றது - என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

"காணாமற்போனோரின் உறவினர்களில் இருபது குடும்பங்கள் அண்மையில் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டிருந்தன. அவர்களில் பலருக்குத் தாம் ஏன் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டிருக்கி றோம் என்பது தெரியவில்லை. யார் அந்தப் பயண ஏற்பாடுகளைச் செய்துள்ளனர் என்பதையும் அறிந்திருக்கவில்லை.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்த அந்த நிகழ்வில் பதிவு செய்யும் கருவிகளும் இருந்துள்ளன"- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாணந்துறை மற்றும் மொறட்டுவ பகுதிகளில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட காணாமற்போனோரின் உறவினர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடலின் இடைநடுவே கடும்போக்கு சிங்கள, பௌத்த அமைப்புகள் அத்துமீறி நுழைந்து குழப்பத்தை ஏற்படுத்தியிருந்ததோடு, அந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தவர்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்திருந்தன. அதையடுத்து அந்தக் கலந்துரையாடல் இடைநடுவே கைவிடப்பட்டிருந்தது. (ற-5)

### முதலமைச்சர்

மிடவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு - கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் இணைந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். குறித்த கடிதத்தில், வடக்கு மாகாணசபையின் 28 உறுப்பினர்களும், கிழக்கு மாகாண சபையின் 5 உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்ளனர். வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் குறித்த கடிதத்தில் ஒப்பமிடவில்லை. (ற-5)

### குழுக்கள்

வேளையே அவர் இவ்வாறு தாக்கப்பட்டுப் படுகாய மடைந்துள்ளார். யாழ்.பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ரம்பந்த என்ற பொலிஸ் உத்தியோகத்தரே காயமடைந்தவராவார்.

பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்தியவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்.பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும், அவர் வவுனியாவைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அதேவேளை, நல்லூரில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பொலிஸ் ஜீப் வண்டி எதேச்சையாக மோதியதில் அவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4,106)

## போக்குவரத்து அமைச்சால் வேலைத்திட்டங்கள் ஆரம்பம்

### ஒதுக்கப்பட்ட ரூபா 15 மில்லியன் நிதியில்

யாழ்ப்பாணம், ஓக. 19

வடக்கு மாகாண போக்கு வரத்து அமைச்சுக்கு ஒதுக் கப்பட்ட 15 மில்லியன் ரூபா நிதியில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வருவதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த வருடம், வடக்கு மாகாண சபையின் முத லாவது வரவு - செலவுத் திட்டம் நிறைவேற் றப்பட்டது. இதில் வடக்கு மாகாண விவசாய, வர்த்தக - வாணிப, போக்கு வரத்து, நன் னீர் மீன்பிடி அமைச்சுக்கு 55 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய் யப்பட்டிருந்தது. அதில் போக்கு வரத்து துறைக்கு 15 மில்லி யன் ரூபா ஒதுக்கப் பட்டது.

நெல்லியடி நகர பஸ் நிலை யம் நிர்மாணிப்பதற்கு 2 மில் லியன் ரூபாவும், வடக்கின் 5 மாவட்டங்களிலுமுள்ள பிர தான பஸ் தரிப்பு நிலையங் களில் ஓய்வு விடுதி மற்றும் மலசலகூட வசதிகளுடன் பஸ் தரிப்பு நிலைய மேம்பாடுகளுக் காக 12 மில்லியன் ரூபாவும், மாவட்டங்களிலுள்ள போக்கு வரத்து தொழிற் சங்கங்களி லுள்ளவர்களுக்கு செயலமர்வு கள் நடத்துவதற்கு 0.5 மில்லி யன் ரூபாவும், பொதுமக்கள் விழிப்புணர்வு செயலமர்வு வடக்கின் 5 மாவட்டங்களிலும் நடத்துவதற்கு 0.5 மில்லி யன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. (வ-5)



## பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் உதவி

தென்மராட்சி, ஓக.19

பெற்றோரை இழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 வயது மற்றும்5 வயதான இருபிள்ளை களின் கல்வி வளர்ச்சிக்காக சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தினர் ஒரு தொகை நிதியை வங்கியில் வைப்பிலிட்டு கைய ளித்தனர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தின் 36 ஆவது நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வில் சர் வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் இரண்டாவது உதவி ஆளுநர் லயன் மருத் து வர் வை.தியாகராசா தம்பதியி னரால் இரு பிள்ளைகளுக்கு முரிய வங்கிப் புத்தகங்களும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. வன்னிப் பிர தேசத்தில் இடம்பெற்ற போர் வேளையில் தந்தையை இழந்து தாயுடன் மீசாலை வடக்கு இராமாவில் பகுதியில் வாழ்ந்த இந்த சிறார்களின் தாயார் மீசாலை வடக்கு இராமாவில் பகுதியில் சைக்கிளில் வரும் போது டிப்பரால் மோதுண்டு உயிரிழந்தார். இதனால் பெற் றோரை இழந்த இரு பிள்ளை களின் கல்வி வளர்ச்சி நலன் கருதி சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட பிராந்தியத் தலைவர் லயன் கே.பிரதீபனின் ஏற்பாட்டில் நிதி சேகரிக்கப்பட்டு வங்கியில் வைப்பிலிடப்பட்டு சிறார்களுக்கு வழங்கப்படுவ தாகத் தெரிவிக்கப்பட்டது.(வ-9)

## குடிதண்ணீர் விநியோகத்துக்காக அன்பே சிவம் அமைப்பு நிதி உதவி




அன்பே சிவம் அமைப்பின் யாழ். மாவட்டக் கிளையின் தலைவர் அ.அருளானந்த சோதி விவசாய அமைச்சரிடம் நிதியைக் கையளித்தபோது

யாழ்ப்பாணம், ஓக.19

வடக்கின் குடிதண்ணீர் விநி யோகத்துக்கென அன்பே சிவம் அமைப்பு வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை போதிய வாகனங்கள் இல்லாமை போன்ற காரணங்களால் நீர் வழங்கலை முழுமையாக முன்னெடுக்க முடியவில்லை. இதனால், வடக்கு மாகாண விவசாய அமைச்சு கடும் நீர் நெருக்கடி நிலவும் பிரதேசங் களில் உள்ளூராட்சி மன்றங் களின் அனுசரணையுடன் குடி தண்ணீரை விநியோகித்து வருகிறது.

நீர் வழங்கும் சேவையை விரி வுபடுத்துவதில் பொருளாதார ரீதியாக இருக்கும் நெருக்கடியை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அண்மையில் சுட்டிக்காட்டி யதை அடுத்தே சூரிச்சிவன் கோயிலின் சைவத்தமிழ்ச் சங்கத்தின் உபபிரிவான அன்பே சிவம் அமைப்பு அவசர உத வியாக மூன்று இலட்சம் ரூபாவை அவரிடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. அன்பே சிவம் அமைப்பின் யாழ். மாவட்டக் கிளையின் தலைவர் அ.அரு ளானந்த சோதி இத்தொகை யைக் கையளித்துள்ளார்.

அன்பே சிவம் அமைப்பு வடக்கு, கிழக்கில் பல்வேறு வகையான சமூக வேலைத் திட்டங்களில் ஈடுபட்டு வரு வது குறிப்பிடத் தக்கது. (வ)

## பொதுக்கூட்டம்

தென்மராட்சி, ஓக.19

தென்மராட்சி தெற்கு, தனா
களப்பு கமக்கார அமைப்பில்
பொதுக்கூட்டம் நாளை புதன்
கிழமை தனங்களப்பு பொ
நோக்கு மண்டபத்தில் வி.சத
னந்தன் தலைமையில் நடை
பெறும். அமைப்பில் பதிவு செ
யப்பட்ட அனைத்து கமக்கார
களையும் கலந்துகொள்ளு மா
அமைப்பின் செயலாளர் வி.பி
தீபன் அறிவித்துள்ளார். (ஓ-9

## பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஓக.19

யாழ்.மாவட்ட உள்ளூராட்
மன்றங்களின் செயலாள
உட்பட உத்தியோகத்தர் களுக்
சபையின் வரவு- செலவு
திட்டம் தயாரிப்பது தொடர் பா
பயிற்சிப் பட்டறை நாளை புதன்
கிழமையும் நாளை மறுதின
வியாழக்கிழமையும் யாழ்
பாணம் கிறீன் கிறாஸ் ஹோ
டலில் நடைபெறவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் சபை
களின் செயலாளர் மற்று
மூன்று உத்தியோகத்தர்களை
கலந்துகொள்ளுமாறு யாழ்
பிராந்திய உதவி உள்ளூ ராட்
ஆணையாளர் அறிவித்து
ளார். (வ-9

## அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உயர்வு போட்டிப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துக

### அரச பொது ஊழியர் சங்கம் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 19

அரச முகாமைத்துவ உதவி யாளர் சேவையின் அதிவிசேட தரத்துக்கு திறமை அடிப் படை யில் நியமனம் செய்வதற்கான 2013 இற்கான போட்டிப் பரீட் சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு அகில இலங்கை அரச பொது ஊழி யர் சங்கம் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தின் யாழ். மாவட்டச் செயலா ளர் எஸ். ஜெய்சங்கர் யாழ். மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

'மத்திய மற்றும் மாகாண சேவையிலுள்ள வட மாகா ணத்தில் கடமையாற்றும் குறித்த உத்தியோகத்தர்கள் எண்ணிக்கையையும் அவர் கள் மேற்படி பரீட்சைக்காக கொழும்பு சென்று வருவதில் ஏற்படும் சிரமங்களை யும் கருத் தில் கொண்டு பரீட்சை யை வட மாகாண மத்திய மற்றும் மாகாண உத்தியோ கத்தர்களுக்கு யாழ்ப்பா ணத்தில் நடத்துவதற்கு உரிய ஒழுங்குகளை ஏற் படுத்தித் தர வேண்டும்.

பொது நிர்வாக உள் நாட் டலு வல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின் பிர காரம் மேற்படி பரீட்சை, 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கொழும் பில் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சுற்றறிக்கையைத் தழுவி மாகாண முகா மைத் துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த தரம் 1 உத்தியோகத்தர்க ளுக்கு மேற்படி பரீட்சை 2014 ஆம் ஆண்டு செப் ரெம்பர் மாதம் கொழும் பில் நடத் தப்படும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

போர்க்கால சூழ் நிலைக ளின் பின்னரும் 2010 ஆம் ஆண்டுக்கான மேற் படி பரீட்சை வடமாகா ணத்தில் கடமை புரியும் மத்திய மற்றும் மாகாண சபை பொது முகாமைத் துவ உதவி யாளர் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத் தர்களுக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடை பெற்றது. அத்துடன் மத் திய மற்றும் மாகாண சபையைச் சேர்ந்த குறித்த உத்தி யோகத்தர்களுக்கு ஒரே மாதிரியான வினாத் தாள்களே மேற்படி பதவி யுயர்வுப் பரீட்சையில் வழங்கப்படுகின்றன.

எனவே, மேற்படி பரீட் சைக்கு விண்ணப்பித் துள்ள மத்திய மற்றும் மாகாண சேவையி லுள்ள வடமாகாணத்தில் கட மையாற்றும் குறித்த உத்தி யோகத்தர்களின் எண்ணிக் கையை கருத்தில் கொண்டு பரீட்சையை வழ மைபோல யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு உரிய ஒழுங் குகளை செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம்' என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (வ-10

## கேரளாவில் நடக்கும் பயிற்சி முகாமில் பங்கேற்பதற்குக் கட்டணம் செலுத்துக

### உள்ளூராட்சி உறுப்பினர்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.19

கேரளாவில் நடைபெறவுள்ள பயிற்சி முகாமில் பங்கேற் பதற்காக தலா ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 364 ரூபாவை கட்டணமாகச் செலுத்துமாறு இலங்கை உள்ளூராட்சி மன் றங்களின் சம்மேளனம் உள் ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப் பினர்களிடம் கோரியுள்ளது.

இலங்கை உள்ளூராட்சி மன் றங்களின் சம்மேளனத்தினர் இந்தியா, கேரள உள்ளூ ராட்சி நிர்வாக நிறுவனத்துடன் இணைந்து வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பி னர்களுக்கான பயிற்சி முகாமை எதிர்வரும் செப்ரெம்பர் 22 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை கேரளவில் நடத்தவுள்ளனர்.

இந்தக் கற்கைப் பயணத்தி னூடாக கேரள உள்ளூராட்சி முறைமை தொடர்பிலான அறிவைப் பகிர்ந்து கொள்ள வும் உள்ளூராட்சி மன்றங் களின் நிர்வாக நடவடிக் கைகளுக்குத் தேவையான வினைத்திறன்மிக்க செயற் பாட்டுத் திட்டங்கள் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட வுள்ளன.

கற்கைப் பயணத்தி னூடாக கேரள உள்ளூராட்சி முறைமை தொடர் பிலான அறிவைப் பகிர்ந்து கொள்ளவும் உள்ளூராட்சி மன்றங் களின் நிர்வாக நடவடிக் கைகளுக்கு தேவை யான வினைத்திறன் மிக்க செயற்பாட்டுத் திட்டங்கள் தொடர்பாக பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்கான செலவுத் தொகை தலா ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 364 ரூபாவை பங்குபற்றுவோர் செலுத்துமாறு சம்மேளன தேசிய ஒருங்கிணைப்பாளர் திருமதி ஹேமந்தி குணசேகர அறிவித்துள்ளார்.

இந்தக் கற்கைப் பயணம் தொடர்பான மேலதிக விவ ரங்களைப் பெற சம்மேள னத்தின் இயக்குநர் சபை உறுப்பினரும் சாவகச்சேரி பிரதேச சபை தலைவருமான சி.துரைராஜா அல்லது சம் மேளன திட்ட அலுவலர் செல்வி.ஸ்ரீவாணி ஆகியோ ருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)



# ஐ.நா. விசாரணையின் போது உண்மையை வெளிப்படுத்துக

## தமிழ் மக்களிடம் கோருகிறார் மாவை

முல்லைத்தீவு, ஓக. 19
போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஐ.நா. விசாரணைக ளின் போதுஉண்மைநிலையை வெளிக்கொணர வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் செயலாளர் நாயக மும் நாடாளுமன்றஉறுப்பினரு மான மாவை சேனாதிராசா கோரியுள்ளார்.
முல்லைத்தீவு மாவட்ட தமிழர சுக் கட்சியின் புதிய நிர் வாகத் தெரிவு கடந்த 16 ஆம் திகதி வடக்கு மாகாண சபை யின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெயநாதனின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.
அவர்மேலும்தெரிவித்ததாவது:-
நவநீதம்பிள்ளையின்முயற்சியில் ஐ.நா. விசாரணைகள் நடை பெறும் போது தமிழ் மக்கள் துணிச்சலுடன் பாதிப் புக்களை வெளிப்படுத்தப்பட வேண்டும். சாட்சியளிப்பவர்களின் பாது காப்பு உறுதி செய்யப்படும். தமிழ் மக்கள் தமக்கு நேர்ந்த அவலங்களைதுணிந்து வெளிக் கொணர வேண்டும்.
இலங்கை தமிழரசுக் கட்சி மாநாடு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை வவுனியாவில் இடம் பெறவுள்ளது - என்றார். (த-18)



வரலாற்றுப் புகழ் மிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று திங்கட்கிழமை நண்பகல் மிகவும் விமர்சையாக இடம்பெற்றது. காலை முதல் இடம் பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பெருமாளின் புகழ் பாடி அடியவர்கள் வரத் தேர் ஏறி வரதராஜப் பெருமாள் அடியவர்களுக்குக் காட்சியளித்தார். (த-86)

# வெடிபொருள் வெடித்து குடும்பஸ்தர் படுகாயம்

வவுனியா மண்ணுள் புதை யுண்டிருந்த வெடிபொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் ஒரு வர் படுகாணமடைந்த நிலை யில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை 3 மணியளவில் முல்லைத்தீவு வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் நடைபெற்றுள்ளது.
இது தொடர்பில் தெரியவருவ தாவது:-
தனது வீட்டிலுள்ள தோட்டத்தில் மண்ணைப் பதப்படுத்துவதற் காக நிலத்தை மண்வெட்டி யால் வெட்டிய போது, வெடிக் காத நிலையில் மண்ணினுள் புதையுண்டிருந்த வெடிபொருள் வெடித்ததாகத் தெரியவருகிறது.
இந்தச் சம்பவத்தில் வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்த செந்தில் நாதன் (வயது-33) என்பவர் கழுத்து மற்றும்கைகளில்காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகுறார். (த-421)

# வடமராட்சியில் நேற்று மழை

கரணவாய், ஓக.19
வடமராட்சிப் பகுதியில் நேற் றுப் பரவலாக மழை பெய்தது.
நேற்றுப் பிற்பகல் 3 மணியள வில் பெய்ய ஆரம்பித்த மழை சுமார் 1/2 மணி நேரமாகப் பெய்தது.
கடந்த சில மாதங்களாக மழை பெய்யாமையால் பயிர்கள் அனைத்தும் வாடிக் காணப் பட்டன. நேற்று வடமராட்சிப் பகுதியில் நெல்லியடி, கரண வாய், உடுப்பிட்டி, பருத்தித் துறை உட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் மழைபெய்தது.
இதனால் இந்தப் பகுதி யில் கடந்த சில மாதங் களாக நிலவி வந்த வறட்சி நிலை சற்றுத் தணிந்துள்ளது.
(த-108-173)

# பொருளியல் வரதராஜன் காலமானார்

ஈழத்தின் பிரபல பொருளியல் ஆசிரியரும் தமிழ்த்தேசியப் பற்றாளனுமான வரதர் என்று அழைக்கப்படும் சின்னத்துரை வரதராஜன் 63 ஆவது வயதில் நேற்று காலமானார். புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் நேற்று மதியம் உயிரிழந்தார்.
யாழ்ப்பாணத்தில், பல தசாப் தங்களாகப் பொருளியல் துறை ஆசானாக விளங்கிய வரத ராஜன் பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்குப் பொருளி யல் கல்வியைப் போதித்தவரா வார்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக, கடந்த 2010ம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் முதன்மை வேட்பாளராகப் போட்டி யிட்டிருந்தார்.
(த-4-5)

# தென்மராட்சி கல்வி அலுவலகத்துக்கு நேற்று முதல் தனியார் பாதுகாப்பு

தென்மராட்சி, ஓக.19
தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் தனியார் பாது காப்புச் சேவை நேற்று திங்கட் கிழமை தொடக்கம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.
நிரந்தரக் காவலாளிகள் இது வரை நியமிக்கப்படாததால் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம், சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகம் ஆகியவற்றில் இதுவரை ஏனைய தர தொழிலாளர்களே இரவு பகல் வேளைகளில் காவலாளிகளாக பணியாற்றி வந்துள்ளனர்.
நேற்றுத் தொடக்கம் தனியார் பாதுகாப்பு சேவை உத்தியோ கத்தர்கள் இந்த அலுவலகங் களில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
(த-9)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகர்

**கௌரவ கலாநிதி ( Martial Arts ), பிரபல வர்த்தகர் "திருமகள் ஸ்ரோர்ஸ்" - முகத்துவாரம், கொழும்பு, "மாணிக்கவாசகர் றேட் சென்ரர்" - நயினாதீவு 06, முன்னாள் அறங்காவலர் ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில், நயினாதீவு.**

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மாணிக்கவாசகர் நேற்று (18.08.2014) திங்கட்கிழமை நண்பகல் காலமானார்.

அன்னார் கொழும்பு முகத்துவாரம் பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற மா.வ. கணபதிப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அருமை மகனும், நயினா தீவு பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற நாகமுத்து (சின்னப்பு)- செல்லாச்சி தம் பதியரின் அன்பு மருமகனும், மணிமேகலையின் பாசமிகு கண வரும், இந்திரகுமாரின் (சுவிஸ்) அன்புத் தந்தையும், தேனுகாவின் (சுவிஸ்) ஆசை மாமனும், ஸ்ரீராமின் (சுவிஸ்) அருமைப் பேரனும், சரஸ் வதியின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் திருமகள், யோகநாதன், அருணகிரிநாதன், வைகுந்தவாசன் (சுவிஸ்) ஆகி யோரின் அன்பு மைத்துனரும், திருமகள்செல்வி (பிரான்ஸ்), விவேகா னந்தன் (பிரான்ஸ்), சிவானந்தன் (கொழும்பு), குகானந்தன் (பிரான்ஸ்) ஆகி யோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயவர்தன மலர்ச்சாலையில் 19ஆம் 20ஆம் திகதி (செவ்வாய், புதன்கிழமைகளில்) காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் 21.08.2014 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மலர்ச் சாலையில் நடைபெற்று, பிற்பகல் 4 மணிக்கு தகனக்கிரியைக் காக பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

314/2, 2/2, காலி வீதி,
கொழும்பு - 04.

தகவல்: மா.இந்திரகுமார் (மகன்)
தொ.பே: 0112 598099

## விற்பனை பிரதிநிதி தேவை

★ வயது எல்லை 23-33 (கட்டாயம்)
★ ஆங்கில அறிவு
★ முன்னனுபவம்
★ யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் மட்டும்.

தொடர்பு: (51018) (10.6)
T.P.: 077 957 8279

## கடை வாடகைக்கு

யாழ்.K.K.S.வீதியில் சத்திரச்சந்தியில், HSBC வங்கிக்கு அருகில் 20' X 40' அளவுடைய ஒரு மாடியுடன் கூடிய புதிய கடை நவீன வதியுடைய குளியலறை யுடன் வாடகைக்குண்டு.
தொடர்பு: (51099) (12.3.6)
077 048 5371/077 981 0537

## கண்ணீர் அஞ்சலி



பிரபல பொருளியல் ஆசிரியர்
**S. வரதராஜன்**
அவர்களின் இறப்புச் செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தி னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொருளியற் கல்லூரி
இயக்குநர், ஆசிரியர்கள், பணியாளர்கள்,
**பொருளியற் கல்லூரி** (சி/16097) (10.6)
யாழ்ப்பாணம் - இணுவில்

## துளசி மஹால் தொடர்மாடி வாடகைக்கு
நல்லூர்

நாள், கிழமை, மாத வாடகைக்கு துளசி மஹால் தொடர்மாடி வீடுகள் உண்டு.
சாப்பாடும் ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்படும்.
நல்லூர் உற்சவ தினங்களையொட்டி பக்த கோடிகளுக்கு கழிவு சலுகை வழங்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு: 071 328 6890 or 021 221 9539
(C/16056)(7.6.3)

யாழ் நகரில்...



கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி

BTEC HND in
- Quantity Surveying
- Civil Engineering

Leading to BSc (Hons) From UK

வார இறுதி வகுப்புகளும் ஆரம்பம்.

**Why** Choose
BCAS for **QS & Civil Engineering** ?

× நவீன கற்கை நெறிகளுடன் கூடிய பிரத்தியேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
× பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
× முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடை முறைப்பயிற்சிகள்
× RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
× £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
× தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
× கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
× 15 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.